தமிழ்த் தேசம்

# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 ஆணி / ஜூன் 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be

## தேசத்தின் குரல்:

# கிணறு வெட்டக் கிளம்பி வரும் பூதம்!



**"தமிழகத்தில் ஹைட்ரோகார்பன் திட்டங்களுக்கு அனுமதி வழங்காது!" என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.**

## உள்ளே...

1. தேசத்தின் குரல் -1
2. திருக்குறள் கட்டமைக்கும் தமிழ்த் தேச அரசு -4
3. நாம் தமிழர் கட்சிக்குச் சில வினாக்கள் (2) -17
4. அருள்தந்தை ஸ்டான்சுவாமிக்குப் பேராசிரியர் மருதமுத்து புகழஞ்சலி! -27
5. யமுனா இராசேந்திரன் பார்வையில் எஸ்.என். -31
6. செங்காட்டான் குறிப்புகள்- 34
7. தோழர்.இரா.ஜவஹர்-41
8. துயர்தணிப்பா, துயர்திணிப்பா? -46
9. உழவர் அரண் அறிக்கை -58
10. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (19) -60
11. பெருங்கடல்களும், பருவநிலை மாற்றமும் -84
12. அச்சுறுத்தப்படும் புவிக்கோளம் -92

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

கடந்த சூன்13 ஆம் நாள் ஐட்ரோகார்பன் திட்டங்கள் குறித்து தமிழ்நாடு முதல்வர் இந்தியத்தலைமையமைச்சருக்கு எழுதியகடிதத்தில்" ஐட்ரோகார்பன் ஆய்வுக்கும் ஆக்கத்துக்கும் தேவைப்படும் அனுமதிகளைத் தமிழ்நாடு அரசு ஒரு போதும் வழங்காது " எனத் தெரிவித்துள்ளார் .

தமிழக அரசின் இந்த நிலைப்பாட்டைக் கிஞ்சிற்றும் மதிக்காமல் அடுத்த இரண்டே நாளில் ஐட்ரோகார்பன் ஆய்வுக்கிணறுகளுக்கு எண்ணெய் இயற்கை எரிவாயு நிறுவனம்)ஒ என்ஜிசி ( சுற்றுச்சூழல் அனுமதி கோரியிருக்கிறது .



இவ்வகையில் அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் சுற்று வட்டாரத்தில் 10 கிணறுகளும் , கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி ,காட்டுமன்னார்கோயில் உள்ளிட்ட பகுதியில் 5 கிணறுகளும் அமைக்கவேண்டும் என்பது ஒ.என்.ஜி.சி.யின் திட்டம்.

ஐட்ரோகார்பன் ஆய்வுக் கிணறுகள் அமைப்பதற்காக சுற்றுச்சூழல் அனுமதி கோரி ஓ.என்.ஜி.சி நிறுவனம் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் மதிப்பாய்வு ஆணையத்துக்குக் கடிதம் எழுதியுள்ளது.இது பொதுமக்களுக்கும் சுற்றுச் சூழல் ஆர்வலர்களுக்கும் அதிர்ச்சியளித்துள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு பெற்ற உரிமத்தின் அடிப்படையில் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆனால் அதன் பிறகு, 2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காவிரி வேளாண் பாதுகாப்பு மண்டலச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, கடலூர், திருச்சி, கரூர், அரியலூர் ஆகிய 8 மாவட்டங்களையும் முழு அளவில் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்துக்குள் கொண்டு வர வேண்டுமென்று மீத்தேன் எதிர்ப்புக் கூட்டமைப்பு மாநில அரசிடம் கோரிக்கை வைத்து வருகிறது.

ஆனால் இப்போதுள்ள படியே கூட காட்டுமன்னார்கோயில் வட்டம் காவிரி வேளாண் பாதுகாப்பு மண்டலத்தில் அடங்கும். இந்தப் பகுதியில் ஒ.என்.ஜி.சி. மேற்கொண்டுள்ள முயற்சி சட்டப் புறம்பானது. இது தமிழ்நாட்டின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்குவதாகும். மேலும் சென்ற சட்டப்பேரவைத் தேர்தலில் ”தமிழ்நாட்டில் மீத்தேன், ஐட்ரோ கார்பன் திட்டங்களை அனுமதிக்க மாட்டோம்” என்ற வாக்குறுதியைத் தந்து வெற்றி பெற்றுள்ளது.

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறையின் கீழ் இயங்கும் மாநில சுற்றுச்சூழல் மதிப்பாய்வு ஆணையம் உடனடியாக ஓ.என்.ஜி.சி அளித்துள்ள இந்த விண்ணப்பத்தை ம்றுதலிக்க வேண்டும் எனக் கோருகிறோம்.
இந்திய அரசே அனுமதித்தாலும் ,தமிழ்நாடு அரசு இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்காது என்பதில் தமிழக உறுதியாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாட்டு மக்கள் நடத்திய போராட்டங்களின் விளைவாகவே மீத்தேன், ஐட்ரோகார்பன் திட்டங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. காவிரி வேளாண் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டதும் மக்கள் போராட்டங்களின் விளைவே ஆகும்.

தமிழக மக்கள் விழிப்போடிருந்து காவிரி வேளாண் பாதுகாப்பை முழுமை செய்ய வேண்டும்.


ஒ.என்.ஜி.சி பெயரில் தமிழ்நாட்டின் வேலி தாண்ட மோதி அரசு செய்யும் கெடுமுயற்சிகளை முறியடிக்க வேண்டும் என அறைகூவி அழைக்கிறோம்!


# திருக்குறள் கட்டமைக்கும் தமிழ்த் தேச அரசு

(*திருக்குறள்- தமிழ்த் தேசிய அரசியல் நூல்* என்ற நூலிலிருந்து)

---பேராசிரியர் **மருதமுத்து**---

**(1)**





*வேத-வர்ணக் கருத்தியலையும், அறிவியலையும், அரசியலையும் எண்ணற்ற நூல்கள் மூலமும் சடங்குகள், குறியீடுகள் மூலமும் அரசரிடமும், மக்களிடமும் கொண்டுசெல்லக் கட்டுக்கோப்பான ஒரு அறிவுச் சாதியார் ஒற்றுமையுடன் பெருமுயற்சி செய்து கொண்டிருந்த காலத்தில் திருவள்ளுவர் தம் தத்துவப் புரட்சியை நடத்தினார்.தமிழ்மொழியை நம்பி, தமிழ் அரசரையும் மக்களையும் நம்பி. பல முனைகளில் நடத்தப்பட்ட தாக்குதலை ஒரே நூல்மூலம் எதிர்கொள்ள முடிவெடுத்து எழுதியதால்தான் திருக்குறளின் அமைப்பும் யாப்பும் தனிச் சிறப்பான தன்மையோடு உள்ளன எனக்கருதுகிறேன்.*

*அதன்மேலோட்டமான எளிமை காரணமாகவும், சுருங்கிய வடிவம்*

*காரணமாகவும் அதன் முழு ஆழத்துக்கும் செல்வது கடினமானதாக அமைகிறது.*

*இல்லையேல் பரிமேலழகர் உரைதான் சிறந்தது எனும் கருத்து வலிமை பெற்றிருக்க வாய்ப்பில்லை.*

*திருக்குறள் படிப்பவர்க்குத் தக்கவாறு பொருள் தரக்கூடியது என்ற தவறான கருத்து பலரைக் கவர்ந்துள்ளது.அதிலும் பின்-நவீனம் போன்ற போலித் தத்துவப் பார்வைகள் மேலோங்கிவிட்ட இன்றைய அகவயமான (subjectivist) சிந்தனைச் சூழலில் திருக்குறளை வைத்து ஒரு “சொல்லாடல்” விளையாட்டுப் போட்டி நடத்துவதால் சிலருக்கு சுகம் உண்டாகிறது.*

*இவர்களை நாம் பொருட்படுத்தவேண்டியதில்லை.ஆனால் அறிஞர் ச.தண்டபாணி தேசிகர் அவர்கள் கூட திருவள்ளுவர் அவ்வப்போது பல்வேறு விடயங்கள் பற்றி எழுதியவற்றைப் பல வண்ண மலர்களாகப் படைத்துத் தொகுத்தாரோ எனத் தமது ஐயப்பாட்டை வெளியிட்டுள்ளார்.இத்தகு கருத்துகளைப் பார்க்கையில் இன்றுவரை நிகழ்ந்துள்ளகுறள் ஆய்வின் போதாமை வெளிப்படுகிறது.*

*வேறுபட்ட பல துறைகளை ஓரளவு பயினறதாலும், உலக அளவில் அண்மைக்கால ஆய்வுகளை ஒருவாறு தேடி அறிந்ததாலும், இவற்றுடன் கூட எந்தச் சமூக மேம்பாட்டுக்காகவும், உய்வுக்காகவும் வள்ளுவப் பேராசான் போர் செய்தாரோ அதே தமிழ்ச் சமூகத்தின் அடிநிலை மக்கள் மத்தியில் நெடுங்காலமாகத் தொண்டாற்றிப் போராடியும் வந்ததால்தான் நான் வள்ளுவத்தின் ஆழம் பற்றி எழுதத் துணிந்தேன். இதில் அண்ணல் அம்பேத்கரை எனது முன்னோடியாகக் கொண்டேன்.*

*இனி திருக்குறள் அமைப்பை ஊன்றிப் பார்ப்போம்.*

*திருவள்ளுவரின் மெய்யியல் குறித்த கொள்கை துறவறவியலின் இறுதிப் பகுதியில் அமைந்துள்ளது. இது குறித்த விளக்கத்தை நான் முன்னம் ஒரு கட்டுரையில் தந்துள்ளேன். (மருதமுத்து, "திருக்குறளில் சமணமா?", கட்டுரை, " கணையாழி" ஏடு, ஆகஸ்ட், 1996; மறுவெளியீடு: "வள்ளுவம்", ஆய்வேடு, மே-சூன்,1999)*

*ஈழத் தமிழரும் பேரறிஞருமான பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை (சமயத்துறை, அரிசோனா பல்கலைக் கழகம், அமெரிக்கா) அவர்களும் இதே கருத்தை வெளியிட்டுள்ளார். (ஆ.வேலுபிள்ளை, "தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்", பாரி., மூன்றாம் பதிப்பு, 1985, பக்கங்கள்: 62,63). இவரும் இந்த நூற்பகுதியில் தான் வள்ளுவரின் பெய்யியல் கோட்பாடுகள் அமைந்துள்ளன என்கிறார்.*

*ஆனால் அறிஞர் வேலுப்பிள்ளை திருவள்ளுவரின் மெய்யியலில் சமண தத்துவத்தைக் காண்கிறார்.இது முற்றிலும் தவறாகும்.வினை நீங்குதலே சமணத்தின் இறுதியான மெய்யியல் இலக்கு. புத்தரின் இலக்கோ அவா அறுத்தல் என்பது.அத்துடன் "மனத்துக்கண் மாசிலன் ஆகுதல்" என்பதும் புத்தரால் வலியுறுத்தப் பட்ட அடிப்படைத் தத்துவம்.ஆனால் சமணர்க்கு இவ்வாறு மனத் தூய்மை மட்டும் போதவே போதாது.வினைத் தூய்மையே தலையாயது.*

*செய்கையில் குறைபாடுகள் வரும், செய்பவனது நோக்கம் மாசற்றதாக இருப்பதுதான் முக்கியம் என்ற புத்தரின் நிலைப்பாடு இல்வாழ்வார்க்கு ஏற்ற தத்துவம், (importance of integration).*

*மகாவீரர் ஒவ்வொரு செய்கையிலும் இம்சை தவிர்க்கப் படவேண்டும் என்று தீவிரமாக வலியுறுத்தியவர்.எனவே சமணத்தில் துறவோர் (படிமையோர்) மட்டுமே ஈடு இணையற்றவர்கள்.இது இல்வாழ்வாரை*

*வெறும் பக்தி நிலைக்குத் தள்ளுவதாகும். "வினைநீக்கமா, அவா அறுத்தலா?" என்ற கேள்வி மூலம்தான் சமணர் வழியா, புத்தர் வழியா என்று தெளிய முடியும்.*

*திருவள்ளுவரின் நிலைப்பாடு என்ன?*

*அறத்துப்பாலில் துறவறவியலின் இறிதிப் பகுதி நான்கு அதிகாரங்களைக் கொண்டதாக அமைக்கப் பட்டுள்ளது:*

*"நிலையாமை", "துறவு","மெய்யுணர்தல்", "அவா அறுத்தல்" ஆகிய நான்கும் உள்ளார்ந்த தொடர்புகளோடு, தொடர்ச்சியாக ஒரு தத்துவ முழுமையைத் தருகின்றன.*

*"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்",*

*என இந்த மெய்யியல் பகுதி முடிகிறது. (இதற்கடுத்த ஊழ் அதிகாரம் உலகை இயக்கும் பொது விதி பற்றியதாகத் தனி நிலையில் வைக்கப்பட்டுள்ளது.)*

*ஆக பார்ப்பனிய உரையாசிரியர் பரிமேலழகரும், சைவர்களும், சமணர்களும் உரிமை கொண்டாடுவது போல் திருவள்ளுவர் இந்தப் பிரிவினர் எவருடைய சமய தத்துவத்தையும் ஏற்றவர் அல்ல."சரி, யாருக்கும் வேண்டாம், பொதுவான தத்துவம் படைத்தார் என்று வைத்துக் கொள்வோம்", என்று பேசும் சிலரும் தந்திரமாக புத்தரை விலக்கி வைத்துவிட்டால் போதும் என்று நினைத்தே அவ்வாறு பேசுகிறார்கள்.ஏன் எனில் புத்தரின் வர்ண-சாதிமறுப்புக் கொள்கையை அன்னார் கடுமையாக வெறுக்கிறார்கள்.இப்படி வெறுப்போருள் பார்ப்பார் அல்லாத மேல்சாதியினரும் அடங்குவர்.*

*ஆனால் திருக்குறளில் மெய்யியல் பகுதி மிக வெளிப்படையாகவும் தெளிவாகவும் உள்ளது.*

*நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் ஆகிய நான்கையும் புத்தரின் வாழ்க்கையின் முக்கியமான நான்கு கட்டங்களாகக் காணமுடியும். இளவரசன் சித்தார்த்தன் நிலையாமைத் துன்பத்தைக் கண்டான். அதற்குக் காரணம் என்ன, தீர்க்க வழி உண்டா என்ற கேள்விகளுக்கு விடை காணத் துறவு பூண்டான். தேடினான். சுய ஒறுத்தலும், தீவிரமான மெய் வருத்தலும் பயன் தரவில்லை. சமணர் வழியை ஒதுக்கினான்.அறிவுவழியில் ஆராய்ந்து மெய்யுணர்வு எய்தினான். காமம், வெகுளி, மயக்கம் எனும் மூன்றையும் விட்டு விடுதலை பெற்றான்.*

*தன் விடுதலையோடு நிறுத்திக் கொள்பவன் சுய நலத்தை உண்மையில் துறந்தவனாக இருக்கமுடியாது  என்று கண்டு, பிறர் நலம்பெற உழைப்பதே கடமை எனக் கொண்டு, தான் அறிந்த பேருண்மைகளை மறையாக மறைத்து வைக்காமல் அவற்றை அனைத்து உயிர்களும் அறிந்து நன்மை பெற வேண்டிக் கால மெல்லாம் பாடுபட்டான்.*

*இதுதான் திருக்குறள் காட்டும் மெய்யியல்.*

*பிட்சுக்களிடமும் பௌத்த சங்கங்களிடமும் தன் சிந்தனையை ஒப்படைக்காதவரான திருவள்ளுவர் நேரடியாக புத்தரிடமிருந்தே இந்த அடிப்படை மெய்யியலையும் அறிவியலையும் பெற்றுள்ளார்.*

*அக்காலத்தில், புத்தரைப் பின்பற்றியோர் பல்வேறு குழுக்களாகத் தமக்குள் பிரிந்து கிடந்தார்கள் என்றும், அந்தக் குழுக்களுக்குள் பிட்சுகளுக்குக் கொடுக்கவேண்டிய இடம் குறித்தும், இல்லறவாழ்வின் முக்கியத்துவம் குறித்தும் கடுமையான முரண்பாடுகள் இருந்தன என்றும் வரலாற்று*

ஆதாரங்கள் கூறுகின்றன. திருவள்ளுர் இந்தக் குழுக்களின் உள்முரண்பாடுகளில் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை என்பதை அவரது நூல் வெளிப்படுத்துகிறது.

புத்தர் கோரியபடி சொந்த அறிவைக்கொண்டு அவரது போதனைகளை சோதித்து அறிய முற்பட்ட திருவள்ளுவர் போன்ற பெரியோர் அன்று ஓரிருவர் இருந்துள்ளனர். நான் முன்பே குறிப்பிட்டது போல பேரரசன் அசோகன் கூட அப்படித்தான் புத்தர் கொள்கைகளை அணுகினான். அவனது அரசின் பொதுதர்மப் பார்வை பிட்சுக்களால் வடிவமைக்கப் பட்டதல்ல. அப்படி அவர்களுக்குக் கீழ்ப் பட்டிருந்தால் அவர்களில் ஒருபிரிவினர் தீவிர நிலை எடுத்து பிற மதங்களை ஒடுக்குமாறு அந்தப் பேரரசனைத் தூண்டியிருப்பர்– இலங்கை பிட்சுக்கள் பலரைப்போல.

ஆக, “யான், எனது” என்னும் செருக்கை அறுக்கும் நிலையாமைத் தத்துவம், முற்றுண்மை தேட முயலும் “ முயல்வாரின்” துறவு, முயன்று எய்தும் மெய்யறிவு நிலை,அந்த அறிவினால் உந்தப்பட்டு அவா நீக்கல்--- இது தான் இளவரசன் சித்தார்த்தன் புத்தனான மார்க்கம். இது தான் திருக்குறளின் மெய்யறிவுக் கொள்கையும்.

துறவறவியலில் தாம் விளக்கும் கொள்கைக்கு ஒரு மனித உருவம் தந்து தமது நூலின் முதல் அதிகாரத்தில் வைத்துள்ளார் திருவள்ளுவர். அந்த மனிதனைக் கடவு நிலையில் கடவுளாகவும் காட்டிப் போற்றுகிறார்.அவனை அரசும் மக்களும் போற்றுவதோடு “வழிபடவும்” வேண்டும் என்கிறார்.வழிபடுதல் என்பதும் வழிப் படுதல் என்பதும் ஒரே பொருள் கொண்டிருப்பதை தமிழ் லெக்சிகன் மூலம் அறியலாம்.

ஆக திருவள்ளுவர் காட்டும் கடவுள் ஆதி பகவனாம் புத்தன் என்று அறிகிறோம்.தமிழ்க்குடிகள், குறிப்பாகத் தமிழக் அரசர் அந்த அறிவனின் அறிவுவழிச் சென்று பொது அறத்தை நாட வேண்டும் என்பது அவரது

போதனை.

வள்ளுவர் பிரானின் இந்த நிலைப்பாடு அன்றைய தமிழகத்தை ஆரம்பத்திலேயே பகைவர் நாடாகக் கருதிய சிங்கள தேரவாத பிட்சு சங்கத்தார்க்கு முற்றிலும் எதிரானதாகும்.

திருவள்ளுவர் காலத் தமிழகத்தில் இலங்கையின் தென்புறத்தில் சிங்கள சிற்றரசர்கள் பிட்சுக்களின் முழு ஆதரவோடு புதிய அரசு ஒன்றை உருவாக்கி, விரிவாக்கம் செய்ய கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். இதை ஒரு கட்டத்தில் சோழமன்னர்கள் வன்மையாக எதிர்த்து முறியடித்தனர் என்பதையெல்லாம் சிங்கள பௌத்த நூல் மகாவம்சத்தின் மூலம் அறியலாகும்.

வடஇந்தியாவில் சாம்ராச்சியம் உருவாகிவிட்ட காலகட்டத்தில், தமிழகத்துக்குத் தென்புறம் இலங்கையில் அனுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு இன்றைய ஈழம் உள்ளிட்ட பெரு நாட்டை சோழவம்சத்தினர் ஆண்டுவந்தனர்.அதற்குச் சிறிதுகாலம் முன்பாக வடநாட்டிலிருந்து புதிதாகச் சென்று இலங்கையின் சிலபகுதிகளில் குடியேறியிருந்த ஆரியச் சிறுபான்மையினர் சோழர்களை வென்று தங்கள் அரசை அனுராதபுரத்தில் நிறுவப் பெருமுயற்சி செய்த காலம் அது. அப்படி ஒரு சிங்கள அரசு உருவாவதைத் தமிழ்நாட்டில் ஆண்டிருந்த சோழர்கள், பாண்டியர்கள் இருவருமே பெரும் அபாயமாகக் கணித்தனர்.ஆனால் இருவரும் ஒருமனதாகத் தொடர்ந்து செயல்படவில்லை.மூவேந்தரும் இணைந்த ஒரே தமிழக அரசு என்று ஏற்பட்டிருந்தால் மட்டுமே சிங்களர் வலிமையைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

இத்தகைய பகைச் சூழல் காரணமாக புத்தர் பற்றிய தமிழகம் வாழ் பௌத்தரின் பார்வைக்கும் சிங்கள அரசை உருவாக்க முயற்சி செய்த

*பௌத்த சங்கத்தார் பார்வைக்கும் கடும் முரண்பாடு நிலவியது. தமிழகத்தின் புத்தர்கொள்கையினர் புதுச்சேரிப்பகுதி, பூம்புகார், நாகப்பட்டினம் போன்ற சில துறைமுகம் சார்ந்த பகுதிகளில் மட்டுமே இருந்தனர் எனலாம்.இவர்களின் தத்துவம் சிங்கள பிட்சு சங்கத்தினரின் நிலைப்பாட்டுடன் முரண்பட்டதாக இருந்திருக்கிறது.*

*சிங்கள தேரவாத பிட்சுக்கள் இந்திய பிராமணர் போலவே அரசைத் தங்கள் இரும்புப் பிடிக்குள் வைத்திருக்க ஆரம்பமுதல் பாடுபட்டனர்.தேரவாத பௌத்தம் என்பது மதவாத புரோகித ஆதிக்கத்தை சமூகத்திலும், அரசிலும் நிறுவும் நோக்கம் கொண்டது. வட இந்தியாவில் புத்தரின் மரணத்துக்குப் பிறகு புத்த இயக்கத்தினர் மத்தியில் முதல் பெரும் பிளவு ஏற்பட்ட போதுதான் இந்த தேரவாதம்(ஸ்தவிர வாதம்) உருவானது. அசோகருக்கு முன்பே இந்தப் பிளவு தோன்றிவிட்டது. புத்த இயக்கத்தார் நடத்திய மாநாடு ஒன்றில் பெரும்பான்மையானவர்களின் முடிவுக்கு எதிராக சிறுபிரிவினரான பிட்சுக்கள் தங்கள் சிறப்பு அதிகாரத்தை நிறுவும் நோக்கத்தில் மார்க்கவிதிகளை இறுக்கமாக மாற்ற முனைந்தபோது இல்வாழ்வார் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றிருந்த அன்றைய புத்த சங்கத்தில் இந்த புரோகிதத் தனமான சதி முறியடிக்கப்பட்டது. அந்த மாநாட்டுக்கு வந்திருந்த ஏராளமான இல்வாழ்வினர் துறவுகளின் ஆதிக்க முயற்சியை முளையில் கிள்ளினர்.இதனால் புத்த சங்கம் இரண்டாக உடைந்தது. பெரும்பான்மையினர் தங்கள் அமைப்பை மகாசங்கிக அமைப்பு ( பெரும்பான்மையினர்) என்று அறிவித்தனர். தம்மை அடக்கியாள முயன்ற தேரவாதி பிட்சுக்களை இவர்கள் ஈனயானிகள் (சிறிய மார்க்கம்) என அழைக்கலாயினர். (இந்த இயக்கப் பிளவும் பெயர்களும் ரஷ்யப் புரட்சி வரலாற்றில் போல்ஷ்விக் மென்ஷ்விக் பிளவை நினைவுபடுத்துகின்றன.)*

*மகாசங்கக் கொள்கைப்படி புத்தர் இறைநிலையில் வைத்துப்*

போற்றப்படலானார். அவர் மெய்யறிவு எய்திய ஒரு மனிதர் மட்டுமே என்று கூறிய தேரவாத பிட்சுக்களின் நிலைப்பாடு உண்மையில் பகுத்தறிவுக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தால் அல்ல.மாறாக "புத்தரும் ஒரு மனிதர்தான். பிட்சுக்களாகிய எங்களை ஒத்தவர்தான்; பிட்சுக்களாகிய நாங்களும் புத்தர் போலவே அதி உன்னத நிலையை எய்தக் கூடியவர்களே; எனவே அரசும், இல்வாழ்வோரும் மற்றோரும் எங்களுக்கு முற்றிலும் கீழ்ப்பட்டு நடக்கவேண்டும்". என்று வலியுறுத்துவதே அந்தத் தேரவாதிகளின் அரசியல் உள்நோக்கம்.

இதை உணர்ந்த மகாசங்கத்தவர்கள் புத்தரின் கடவு நிலையை– ஆதி பகவன் எனும் "தனக்குவமை இல்லாதான்" நிலையை– வலியுறுத்தினர்.

இதை மேலும் உறுதி செய்து தேரவாத பிட்சுக்களின் ஆதிக்கப் போக்கை அம்பலப்படுத்தவேண்டி இன்னொரு முக்கியக் கோட்பாட்டையும் மகாசங்கத்தவர் முன்வைத்தனர். இதன்படி புத்தர் காட்டிய வழியில் சென்று அவா அறுத்தல் எனும் இறுதி நிலை எய்தி அரஹந்த் (வடமொழியில், "அர்ஹத்"' தமிழில் "அருகதர்">"ஆருகதர்") எனும் சிறப்புநிலை எய்திய பிட்சுக்கள்கூட குறைபாடு கொண்டவர்களாக இருத்தல் கூடும் என்று மகாசங்கத்தினர் வரையறுத்தனர். இந்த வரையறுப்பின் படி, தலைசிறந்த அரஹந்த நிலை எய்தினாலும் ஒரு பிட்சுவால் புத்தருக்கு இணையாக மாற முடியாது; ஒரு பிட்சு ஒருபோதும் கடவு நிலைக் கடவுள் இடத்தை அடையமுடியாது; ஆதி பகவனின் அடிசேர்ந்தார் என்று தான் ஆகமுடியும். இப்படி பிட்சுவின் இடத்தை இறைக்குக் கீழே வைப்பதன் மூலம், இல்வாழ்வாரும் அரசும் கூட இறைவன் பார்வையில் பிட்சுவுக்கு சமம் என்ற கொள்கையை மகாசங்கிக இயக்கத்தார் நிலைநாட்டினர். ("Six World Faiths"–ed. W. Owen Cole, Continuum Publishers, 2004; " Buddhist Sects in India"- by NalinakshaDutt, MotilalBanarsi-dass, 1978; " Buddhist sects and sectarianism"-by BibhutiBaruah, Sarup&Sons, 2000; "Mahasanghika" at Britannica.com & Wikipedia)

இந்த மகாசங்கிகக் கடவுட்கொள்கையை சிங்கள தேரவாத புத்த பிட்சுக்கள் தீவிரமாக எதிர்த்துப் போராடினர்.

திருவள்ளுவர் இந்த மகாசங்கிகக் கொள்கையைத்தான் அரசுக்கும், இல்லற வாழ்வுக்கும், குடிகளுக்கும், ஒட்டுமொத்த தமிச்சமூகத்துக்கும் அவசியமானது என்று கருதி அதனையே திருக்குறளின் கடவுள்வாழ்த்து அதிகாரத்திலும், நீத்தார் பெருமையிலும் போதித்துள்ளார்.

இவ்வாறு புத்தர் மட்டுமே தனக்குவமையில்லாத தேவன் என்று போதித்து சிங்கள தேரவாதச் செருக்கை அடக்குகிறார் வள்ளுவர்பிரான்.

அடுத்து அவர்களின் ஆதிக்கப் போக்கை அடக்கும் நோக்கம் அவருக்கு இருந்ததை நீத்தார் பெருமை என்ற அதிகாரத்திலும் காணமுடிகிறது. இதன் முதலாவது குறட்பாவிலேயே இந்த அதிகாரம் யாரை குறித்தது என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு."

நூல்சிறப்பு வேண்டுவோர் ஒழுக்கத்து நீத்தாரின் பெருமையை முதற்கண் போற்றவேண்டும் என்பது இதன் பொருள்.

பிற்பாடு துறவியலில் "தவம்" என்ற தலைப்பில் பொதுப்படையாக சிறப்பிக்கப்படும் சமணர்,ஆசீவகர், பார்ப்பனமுனிவர் போன்ற பல்வகைத் துறவிகள் பற்றியதல்ல இந்த "நீத்தார் பெருமை".

இந்த இரண்டாம் அதிகாரத்தின் முதல் குறட்பாவில் குறிப்பிடப்படும் ஒழுக்கத்து நீத்தார் யார் என்பதற்குரிய குறிப்பு நூலின் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்திலேயே உள்ளது:--

*"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடு வாழ்வார்."*

*புலன் வென்று முற்றறிவாளனாக, இறையாக உள்ள பகவனின் ஒழுக்க நெறியில் செல்வோர் நீடு வாழ்வார்.*

*எனவே கடவுள் வாழ்த்தில் போற்றப்படும் கடவுளின் நெறியே திருவள்ளுவர் போற்றும் ஒழுக்கநெறி.*

*அத்தகைய நெறி நிற்கும் துறவோருள் சிறந்தோர் நீத்தார் அல்லது அரஹந்தர் இது புத்தர் இயக்கத்தோர் அனைவரும் பொதுவாக நம்பிய கோட்பாடு வள்ளுவர் பிரானுக்கும் ஏற்புடையது.*

*ஆனால் சிங்கள தேரவாத பிட்சு சங்கத்தார் கொள்கைக்கு மாறாக திருவள்ளுவர் கொள்கை அமைந்தது. அவர் நம்பிக்கைப்படி அரஹதர் என்பார் எவரும் புத்தருக்கு நிகரில்லை, அடுத்த நிலையிலும் இல்லை அவர்களிடமும் குறை இருக்கும். அவர்கள் இறை நிலை அடைந்தோர் இல்லை; அடையவும் முடியாது.*

*அரஹதரை தலைமையிடத்தில் வைக்க மறுக்கும் இந்த மகாசங்கிகக் கோட்பாட்டை வள்ளுவர்பிரான் தெளிவாக வலியுறுத்தும் குறட்பா ஒன்று அவரால் திட்டமிட்டு இயற்றப் பட்டுள்ளது. அது இதுவே:*

*"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி*
*கணமேயும் காத்தல் அரிது."*

*அதாவது நீத்தார் நிலை எய்திய மேம்பட்ட துறவோரிடமும் கணநேரமாவது வெகுளி தோன்றி மறையக்கூடும்.*

*கண நேரமேயானாலும் வெகுளி தீயதே.*

*இதனை அடுத்த அதிகாரத்திலேயே (அறன் வலியுறுத்தல்) வலியுறுத்துகிறார்:*

*"அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்" என்றார் பெருமான். அவ்வாறு நீத்தார்க்கும் சிறிது வெகுளி*

*தோன்றுமானால் அத்துடன் சிறிது அவாவும் பிறகுறைகளும்கூட விளையவே செய்யும். இது உட்கிடை. அதாவது நீத்தாரும் தவறிழைத்தல் உண்டு.*

*இப்படி நுட்பமாக ஒரு முக்கியக் கருத்தை முதலிலேயே அறிவித்துள்ளதற்கு திருவள்ளுவரின் அரசியல் நிலைப்பாடே காரணம்:--*

*புத்தரின் இடத்தை வேறு எவர்க்கும் கையளிக்க முடியாது. இறைவனின் பிரதிநிதியாக நீத்தார் ஏகபோக உரிமை கொண்டாட முடியாது. அவர்களும் இல்வாழ்வோர் போல பொதுவான அரசுக்குக் கீழடங்கி பொது ஒழுக்க நெறி நின்று நீடுவாழட்டும்.*

*இவ்வாறு, வள்ளுவரின் புத்தம் சிங்களபிட்சுக்களுக்கு முற்றிலும் எதிரானதாக உள்ளது. அவர்களின் அரசியல் மேலாதிக்க ஆசைக்கு எதிராக உள்ளது.*

*புத்தரை முற்றாக அறிந்து தெளிந்து அவர் வழியில் உலகு செல்லுமாறு பொருள் கண்டு போதித்தவர் தமிழ் வள்ளுவரே. புத்தரை முற்றிலுமாகத் திரிபு செய்து பிட்சுக்களின் அரசியல் ஆதிக்கக் கருவியாக மாற்றி வெறும் பொம்மையாக்கியது தேரவாதமும் , சிறப்பாக சிங்கள பிட்சுக்களுமே.*

***(தொடரும்)***

# *நாம் தமிழர் கட்சிக்குச் சில வினாக்கள் (2)*

*--- தியாகு---*




உரிமைத் தமிழ்த் தேசம் ஏப்ரல் இதழில் நாம் தமிழர் கட்சிக்குச் சில வினாக்கள் தொடுத்திருந்தோம். அந்த வினாக்களோடு முடித்துக் கொள்ளவே விரும்பினோம். ஆனால் நாம் தமிழர் கட்சியின் புதிய ஆவணம் ஒன்றை நண்பர்கள் அனுப்பியுள்ளார்கள்.

"காலத்தின் தேவை / முழுமையான மாநில சுயாட்சியின் கீழ் / இறையாண்மையுள்ள நாம் தமிழர் அரசு "என்ற ஈர்ப்பான தலைப்பில் இந்தப் புதிய ஆவணம் சொல்லும் செய்திகள் கருத்துக்குரியவை. முழுமையான சுயாட்சி! இறையாண்மையுள்ள அரசு! இது வரவேற்கத்தக்க சிந்தனை!

# காலத்தின் தேவை

## முழுமையான மாநில சுயாட்சியின் கீழ் இறையாண்மையுள்ள நாம் தமிழர் அரசு!

### இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் 370

- முழு மாநில சுயாட்சியை நிலைநிறுத்திடவும், தேசிய இனங்களின் உரிமைகளைப் பெற்றிடவும், தமிழ்நாட்டு அரசின் இறையாண்மையைக் காத்திடும் வகையிலும் இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 370 ஐப் போன்றதொரு சட்டத்தை தமிழ்நாட்டிற்கு உருவாக்கிட அனைத்து வழிகளிலும் நாம் தமிழர் அரசு உறுதியான, தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுக்கும்.

- இதனைப் பெறுவதன் மூலம் இந்திய ஒன்றிய அரசின் சட்டங்கள் எவையும் தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது; மேலும் தமிழ்நாட்டிற்கான அரசியலமைப்புச் சட்டத்தை தமிழ்நாட்டு சட்டமன்றமே உருவாக்கிக் கொள்ளும் உரிமையும், நாம் தமிழர் அரசு உருவாக்கிய தமிழ்நாட்டிற்கான கொடிக்கும் இந்திய ஒன்றிய அரசியலமைப்பின் சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடைக்கப்பெறும்.

### மாநில, ஒன்றியப் பட்டியல்

- இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டத்தின் பட்டியல் 7 இல் உள்ள பொதுப்பட்டியல் முழுதாக நீக்கப்படும்;

- ஒன்றியப் பட்டியலில் உள்ள வெளியுறவுத்துறை, பாதுகாப்புத் துறை, இந்திய ரிசர்வ் வங்கி, தொலைத்தொடர்பு ஆகியவைத் தவிர மற்ற ஏனைய விவகாரங்கள் அனைத்தும் மாநிலப் பட்டியலுக்கு முழுதாக மாற்றப்படும். இதன் மூலம் மாநில நலன் சார்ந்த அனைத்திற்கும் சட்டமியற்றி முடிவெடுக்கும் முழு அதிகாரமும் மாநில அரசின் வரையரைக்கு உட்பட்டதே என்ற நிலை உருவாக்கப்படும்.

- இதற்கான ஒத்த கருத்துள்ள, மாநில உரிமைகளின் மேல் அக்கறை கொண்ட, இழந்த மாநில உரிமைகளை மீட்கும் எண்ணம் கொண்ட ஏனைய மாநில அரசுகளுடன், பிற சகோதர தேசிய இனத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இந்திய ஒன்றிய அரசியலமைப்பில் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள நாம் தமிழர் அரசு முழு முயற்சிகளை எடுக்கும்.

### இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் 371

- இறையாண்மை கொண்ட முழு மாநில சுயாட்சிக்கான நிரந்தரத் தீர்வாக இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் 370 ஐப் போலானதொரு சட்டத்தைப் போராடிப் பெறும் வரையில் குறுகிய கால அவசரத் தேவையாக இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 371 ன் கீழ் சில மாநிலங்கள் ஏற்கனவே பெற்றுள்ளதைப் போல தமிழ்நாட்டிற்கான உடனடித் தேவையாக உள்ள கல்வி, மருத்துவம், வரி விதிப்பு, வேளாண்மை, சுற்றுச்சூழல் உள்ளிட்ட குறிப்பிட்டத் துறைகளில் இயற்றப்படும் சட்டங்கள், விதிகள் தொடர்பான சிறப்பு அதிகாரங்களைப் பெற்று மாநில உரிமைகளைப் பேணிக் காத்திடும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ள நாம் தமிழர் அரசு உடனடி நடவடிக்கை எடுக்கும்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

முழுமையான சுயாட்சியின் கீழ் இறையாண்மையுள்ள அரசமைக்க இந்த ஆவணம் மூன்று வழிகள் காட்டுகிறது: (1) இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் 370; (2) மாநில, ஒன்றியப் பட்டியல்; (3) இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் 371.

ஆக ,இந்திய அரசமைப்புக்கு உட்பட்டுத் தமிழ்நாட்டின் இறைமையை நிறுவது காலத்தின் தேவை என்று நாதக நம்புகிறது. இதற்கான சட்ட வழிவகைகளையும் முன்மொழிகிறது. நம்மால் வழிமொழிய முடியுமா ?பார்ப்போம்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 370 என்பது என்ன?
இந்திய அரசமைப்பின் பகுதி XXIஇன் தலைப்பு" நிலையல்லாத ,நிலைமாற்ற ,சிறப்பு வழிவகைகள் " என்பதாகும். இந்தப் பகுதியில் காசுமீரத்துக்கான இடைக்கால வழிவகை என்ற பெயரில் இடம் பெறுவதுதான் உறுப்பு .370 இந்த370 ஆம் உறுப்பை நம்பி இந்திய அரசமைப்புக்குள் தமிழ்நாட்டின் இறைமையை நிலைநாட்ட முடியும் என்று நாம் தமிழர் கட்சி நம்புவதால் ,அதன் பின்னணி , உள்ளடக்கம் ,நிகழ் தகுநிலை ஆகியவற்றைப் பார்க்க வேண்டும்.

தோழர் நலங்கிள்ளி எழுதியுள்ள" உறுப்பு :370 காசுமீரத்தின் உரிமை முறியா ?அடிமைப் பொறியா "?என்ற குறுநூலை நாம் தமிழர் கட்சித் தோழர்கள் படிக்கப் பரிந்துரை செய்கிறேன். சற்றே விரிவாக" காசுமீரம் யாருக்கு "?என்ற தலைப்பில் நான் எழுதியுள்ள நூலையும் படிக்கலாம்.
சுருக்கமாகச் சொல்கிறேன்: இந்திய விடுமைக்கு முன் இந்தியாவின் வடக்கில் அல்லது இந்தியாவுக்கு வடக்கே ஒரு குறுநில (சமத்தான) அரசாக இருந்த சம்மு-காசுமீரத்தில் பெரும்பான்மை மக்கள் முசுலீம்கள். மன்னர் அரிசிங் இந்து. இந்தியாவும் பாகிஸ்தானும் விடுமை பெற்ற பின் காசுமீரம் எந்த நாட்டுடன் இணைவது ?அல்லது தனிநாடாக நீடிப்பதா ? என்ற சிக்கல் எழுந்தது.

1947 செப்டெம்பரில் அரிசிங்கின் மன்னராட்சிக்கு எதிராகப் பெரும் போராட்டங்கள் வெடித்தன. பாகிஸ்தான் ஆதரவோடு பத்தான் பழங்குடியினர் படையெடுத்து வந்தனர். மன்னர் அரிசிங் இந்திய அரசிடம் இராணுவ உதவி கேட்டார். இணைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுமாறு நேரு நிபந்தனை விதித்தார். அரிசிங்கை இணைப்புக்கு இணங்கச் செய்ய

ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கர் தூது சென்றார். 1947 அக்டோபர்26 ஆம் நாள் இணைப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டு விட்டு அரிசிங் காசுமீரத்தை விட்டு ஓடிப்போனார். இந்த இணைப்பு இறுதியானதன்று என்றும் ,காசுமீர மக்களின் விருப்பம் இல்லாமல் அது இறுதி செய்யப்படாது என்றும் இந்திய அரசு அறிக்கை விட்டது. காசுமீர் மக்களின் தலைவர் சேக் அப்துல்லா இடைக்கால அடிப்படையில் இந்த இணைப்பை ஏற்றுக் கொண்டார்.

காசுமீரம் தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே முதல் போர் மூண்டது. 1948 சனவரி முதல் நாள் ஐநா பாதுகாப்பு அவை தலையிட்டுப் போர்நிறுத்தம் செய்து வைத்தது. காசுமீரம் இந்தியாவுக்கா ?பாகிஸ்தானுக்கா ?என்பதைத் தீர்வு செய்யப் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் ஐநா தீர்மானம் இயற்றியது. ஆனால் வாக்கெடுப்பு நடத்துவதை சவகர்லால் நேரு தலைமை விரும்பவில்லை. வாக்கெடுப்பு நடத்தாமலே காசுமீரத்தை நிலையாக இந்தியாவுடன் இணைத்துக் கொள்ள காசுமீரப் பண்டிதர் நேரு எல்லா வகையிலும் முயன்று கொண்டிருந்தார்.

இந்தியாவுடன் காசுமீரத்தை இணைப்பதற்கான ஒப்பந்தப்படி பாதுகாப்பு, அயலுறவு, தொலைத் தொடர்பு தவிர்த்து வேறு எவ்வகையிலும் இந்தியா காசுமீரத்தில் தலையிடலாகாது. இந்த இணைப்பு ஒப்பந்தத்தைச் செயலாக்கும் சாக்கில்தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 1949 அக்டோபர் 17ஆம் நாள் உறுப்பு 370 சேர்க்கப்பட்டது.

என்ன சொல்கிறது 370?

1) சம்மு-காசுமீரத்துக்கான அரசமைப்புப் பேரவை ஏற்றுக் கொள்ளும் வரை இந்திய அரசமைப்புச் சட்டம் அங்கு பொருந்தாது.

2) இந்தியச் சட்டங்கள் சம்மு-காசுமீர அரசமைப்புப் பேரவையின் இசைவைப் பெற்ற பிறகே அம்மாநிலத்துக்குப் பொருந்தும்.

3) இந்திய அரசமைப்பின் முதல் உறுப்பு (முதல் விதி) சம்மு-காசுமீரத்துக்குப் பொருந்தும்.

4) இந்திய அரசமைப்பின் எட்டாம் அட்டவணை குறிப்பிடும் அதிகாரங்களின் பொதுப் பட்டியலின் கீழ் இயற்றப்படும் சட்டங்களுக்கு சம்மு-காசுமீர் அரசாங்கத்தின் இசைவு தேவை.

5) இந்த370 இன் வழிவகைகள் செயல்படுபதற்குக் குடியரசுத் தலைவரின் பொது அறிவிப்பு தேவை. அவர் இப்படி அறிவிப்புச் செய்ய சம்மு-காசுமீரத்து அரசமைப்புப் பேரவையின் பரிந்துரை தேவைப்படும்.

மேற்சொன்ன3 ஆம் கூறுதான் யாவற்றிலும் முகன்மையானது. யாவற்றிலும் சூழ்ச்சியானது. முறைப்படி காசுமீரத்து மக்களின் விருப்பம் அறியாமலே ,ஐநாவில் ஒப்புக் கொண்டபடி வாக்கெடுப்பு நடத்தாமலே காசுமீரத்தை என்றென்றைக்குமாக விழுங்கி விடும் சூழ்ச்சிதான் இது. எனவே 370 என்பது இந்தியப் பேரரசு காசுமீர மக்களை வஞ்சித்ததன் அடையாளமே தவிர வேறன்று.

எப்படி என்றால் ,இந்திய அரசமைப்பின் உறுப்பு 1 என்பது இந்திய ஒன்றியம் எப்பகுதிகளால் ஆனது என்பதை வரையறுக்கிறது. இந்த உறுப்பு சம்மு-காசுமீரத்துக்குப் பொருந்தும் என்றால் அந்தப் பகுதிகளில் அதுவும் சேர்ந்து விட்டது ,அதன் இசைவின்றியே சேர்க்கப்பட்டு விட்டது என்று பொருள். இந்த முதல் உறுப்பு பொருந்தும் என்றால் அரசமைப்பின் முதல் அட்டவணையில் மாநிலங்களின் பட்டியலில் சம்மு-காசுமீரமும் இடம் பெற்று விட்டது என்று பொருள். சம்மு-காசுமீர மக்களுக்கு உலகறியத் தந்த உறுதிமொழியை இந்தியா காற்றில் பறக்க விட்டதன் மறுபெயர்தான் உறுப்பு.370

சம்மு-காசுமீரத்துக்கான அரசமைப்புப் பேரவை கூட்டப்படுவதற்கு முன்பே ,ஐநா விதித்த வாக்கெடுப்பை நடத்துவதற்கு முன்பே காசுமீரத்து மக்களின் இறைமையைப் பறிக்க இந்தியா செய்த சூழ்ச்சிதான்.370

இந்த 370 ஒருபோதும் காசுமீரத்து மக்களின் கோரிக்கையோ குறிக்கோளோ அன்று. இந்தியாவில்தான் 370 பற்றிய கூச்சல் பெரிது. காசுமீரத்துக்கு மட்டும் ஏன் 370 தனிச் சலுகை ? இந்தியா முழுவதற்கும் ஒரு சட்டம் ,காசுமீரத்துக்கு ஒரு சட்டமா ?என்று ஆர்எஸ்எஸ் கோத்திரம் கேட்டுக் கொண்டிருந்தது. 370 அப்படியே நீடிக்க வேண்டும் என்றும் ,அதை நீக்கினால் இந்திய ஒருமைப்பாட்டுக்குக் கேடு என்றும் இந்தியத் தேசியக் காங்கிரசும்' பாரதபக்த 'இடதுசாரிகளும் கூவிக் கொண்டிருந்தார்கள். காசுமீரத்துக் குடிலர்களின் (பரூக் ,ஓமர் ,மெஹ்பூபா) கூவலும் அதுவே.

காசுமீரத் தேசியர்கள் யாரும்370 ஐ ஒரு பொருட்டாக மதித்ததே இல்லை. காசுமீர மக்கள் நலன்

என்ற நோக்கில் 370 ,இருந்தாலும் குப்பை ,தொலைந்தாலும் குப்பை! எங்களுக்கும் ஒரு 370 என்று இந்தியச் சாப்பாட்டுக் கடையில் இலைவிரித்துக் காத்திருப்பது` மாநில சுயாட்சி `இரவலர்களின் ஈனக்குரல்!

அறிந்தோ அறியாமலோ இந்த370 இல்தான் காலங்கெட்ட காலத்தில் நாம் தமிழர் கட்சி தஞ்சம் புகுந்துள்ளது. காலத்தின் தேவை என்று பேரறிவிப்புச் செய்யப்படும்370 இன் புதைமேட்டில் ஈரம் காய்ந்து விட்டது தெரியுமா ?தோழர்களே!

காசுமீரத்தின் இறைமையை வஞ்சகமாய்ப் பறித்த 370 எப்படித் தமிழ்த் தேசத்தின் இறைமையை மீட்கத் துணை வரும் ?காசுமீரத்துக்குத் தூக்குக் கயிறு தமிழகத்துக்குக் காக்கும் கவசமா?

"காலத்தின் தேவை முழுமையான மாநில சுயாட்சியின் கீழ் இறைமையுள்ள நாம் தமிழர் அரசு " என்ற தலைப்பிலான நாம் தமிழர் கட்சி ஆவணத்தில்" இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் "370என்ற தலைப்பில் இவ்வாறு கூறப்படுகிறது:

1) "முழு மாநில சுயாட்சியை நிலைநிறுத்திடவும் ,தேசிய இனங்களின் உரிமைகளைப் பெற்றிடவும் தமிழ்நாட்டு அரசின் இறைமையைக் காத்திடும் வகையிலும் இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு370 ஐப் போன்றதொரு சட்டத்தை தமிழ்நாட்டுக்கு உருவாக்கிட அனைத்து வழிகளிலும் நாம் தமிழர் அரசு உறுதியான தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுக்கும்."

2) "இதனைப் பெறுவதன் மூலம் இந்திய ஒன்றிய அரசின் சட்டங்கள் எவையும் தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது. மேலும் தமிழ்நாட்டிற்கான அரசியலமைப்புச் சட்டத்தை தமிழ்நாட்டு சட்டமன்றமே உருவாக்கிக் கொள்ளும் உரிமையும் நாம் தமிழர் அரசு உருவாக்கிய தமிழ்நாட்டிற்கான கொடிக்கும் இந்திய ஒன்றிய அரசியலமைப்பின் சட்டப் பூர்வ அங்கீகாரம் கிடைக்கப்பெறும்."

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும் அதன் உறுப்பு370 இன் மீதும் நாம் தமிழர் கட்சி வைத்துள்ள பெருநம்பிக்கைக்கு சட்ட வகையிலோ வரலாற்று வகையிலோ எவ்வித அடிப்படையும் இல்லை என்பதே உண்மை. சுயாட்சி ,இறையாண்மை நோக்கிய சாலைவரை

(roadmap) எப்படியாம் ?முதல் படி: நாம் தமிழர் தமிழ்நாடு மாநில அரசு அமைத்தல் ;இந்திய அரசமைப்புக்கு உட்பட்ட இப்படியானதோர் அரசு அமைத்த பின் இரண்டாம் படி: 370 போன்றதொரு சட்டத்தைத் தமிழ்நாட்டுக்கு உருவாக்குதல் ,அதற்காக அனைத்து வழிகளிலும் அந்த அரசு உறுதியான தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுத்தல். இப்படியாக முழு மாநில சுயாட்சியை நிலைநிறுத்துதல் ,தேசிய இனங்களின் உரிமைகளை (தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை மட்டுமன்று) பெறுதல்.

நாம் தமிழர் கட்சி தன் அரசியல் இலக்கை அடைவதற்கு இந்த உறுப்பு370 இன் மீது பெருநம்பிக்கையோடு தனதனைத்தையும் பந்தயம் வைக்கிறதே ,அந்த அளவுக்கு அதில் என்னதான் உள்ளது ?காசுமீரம் பற்றிய சிறப்பு வழிவகையாகிய உறுப்பு 370 போன்ற உறுப்பு தமிழ்நாட்டின் மாநில சுயாட்சிக்கோ இறைமைக்கோ எவ்வாறு பயன்படும் ?காசுமீர மக்களை ஏமாற்றி வஞ்சிப்பதற்காகவே வரையப்பட்ட 370 போல் ,தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி வஞ்சிப்பதற்கும் ஒரு சட்டம் வேண்டும் என்பதுதான் நம் தமிழர் கட்சியின் கோரிக்கையா?
370ஆம் உறுப்பை காசுமீர மக்கள் துச்சமாக மதிக்கின்றார்கள். காசுமீரத்தில் அல்ல , இந்தியாவில்தான் 370 பற்றிய கூச்சல் பெரிது. இந்த370 ஐக் காட்டி உலகை ஏமாற்றிக் கொண்டிருந்த ஆளும் வகுப்பு ஒரு கட்டத்தில் அந்த370 ஐயும் செயலிழக்கச் செய்து விட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தை முறைப்படி திருத்தாமலே ,அல்லது எவ்வடிவிலும் காசுமீர மக்களின் கருத்தறியாமலே370 ஐ மோதி- அமித்சா கும்பல் சாகடித்து விட்டது." காசுமீரம் யாருக்கு "?என்ற நூலில் இது பற்றி விரிவாக எழுதியுள்ளேன்.

காசுமீரத்துக்கு உதவாத 370 போல் தமிழ்நாட்டுக்கும் உதவாத ஒரு சட்டம் வேண்டும் என்பதுதான் நாம் தமிழர் குறிக்கோளா ?இப்படியொரு மோசடிச் சட்டம் தமிழ்நாட்டின் தன்னாட்சிக்கோ இறைமைக்கோ எப்படிப் பயன்படும் என்பதை நாம் தமிழர் கட்சித் தலைமையோ அக்கட்சிக்கு இவ்வாறு அறிவுரை வழங்கிய சட்ட வல்லுநர்களோதான் விளக்க வேண்டும்.

நாங்கள் இந்த370 ஐ அப்படியே கோரவில்லை ,உரிய திருத்தங்களோடுதான் கேட்கிறோம் என்று நாதக தோழர்கள் சொல்லக் கூடும். அப்படியானால் தமிழ்நாட்டுக்கென நீங்கள் முன்மொழியும் 370போன்ற சிறப்பு வழிவகை ,அல்லது வேறு புதிய வழிவகை இந்திய அரசமைப்புச் சட்டத்தில்

இடம்பெறச் செய்திட வழி என்ன ?சொல்லுங்கள். இந்திய அரசமைப்பில் தமிழ்நாட்டுக்கு முழுமையான மாநில சுயாட்சியும் இறைமையும் கிடைக்கச் செய்யும் திருத்தச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லலாம். தமிழ்நாட்டின் எல்லாத் தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சியே வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றாலும் சரி ,சட்டப் பேரவையில் நாம் தமிழர் கட்சியே பெரும்பான்மை பெற்று மாநில ஆட்சியைக் கைப்பற்றினாலும் சரி ,அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு இதெல்லாம் போதவே போதாது என்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

ஆனால் நாம் தமிழர் கட்சியின் கனவுகள் இத்துடன் முடியவில்லை. 370 போன்ற சட்டத்தைப் பெறுவது எப்படி ?என்ற வினாவுக்கு விடையே இல்லாமல் ,இந்திய ஒன்றிய அரசின் சட்டங்கள் தமிழ்நாட்டுக்குப் பொருந்தாமற்செய்தல் ,தமிழ்நாட்டுக்குத் தனி அரசமைப்புச் சட்டத்தைத் தமிழ்நாட்டு சட்டமன்றமே உருவாக்குதல் ,தமிழ்நாட்டுக் கொடிக்கு சட்டபூர்வ அங்கீகாரம் பெறுதல் …இந்தக் கனவுகளையெல்லாம் நனவாக்கத் தமிழ் மக்களைத் திரட்டிப் போராடுவோம் என்று நா.த.க. பறைசாற்றுமானால் மதிக்கலாம். இந்திய வல்லரசியத்தின் அடிமைக் கங்காணி அரசுக்கு அக்கட்சி தேர்தெடுக்கப்படுவதுதான் இதற்கெல்லாம் முதற்படி என்றால் அந்த முப்பாட்டன் முருகனே முதலமைச்சரானாலும் முடியாது.

நாதக ஆவணம் காட்டும் இரண்டாம் வழி மாநில ,ஒன்றியப் பட்டியல் என்பதாகும். இந்திய அரசமைப்பின் ஏழாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அதிகாரப் பட்டியல்களை என்ன செய்தாவது மாற்றி மாநில சுயாட்சியையும் இறைமையையும் அடைந்து விட முடியுமா ? பார்ப்போம்.

”காலத்தின் தேவை / முழுமையான மாநில சுயாட்சியின் கீழ் / இறையாண்மையுள்ள நாம் தமிழர் அரசு “என்ற நா.த.க ஆவணம் முழுமையான சுயாட்சியும் இறைமையும் அடைய மூன்று வழிகள் காட்டுகிறது. இவற்றுள் முதல் வழி அரசமைப்புச் சட்டத்தில் 370 போன்ற உறுப்பு இடம் பெறச் செய்தல் என்றால் ,இரண்டாம் வழி மாநில ,ஒன்றியப் பட்டியல் என்பதாகும். இந்தத் தலைப்பில் சொல்லப்படுவதாவது:

1) ”இந்திய அரசியலமைப்புப் சட்டத்தின் பட்டியல்7 இல் உள்ள பொதுப் பட்டியல் முழுதாக

நீக்கப்படும்.

2) “ஒன்றியப் பட்டியலில் உள்ள வெளியுறவுத் துறை ,பாதுகாப்புத் துறை ,இந்திய ரிசர்வ் வங்கி ,தொலைத் தொடர்பு ஆகியவை தவிர மற்ற ஏனைய விவகாரங்கள் அனைத்தும் மாநிலப் பட்டியலுக்கு முழுதாக மாற்றப்படும். இதன் மூலம் மாநில நலன் சார்ந்த அனைத்திற்கும் சட்டமியற்றி முடிவெடுக்கும் முழு அதிகாரமும் மாநில அரசின் வரையறைக்கு உட்பட்டதே என்ற நிலை உருவாக்கப்படும்.

3) “இதற்கான ஒத்த கருத்துள்ள ,மாநில உரிமைகளின் மேல் அக்கறை கொண்ட ,இழந்த மாநில உரிமைகளை மீட்கும் எண்ணம் கொண்ட ஏனைய மாநில அரசுகளுடன் ,பிற சகோதர தேசிய இனத் தலைவர்களுடன் கலந்தாலோசித்து இந்திய ஒன்றிய அரசியலமைப்பில் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள நாம் தமிழர் அரசு முழு முயற்சிகள் எடுக்கும்.”

இந்திய அரசமைப்பின்7 ஆம் அட்டவணையில் மூன்று பட்டியல்கள் உள்ளன: ஒன்றியப் பட்டியல் ,மாநிலப் பட்டியல் ,பொதுப் பட்டியல் (அல்லது இசைவுப் பட்டியல்). ஒன்றியப் பட்டியலில் 97 இனங்களும் ,பொதுப் பட்டியலில் 47 இனங்களும் ,மாநிலப் பட்டியலில் 66 இனங்களும் இடம்பெற்றுள்ளன.

பொதுப் பட்டியல் முழுதாக நீக்கப்படும் என்றும் ஒன்றியப் பட்டியலில் நான்கு அதிகாரங்கள் தவிர ஏனைய அனைத்தும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்படும் என்றும் நா.த.க. ஆவணம் சொல்கிறது. மாநில நலன் சார்ந்த அனைத்திற்கும் சட்டமியற்றி முடிவெடுக்கும் முழு அதிகாரமும் மாநில அரசின் வரையறைக்கு உட்பட்டதே என்ற நிலை உருவாக்கப்படும் என்றும் அது சொல்கிறது. வெளியுறவுத் துறையும் படைத் துறையும் ஒன்றிய அரசின் கையில் தொடரும் போது தமிழ்நாட்டுக்கு எத்தகைய இறைமை மிஞ்சும் என்ற கேள்வி எழுகிறது. தமிழீழத்தின் மீது இந்தியப் படையெடுப்பு போன்ற முடிவுகளைத் தமிழ்நாட்டரசால் சட்டப்படி தடுக்க முடியாது என்பதே நா.த.க. முன்மொழிவின் விளைவாக அமையும். இது ஒருபுறமிருக்க ,இது நீக்கப்படும் , அது மாற்றப்படும் ,அந்நிலை உருவாக்கபட்டும் என்றெல்லாம் அறிவித்தால் போதுமா ?யார் நீக்குவது ?யார் மாற்றுவது ?யார் உருவாக்குவது?

இதற்காக இந்திய ஒன்றிய அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பது நாம் தமிழர் கட்சிக்கு நன்றாகவே விளங்குகிறது. இவ்வாறு அரசமைப்பைத் திருத்துவதற்கு ஒத்த கருத்துள்ள மாநில அரசுகளுடனும் பிற சகோதர தேசிய இனத் தலைவர்களுடனும் கலந்தாலோசித்து ஆதரவு திரட்ட வேண்டும் என்பதுதான் நா.த.க. திட்டமாகக் கூறப்படுகிறது.

ஒரு கேள்வி எழுகிறது: இறைமையற்ற மாநில ஆட்சியைக் கைப்பற்றிய பிறகுதான் இந்தக் கலந்தாலோசனையைத் தொடங்க வேண்டுமா ?ஒரு கட்சியாகவே இதைச் செய்தால் என்ன ?ஒத்த கருத்துள்ள மாநில அரசுகள் என்றால் எவை ?அந்தப் பிற சகோதர தேசிய இனத் தலைவர்கள் என்றால் யார் ?இந்தக் கலந்தாலோசனையை இப்போதே தொடங்க விடாமல் தடுக்கும் காரணி எது?

ஒரு கலந்தாலோசனையைத் தொடங்குவதற்கே கூட -- இறைமையற்றதென்று நீங்களே ஏற்றுக் கொள்ளும் -- மாநில ஆட்சியைக் கையில் கொடுத்தால் மட்டும்தான் உண்டு என்கிறீர்கள்! இது ஒரு புறமிருக்க ,மாநிலப் பட்டியலில் வழங்கப்படும் அதிகாரங்களில் மட்டுமாவது மாநிலத்துக்கு இறைமை உண்டா ?அந்த அதிகாரங்கள் தொடர்பில் இயற்றப்படும் சட்ட முன்வடிவுகளும் கூட இந்திய அரசு அமர்த்திய ஆளாகிய ஆளுநரின் ஒப்பம் பெற்றால்தான் சட்டமாகும் என்பதன் பொருள் என்ன ?எந்தக் கட்சி ஆட்சியிலமர்ந்தாலும் மாநிலச் சட்டப் பேரவைக்கு இறைமை கிடையாது என்பதே!
மாநிலப் பட்டியலை விரிவாக்குவதோ ,எல்லா அதிகாரங்களையும் மாநிலப் பட்டியலுக்கே கொண்டுவருவதோ கூட மாநிலத்துக்கு இறைமை தந்து விடும் என்பதொரு மாயையே!

தமிழ்த் தேசிய விடுதலை அல்லது இறைமை மீட்பு என்ற அடிப்படைக் குறிகோளை விட்டு விலகிப் பதவி அரசியலுக்குத் தடம் அமைத்துக் கொள்ளவே மாநில அதிகார விரிவாக்கம் என்ற முழக்கம் பயன்படும். இது திமுக நடந்த பாதை ;அதே பாதையில்தான் நா.த.க.வும் புறப்பட்டுள்ளது.

**(தொடரும்)**

# அருள்தந்தை ஸ்டான் சுவாமிக்குப்

## பேராசிரியர் மருதமுத்து புகழஞ்சலி!




கிறிஸ்தவத் துறவி ஸ்டான் சுவாமி மரணத்தை நோக்கி மோடி அரசினால் தள்ளப்பட்டார். இன்று மரித்துவிட்டார்.

அவர் செய்த குற்றம் எளிய ஆதிவாசி மக்களுக்குத் தொண்டு செய்தது.

ஆனால் பிரதமர் மோடியைக் கொலை செய்ய நடந்த சதியில் அவரும் உடந்தை என்று டெல்லி அரசு குற்றம் சுமத்தியது.

மாவோயிஸ்ட் பயங்கரவாதி என்று பழி சுமத்தியது.

சிறையில் தள்ளியதோடு அவர் பிணையில் வெளி வரமுடியாமல் தடுத்து வதை செய்தது.

கொரோனா நோய் தாக்கியும் கூட அவருக்குப் பிணை தர விடாமல் அரசு தடை போட்டது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

இறுதியில் கொரோனா அல்ல அவரைக் கொன்றது.



அதிலிருந்து போராடி மீண்டார் அந்த 84 வயது முதியவர்.

ஆனால் தொடர்ச்சியான வதை தாளமுடியாமல் அந்தப் பெருந்தகை இறுதி மூச்சு விட்டார்--இன்று.

நண்பர்களே, அவர் நினைவைப் போற்ற வேண்டிய நாம் யாரும் இதை ஒரு சடங்காக மாற்றிவிடக் கூடாது.

உருக்கமாகவும், ஆவேசமாகவும் பதிவுகள் இட்டுவிட்டுப் பிறகு வழக்கம் போல் வாழ்வது இழிவாகும்.

இதில் நம் தலையாக கடமை ஒன்றுதான்.

துறவி ஸ்டான் சுவாமி நம் ஒவ்வொருவருக்குள்ளும் உயிர்த்தெழ வேண்டும்.

இனி அனைவரும் இன்று நடக்கும் கொடுங்கோல் ஆட்சி பற்றி ஆழமாகக் கற்கமுற்படவேண்டும்.

அதன் பொருட்டுக் கடுமையாக உழைக்கவேண்டும்.

எதிரிகள் பற்றிய ஆழமான புரிதலை நாம் வளர்த்துக் கொள்ளத் தவறினால் நமது மனிதத் தன் மை என்பது வெறும் மேல் பூச்சு மட்டுமே என்று பொருள்.

நாம் யார் பக்கம்?

மக்கள் பக்கமா, இல்லையா?

இதுவே அனைத்திலும் முக்கியமான கேள்வி.

இதில் நடுநிலை என்பது பெரியகுற்றமாகும்.போதிய அக்கறையும், உழைப்பும் காட்டாதிருப்பதும் அவ்வாறே பெரும் குற்றமாகும் .

மக்கள் பக்கம், நீதியின் பக்கம் நாம் நிற்க முடிவெடுத்தால் மக்கள் விரோதிகளைப் பற்றி முழு மையாக அறிந்துகொள்ளவேண்டும்.

அவ்வாறு புரிதல் ஏற்பட்டால்தான் அதன் அடிப்படையில் நம்முள் ஒற்றுமை ஏற்படும்.

இந்தப் புரிதலோடும், ஒற்றுமையோடும் நம் எதிரியை பலவீனப் படுத்தி நம்மை பலப் படுத்திக் கொள்வதை நாம் சமூக ஊடங்கங்கள் மூலம் ஓயாமல் செய்யத் தொடங்குவோமாக !

இந்த சபதத்தோடு எனது பதிவுகளை வாசியுங்கள். ஐயங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளுங்கள் . சொந்தமாக இயன்றவரை ஆய்வுகள் மேற்கொள்ளுங்கள்.

இவற்றையெல்லாம் இடைவிடாமல் செய்யத்தொடங்கும் நமக்குள் அந்த உண்மைக் கிறிஸ்தவர் ஸ்டான் சுவாமி புத்துயிர்ப்பு பெற்று எழுவார், நம்மோடு எப்போதும் இருப்பார்.

வாழ்க மாமனிதர் ஸ்டான் சுவாமி!

அறிவும், அன்பும், அறமும் துணை

மானுட சகோதரத்துவம் ஓங்குக!

அன்புடன் மருதமுத்து

நெகிழ்ச்சியோடு ஒரு கூடுதல் செய்தியும் படமும் இணைக்கிறேன்--

காலம் காலமாக எனது நீண்டகாலப் போராட்டப் பாதையில் அனைத்தையும் இழந்து என்னோடு கரம் கோத்து, எதிர்ப்பட்ட அனைத்து துன்ப, துயரங்களையும் தாங்கி, ஏழை எளியோர், தலித் ம க்கள் மத்தியிலெல்லாம் நெடுநாள் என்னோடு வாழ்ந்திருந்து இன்றுவரை என் பணிகளுக்கெல் லாம் அடித்தளமாக இருந்துவரும் எனது மனைவி போர்க்கொடி என்னும் வாலண்டைன் லூர்து

ராணி அவர்கள் 1980ல் (என்னைச் சந்திக்குமுன்) பெங்களூர் நகரில் மாமனிதர் ஸ்டான் சுவாமியின் தலைமையில் சமூகப் பணிக்கான பயிற்சி பெரும் நல்வாய்ப்பு பெற்றவர். அன்று போர்க்கொடியும், மற்ற பல தொண்டர்களும் தங்கள் ஆசான் ஸ்டான் சுவாமியுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தைக் கீழே இணைத்துள்ளேன். இது எங்கள் இருவரின் விலைமதிப்பில்லாத சொத்தாக இருந்துவருகிறது. மெய்த் துறவி, மக்கள் தொண்டர் ஸ்டான் சுவாமி எங்களோடு வாழ்ந்து வருவதாகவே உணர்கிறோம்.

கீழே உள்ள போட்டோவில் உச்சி வரிசையில் கண்ணாடி போட்டு உயரமாக நிற்பவர் தந்தை ஸ்டான்.

இரண்டாம் வரிசையில் வலது ஓரத்தில் புடவை அணிந்து வெள்ளை ஜாக்கெட் போட்டிருப்பவர் தான் எனது மனைவி வாலண்டைன் லூர்து ராணி (போர்க்கொடி).

வாழ்க அந்த மெய்யான கிறிஸ்து நேசர்!



# யமுனா இராசேந்திரன் பார்வையில் எஸ்.என்.



பிற தமிழ் தேசியர்களிலிருந்து மாறுபட்டு தேசியப் பிரச்சினையில் எஸ்.என் முன்வைத்தது இனவழித் தேசியம் அல்ல. மாறாக மொழிவழித் தேசியம்.

சூழலியல் மாசு என்பது இன்று உலகின் மிகப்பெறும் பிரச்சினை. இதனைத் தமிழ்ச் சூழலில் முதன் முதல் எழுப்பியவர் எஸ். என்.தான்.

இன்று மார்க்சியச் சூழலியல் குறித்து அதிகம் எழுதுகிற பெல்லாமி போஸ்ட்டர் இயற்கை-



மனிதன் தொடர்பான, வளர்சிதை மாற்றத்தில் ஏற்பட்ட முறிவு குறித்த மார்க்சின் கருத்தாக்கத்தை நாம் மீள் கண்டுபிடிப்புச் செய்ய வேண்டும் என எழுதுகிறார்.

ரஸ்ய செர்னோபில் விபத்தின் பின், இடதுசாரிகளுக்கு வெளியில் உலகில் சூழலியல் ஒரு மாபெரும் இயக்கமாக எழுந்த சூழலில்தான் பெல்லாமி போஸ்ட்டரின் சூழலியல் மார்க்சிய நூல்கள் வருகின்றன.

இந்திய அளவில் முதன் முதலாக இதனை ஒரு அடிப்படைச் சிக்கலாக முன்வைத்தவர் எஸ்.என். நாகராசன்தான்.

எஸ்.என். ஒரு அசலான சிந்தனையாளர் என்றாலும், அவர் வேறுபட்ட உரையாடல்களில், ரஸ்ய, சீன அனுபவங்கள தவிர்ந்த பிற உலக மார்க்சிய அனுபவங்களை ஒப்பிட்டுப் பேசியதில்லை.

குறிப்பாக லத்தீனமெரிக்க, ஆப்ரிக்க, தேசிய விடுதலை சார் மார்க்சிய அனுபவங்கள்.
இதனை மட்டுமே அவர் மீதான விமர்சனமாக வைக்க முடியும்.

எஸ்.என். தன் வாழ்நாளெல்லாம் பேசியது அகந்தை களைந்த, மக்களை நேசிக்கும் மார்க்சிய அறம்தான். இறுதி வரை அதனைத் தனது சொந்த வாழ்வில் கடைப்பிடித்து மறைந்த மனிதன் எஸ். என். நாகராசன்..

ஜெயமோகனை மேற்கோள் காட்டி கிராம்சியைப் புரிந்துகொள்வது எத்தனை அபத்தமோ அத்தனை அபத்தம் எஸ்.என். நாகராசனைப் புரிந்துகொள்ள ஜெயமோகனை மேற்கோள் காட்டுவது.

எஸ்.என். அந்தரத்தில் இருந்து ராமானுசர் பற்றிப் பேசத் துவங்கவில்லை. அவர் கிறித்தவ, இஸ்லாமிய இறையியல் பற்றி, அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்பு பற்றிப் பேசியதோடு, பிஜேபி,ஆர்.எஸ்.எஸ், பார்ப்பனிய மேலாதிக்கம் என்றெல்லாம் பேசுவதன் பகுதியாகத்தான் ராமானுசரது செயல்பாடுகள் பற்றிப் பேசுகிறார்.

மூன்று வருடங்களுக்கு முன்னான அவரது இறுதி நேர்காணலில் இஸ்லாமியர், தலித்துகள், பெண்கள் என இவர்களிடம்தான் எஸ்.என். விடுதலை ஆற்றலைக் காண்கிறார்.

மதம்சார் விஷயங்களை பரிசீலனைக்கு எடுத்ததாலேயே ஒருவரை மென் இந்துத்துவர் என வரையறுக்க முடியுமானால், தமிழ் மரபில் ஜீவா, குன்றக்குடி அடிகளார், தொ.பரமசிவன் என இவர்களோடு ராமானுசர் பற்றி நேர்மறைப் பனுவல்கள் எழுதிய இந்திரா பார்த்தசாரதி, கலைஞர் கருணாநிதி போன்றவர்களை எங்கு வைப்பது?


சுவாமி அக்னிவேஷை எப்படி மதிப்பிடுவது?

எஸ்.என்.னை மென் இந்துத்துவர் என்று பேசுபவர்கள் அவரது பனுவல்களைப் படிக்காமல் குத்தகையாகப் பேசுபவர்கள் என்று நான் சொல்வேன்..

# செங்காட்டான் குறிப்புகள்:

(1)

## தாய்த்தமிழ்க் கல்வியின் வேருக்கு நீரூற்றிய தோழர் சிறிதர்!



சற்றொப்ப முப்பதாண்டு கழிந்து விட்டது. அம்பத்தூரில் தமிழ்நாட்டின் முதல் தாய்த் தமிழ்த் தொடக்கப் பள்ளியை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தோம். பள்ளி தொடங்குவத்ற்குப் பணம் வேண்டுமே? ஆளுக்கு ஒரு ரூபாய் தாருங்கள்! என்று நிதிதிரட்டத்

திட்டமிட்டோம். ஓவியர் (ட்ராட்ஸ்கி) மருது வரைந்து கொடுத்த தாயும் குழந்தையும் படம் அச்சிட்ட ஒரு ரூபாய் வில்லைகள் அச்சிட்டு ஆளுக்கு ஒரு ரூபாய் கணக்கில் தண்டிக் கொண்டிருந்தோம். அந்த வகையில் கல்பாக்கம் அணுமின் நிலையக் குடியிருப்பிலிருந்து “நேரில் வாருங்கள்! எங்களுக்குக் கொஞ்சம் விளக்கம் தேவைபப்டுகிறது” என்று ஒரு நாள் அழைப்பு வந்தது.

அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டின் விசாலமான கூடத்தில் பாய்விரித்து உட்கார்ந்திருந்தோம். என்னைச் சுற்றி நால்வர் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் தங்களை ’பிளிங்க்ஸ்’ (BLINKS) என அழைத்துக் கொண்டனர். “ஏதாவது செய்ய விரும்புகிறோம், ஆனால் என்ன செய்வதென்று முடிவுக்கு வர முடியாமல் முழித்துக் கொண்டிருக்கிறோம்” என்று விளக்கமும் அளித்தனர். அந்த நால்வரும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் அறிவியலர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தனர். நடராஜன், கோபால், கலாவதி, சிறிதர் என்ற அந்த நால்வரில் ஒருவராகத்தான் (அண்மையில் மறைந்த) சிறிதர் எனக்கு முதலில் அறிமுகமானார்.

விடிய விடிய உரையாடல் நீண்டது. தமிழ்வழிக் கல்வி என்ற ஒன்றைச் சுற்றி அடுக்கடுக்கான வினாக்கள். எல்லா வினாக்களுக்கும் பொறுமையாக விடை சொல்லிக் கொண்டிருந்தேன். ஆங்கிலத்தின் தேவை அல்லது தேவையின்மை குறித்து? அறிவியலுக்கும் தமிழ் அல்லது ஆங்கிலத்துக்குமான தொடர்பு குறித்து? சமூக நீதிக்கும் தாய்மொழிக் கல்விக்குமான இடையுறவு குறித்து? அரசு ஆதரவில்லாமல் அலல்து செல்வந்தர்கள் துணையில்லாமல் தமிழ்வழிக் கல்விக்கு ம்க்கள் ஆதரவு கிடைக்குமா? தமிழ்நாட்டில் வாழும் மொழிவழிச் சிறுபான்மையினரும் தாய்மொழியில் கல்வி பெற வாய்ப்புண்டா?

உரையாடலின் முடிவில் அவர்கள் தாய்த் தமிழ்க் கல்வியின் தெளிந்த ஆதரவாளர்களாக வென்றெடுக்கப்பட்டிருந்தனர். கடைசியாக ஒரு கேள்வி –நால்வரில் ஒருவர் கேட்டார்: மற்றவர்களும் ”அதானே?” என்று சேர்ந்து கொண்டனர்: “உங்கள் பள்ளியில் எந்தப் பெற்றோரும் தம் குழந்தைகளைச் சேர்க்க முன்வரா விட்டால்?”

”என் மகளை நான் முதல் மாணவியாகச் சேர்ப்பேன். கட்டணமில்லாக் கல்வி கொடுப்பேன். இலவசக் கல்வி என்பதால் எப்படியும் சில குழந்தைகளையாவது சேர்ப்பார்கள். நானே ஆசிரியராக வேலை பார்ப்பேன். இரவு நேரத்தில் அச்சகத்தில் பணி செய்தால் மாதம் ஆயிரம்

வரை கிடைக்கும். கட்டட வாடகைக்கு அது போதும்."

"இந்த விளக்கமே போதும்"என்று கூட்டத்தை முடித்து வைத்தனர். "ஆளுக்கு ஒரு ரூபாய்" என்று சொல்ல முற்பட்டேன். "திரட்டித் தருகிறோம், இப்போது முன்பணமாக இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று நால்வர் சார்பில் பத்தாயிரம் கையில் கொடுத்தனர். தாய்த் தமிழ்க் கல்விப்பணிக்குக் கிடைத்த முதற்பெரும் நன்கொடை அதுவே!

எனக்குக் கல்பாக்கம் தொடர்பு அப்போதுதான் தொடங்கியது. பிற்காலத்தில் கல்பாக்கத்திலேயே ஒரு தாய்த் தமிழ்ப் பள்ளி தொடங்கப் பெற்றது.

நடராஜன் தோழர் அமரந்தாவின் துணைவராகி, கியூபா, காஸ்ட்ரோ, சே குவேரா என்று பயணப்படுகிறார். தோழர் கோபால் மா-லெ இயக்கத்துக்காக அயராது உழைக்கிறார்.
சிறிதரும் கலாவதியும் கல்பாக்கத்தைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் ஏழை எளிய ஒடுக்குண்ட குழந்தைகளின் கல்விக்காக ஓயாதுழைத்து வந்தனர். சாதி மறுத்து இருவரும் வாழ்க்கைத் துணைவர்களாக இணைந்த பின் அவர்கள் வீடு குழந்தைகளால் எப்போதும் நிறைந்திருக்கும்.
ஐம்பதுக்கு மேற்பட்ட குழந்தைகளை வீட்டிலேயே தங்க வைத்துப் படிக்க வைத்தனர். மனிதவுரிமைத் தளத்தில் முனைப்புடன் செயல்பட்டனர், சிறிதர் இறுதி வரை பியுசிஎல் அமைப்பில் ஈடுபாட்டுடன் உழைத்து வந்தார்.

இடையிடையே மனிதவுரிமை தொடர்பான நிகழ்வுகளில் சிறிதரையும் கலாவதியையும் சந்திப்பதுண்டு. உட்கார்ந்து பேச நேரமிருக்காது. ஓடிக் கொண்டே இருப்பார்கள். சிறிதரின் ஓட்டம் இப்படித் திடுமென ஓயும் என்று எதிர்பார்க்கவே இல்லை. 2021மே 15ஆம் நாள்சிறிதர் சிறுநீரகச் செயலிழப்பால் உயிர்துறந்தார் என்ற செய்தி வந்த போது அதிர்ச்சியாக இருந்தது.
தோழர் சிறிதர்! நீங்கள் தாய்த் தமிழ்க் கல்விக்கு முதல் நீர் ஊற்றியவர்களில் ஒருவர்! கல்பாக்கத்தை ஒட்டிய சிற்றூர்களில் நீங்களும் கலாவதியும் ஆற்றிய கல்விப் பணி அந்த இளந்தளிர்களின் மனத்தில் ஓயாத அலைகளாக மோதிக் கொண்டே இருக்கும். அவர்தம் உள்ளமே நீங்கள் துயில் கொண்ட இல்லமாக விளங்கும். இன்னும் நிறையப் பணிகள் இருப்பதை மறந்து மீளா ஓய்வு கொண்டு விட்டீர்களே, இது நியாயமா?
செவ்வணக்கம் தோழர் சிறிதர்!

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

(2)

# மார்க்சியப் பார்வையில் தமிழ்த் தேசப் புரட்சியின் கருத்தியல் முன்னோடி

## தோழர் சத்தியமங்கலம் நாகராசன்!

அரைநூற்றாண்டுக்கு மேலாயிற்று என்றாலும் பசுமை மாறாத நினைவுகள்: காவிரிக் கரையோரம்ஆடுதுறை அருகே பசிய வயல் வெளிகளுக்கும் வாழைத் தோப்புகளுக்கும் நடுவில் தொட்டில் கட்டியாடும் தியாகராஜபுரம் என்றொரு சிற்றூர். அந்த ஊரில்தான் ஒரு சுற்றுக் கட்டு வீட்டின் நடுக் கூடத்தில் சிபிஐ (மா-லெ) தமிழக முதல் மாநாடு வெகு கமுக்கமாக நடைபெற்றது. மாநாடு என்றாலே பெருங்கூட்டங்களைப் பார்த்துப் பழகிய எனக்கு 50க்கும் குறைவானவர்கள் கூடிப் பேசும் மாநாடு என்பதே அதிசயமாகத்தான் இருந்தது. இது பிரதிநிதிகள் மாநாடு எனப்பட்டது, நான் பிரதிநிதி அல்ல என்றாலும் சற்று முன்னர்தான் படிப்பும் குடும்பமும் துறந்து புரட்சி இயக்கத்துக்கு வந்தவன் என்ற முறையில் என்னையும் கலந்து கொள்ள அனுமதித்திருந்தார்கள்.

அந்த ஊர் புலவர் எனப்பட்ட தோழர் கலியபெருமாளுக்கு உறவினர்கள் நிறைந்த ஊர் என்பதால்தான் மாநாடு அங்கு நடைபெற்றது. புலவரின் துணைவியார் அம்மா வாலாம்பாளும் பெரியம்மா அனந்தநாயகியும் மாநாட்டுக்கு வந்தவர்கள் அனைவருக்கும் உணவு படைத்து விரும்தோம்பினார்கள். வாழை இலையில் வாழைக் காய், வாழைப் பூ, வாழைத் தண்டு என்று எல்லாமே வாழை மயம்!

மாநாட்டை வழிநடத்திய இருவர் தோழர்கள் ஏஎம்கே (கோதண்டராமன்), எல்ஏ (அப்பு). மாநிலக் குழு உறுப்பினர்கள் ஆர்எம் (ஆர். மாணிக்கம்), பிவிஎஸ் (பிவி சீனிவாசன் ஆகியோரும் இருந்தனர். புதிய தலைமுறை ஏட்டில் (எனக்குப் பிடித்த வெண்மணிக் கவிதை உட்பட) நெருப்புக் கவிதைகள் எழுதிய புலவர் ஆதி அவர்களை (இராசியண்ணன்) அங்குதான் முதலில் கண்டேன். நெல்லித்துறை வழக்கில் அவரைப் பிடித்துப் போய் காவல்துறை செய்த சித்திரவதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். தலைமறைவாக இருந்த மூத்த தோழர்கள் சிலரால் மாநாட்டுக்கு வர

முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

மாநாட்டில் தோழர் ஏஎம்கே சில அறிக்கைகளை முன்வைத்து விளக்கமளித்துக் கொண்டிருந்தார். அவற்றுள் ஒன்று தோழர் சத்தியமங்கலம் எஸ்.என். நாகராசனின் நிலைப்பாடு பற்றியது. இந்தியக் கட்சி கூடாது, தமிழ்நாட்டுக்குக் கட்சி அமைக்க வேண்டும் என்கிறார், இது பிரிவினைவாதம், புரட்சிக்கு எதிரனது என்று தோழர் ஏஎம்கே கூறியதை மாநாடு ஏற்றுக் கொண்டது. எனக்கு அவ்வளவாக விளங்கா விட்டாலும் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். தோழர் எல். அப்பு அழித்தொழிப்பின் தேவை பற்றி எடுத்துரைத்தார். எனக்கும் அதுதான் அவசரமாகப் பட்டது.

எஸ் என் என் கட்சியில் சேர்க்கபப்டவே இல்லை, அல்லது கட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார் என்றாலும் எஸ்.என்.என் என்ற பெயர் மட்டும் மனத்தில் பதிந்து விட்டது. இடையிடையே தோழர்களுக்குள்ளான உரையாடலில் அவர் பெயர் இடம்பெறும். ஆனால் அவரது நிலைப்பாடு பற்றி விரிவாக எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவர் பேசுவது புரட்சியல்ல, பிரிவினைவாதம் எனப்பட்டது அவ்வளவுதான்!

1973ஆம் ஆண்டு சூலை முதல் நாள் தொடங்கி திருச்சிராப்பள்ளி மத்தியச் சிறையில் தூக்குக் கொட்டடிகளில் ஒரு கருத்துப் போராட்டம் (சிமிழுக்குள் ஒரு புயல்) வெடித்த போது இந்தியப் புரட்சிக்கும் சீனப்புரட்சிக்குமான அடிப்படை வேறுபாடுகள் பற்றிய விவாதம் நடைபெற்றது. சீனத்தின் பாதை எமது பாதை என்ற சாரு மசூம்தாரின் முழக்கம் பிழை என்று நான் வாதிட்டேன். இந்தியாவின் தேசிய இனப் பன்மையைக் கருத்தில் கொள்ளாமல் புரட்சி வெற்றி பெறாது என்றேன்.

இந்த விவாதத்துக்கிடையே தியாகராஜபுரம் மாநாட்டில் மறுதலிக்கப்பட்ட எஸ்என் பார்வையை நினைத்துப் பார்க்க வேண்டியதாயிற்று. எம்-எல் நிலைப்பாடுகள் அடிப்படையிலேயே தவறானவை என்ற முடிவுக்கு நானும் தோழர்களும் வந்தோம். சிபிஎம் கட்சியில் குறிப்பாக ஈழம் தொடர்பாகவும் பொதுவாகத் தேசிய இனச் சிக்கல் தொடர்பாகவும் விவாதங்கள் வந்த போது மீண்டும் எஸ்என் நினைவுக்கு வந்தார்.

1985 நவம்பரில் சிறையிலிருந்து விடுதலையாகி வெளிவந்த பின் எஸ்என்-ஐப் பார்க்க ஆவலாக இருந்தேன். சி பி எம்-இலிருந்து வெளியேறிய தோழர்கள் பெ. மணியரசன், கி. வெங்கட்ராமன் ஆகியோரிடம் எஸ்என் பற்றிச் சொன்னேன். அவரது அந்தப் புகழ்பெற்ற அறிக்கையும்கிடைத்து அவர்களோடு பகிர்ந்து கொண்டேன். அது தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சிக்கான அறிக்கை. சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவதாக இருந்தது.

ஒருமுறை வங்காளத்திலிருந்து இரு தோழர்கள் எஸ்என்-ஐப் பார்க்க வந்தார்களாம்! அவர்களை உள்ளூர் உழவர்களிடம் பேசச் சொல்லி அது முடியாமல் போன போது, இதற்காகத்தான் நாம் சேர்ந்து புரட்சி செய்ய முடியாது என்கிறேன் என்று எஸ்என் விளக்கமளித்தாராம்.

1990வாக்கில் கல்பாக்கத்தில்தான் தோழர் நடராஜன் இல்லத்தில் எஸ்என்-ஐநேரில் சந்தித்தேன். ஓர் இரவு முழுக்க அவரோடு பேசிக் கொண்டிருந்தேன். பெரும்பாலும் அவர் பேச நான் கேட்டுக் கொண்டிருந்தேன் என்பதே உண்மை. இறுதியில் நான் அவரிடம் கேட்டேன்:

:”இந்தக் கருத்துகளுக்காக நீங்கள் போராடியிருக்க வேண்டுமல்லவா?”

”போராடத்தான் செய்தேன். சிபிஎம் கட்சியிலேயேபோராடியிருக்கிறேன்.”

”நீங்கள் பி.ஆர். உடன் வாதிட்டதாகவே சொல்வார்க்ள். ஆனால் எம் எல் கட்சியில் என்ன போராட்டம் செய்தீர்கள்? எங்களுக்கெல்லாம் உங்கள் நிலைப்பாடுகள் தெரியாமலே போய் விட்டனவே?”

”உண்மைதான். நான் என்ன சொன்னாலும் இந்தப் பார்ப்பான் இப்படித்தான் பேசுவான் என்று சொல்லி விடுவார்கள்.”

”இதெல்லாம் ஒரு காரணமா? யார் என்ன சொன்னால் என்ன?”

"இன்னும் முக்கியமான ஒரு காரணம் உண்டு."

"சொல்லுங்க."

"அவனவன் உயிரைக் கொடுத்துப் போராடிக்கிட்டிருக்கும் போது குறை சொல்லிப் பேசறது கஷ்டமா இருந்துச்சு."

"போகட்டும். இப்பயாவது வெளிப்படையா பேசுங்க."

அமைப்பாகச் செயல்படுவது அவருக்கு மிகவும் கடினம் என்பதைத் தெரிந்து கொண்டேன்நிறைய எழுதுவார். ஓர் அஞ்சலட்டையில் நுணுக்கி நுணுக்கி ஒரு கட்டுரையே எழுதிவிடுவார். பேசினால் பேசிக் கொண்டே இருப்பார்.

தோழர்கள் மருதுபாண்டியன், கோவை ஞானி, பொன் சந்திரன், குறிஞ்சி, அறிவன் போன்ற தோழர்கள் அவருடன் நெருங்கிப் பழகியவர்கள். இவர்கள் எனக்கும் நெருக்கமானவர்கள் என்பதால் அவர் பற்றிய செய்திகள் எனக்கு வந்து கொண்டே இருக்கும். சில ஆண்டு முன்பு கோவையில் அவரது எழுத்துகள் தொடர்பான ஒரு ஆய்வரங்கில் நானும் பேசினேன். சென்னையில் ததேவிஇ அலுவலகத்தில் ஒரு முழு நாள் அவரோடு தோழர்கள் கலந்துரையாட ஏற்பாடு செய்தோம். மகிழ்ந்து போனார்.நிறைய அவரிடமிருந்து கற்க வேண்டியிருப்பினும் உரையாடி ஒரு முடிவுக்கு வருவது கடினம், வயதும் கூட காரணமாய் இருக்கலாம். முதுமை என்பது இரண்டாம் குழந்தைமைஎன்று சொல்லி அவரை நேசிக்கத் தெரிந்து கொண்டேன்.

முதிர்பெரும் வயதில் மகுடை (கொரோனா) நோய்த் தொற்றால் அவர் மறைந்த போது சோசலிச மையத்துடன் இணைந்து தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் சார்பில் இணைய வழி நினைவேந்தலில் தமிழ்நாட்டையும் கேரளத்தையும் சேர்ந்த மூத்த தோழர்களை ஒன்றுகூட்டி அவருக்குச் செவ்வணக்கம் செலுத்தியது ஆறுதலும் நிறைவும் அளித்தது.

செவ்வணக்கம் தோழர் சத்தியமங்கலம் நாகராசன்!

## தோழமைத் தந்தை, பத்திரிகையாளர்

# இரா.ஜவஹர் அவர்களுக்கு செவ்வணக்கம்...



**பதிவு எண்** :R.Dis. No. 1964/2014

# தோழர்.இரா.ஜவஹர்:

சமந்தா

பலப் புத்தகங்கள் நம்மை மிரளச் செய்யும், படித்தால்
மூச்சு முட்டும், கண்ணைச் சுற்றும், நா தள்ளும்
பலப் புத்தகங்கள் நம்முடன் மல்லுக்கு நிற்கும்
வாசிப்பையேத் தொடர் போராட்டமாக்கும்
பலப் புத்தகங்கள் நம்மைப் பரிகசிக்கும்
என்னை வாசிக்க உனக்குத் தகுதி உண்டா
எனப் பகடி செய்யும்
எழுத்திற்கும் எளிய வாசகனுக்கும் இடைவெளியைப்
பெரிதாக்கி அவனைத் தாழச் செய்யும்
இருண்மையையே எழுத்தின் உச்சமெனக் கொண்டாடும்...
ஜவஹரின் புத்தகங்களை நீங்கள் அறிவீர்களா அன்பர்களே
அவை வாசகரை கரங்கோர்த்து அழைத்துச் செல்லும்
எளிய மக்களால் எதையும் அறிய இயலும் என ஊக்கப்படுத்தும்
அவர் எழுத்து நமக்கு நன்னம்பிக்கை ஊட்டும்....
ஜவஹரின் புத்தகங்கள் நம்முடன் நேர்படப் பேசும்
அன்பர்களே அவைக் கதை பேசும்...
மாயமந்திரக் கதைகளா அவை? அல்ல அல்ல
அள்ள அள்ளக் குறையாத மார்க்சிய ஆய்வுக் கதைகள் அவை
மார்க்சியத்தின் கதை சொல்லி ஜவஹர்...
இடப்புறம் சாய்ந்தாடும் ஜவஹரின் எழுத்துக்கள் மார்க்சியம் பாடும்
அவரது பெருமையைப் பறைசாற்ற
"கம்யூனிசம் நேற்று இன்று நாளை" ஒன்றே போதும் அன்பர்களே!
மறக்கடிக்கப்பட்டவற்றை மீண்டும் மதிக்கவைத்தார்
மறைக்கப்பட்ட உண்மைகளுக்கு ஒளி காட்டினார்...
அந்நூலின் தாக்கத்தில் நான் அவரைத் தலைவா
எனத் தொண்டனிட்டேன்...

அவரோ தோழா எனத் தோள் கொடுத்தார்
என் பேராசானே என நான் பணிந்தேன்
அவரோ மகளே என எனை வரித்துக் கொண்டார்...
மகளிர் தினம் உண்மை வரலாற்றில்
பெண்ணிய விழுமியத்தின் வேர்களை அவர்
கண்களின் மூலம் நாங்கள் கண்டு கொண்டோம்
கலை, இலக்கியம், பண்பாடு, விஞ்ஞானம்
என அனைத்துப் பெருமைகளையும் அபகரித்த ஆதிக்கவர்க்கம்
மகளிர் தினத்தையும் தனதாக்கி முதலாளித்துவப்
புதைகுழியில் அமிழ்த்தியபோது,
அதன் முட்கொடிகளில் சிக்கி மூர்ச்சையாகி,
அதன் குப்பைக் கூளங்களில் குற்றுயிரானப் பெண்ணியத்தை,
அந்தக் கற்பனைக் கதம்பக் கூளங்களிலிருந்தும்,
அதைக் கட்டுண்ட எண்ணற்ற முடிச்சுகளிலிருந்தும்
விடுவித்து உயிர்ப்பித்து, புத்தொளி பாய்ச்சி
உண்மையை மிளிரச் செய்த நம் ஜவஹர்
பெரியாரின் புதல்வர் அல்லவா!
பெற்றோர் துணைமாலை, ராமசாமியின் அன்பு வெள்ளத்தில்
திளைத்த அவனுக்கு வறுமை ஒரு பொருட்டாகுமா!
அவர்கள் அளித்த வண்ணப் பென்சில் பெட்டகத்தை
தன் பொக்கிசமாய்க் கண்ட சின்னஞ்சிறுவன் ஜவஹர்
அன்றறிந்திருப்பானா வரைவுகோல் தான் என்றென்றுக்கும்
தனக்கானப் பேராயுதம் என்பதை,
தான் ஒரு மார்க்சியக் கதை சொல்லி என்பதை....
முழு நேரக் கட்சி ஊழியனாக இரவு முழுதும் ஜவஹர்
சுவரில் ஸ்டென்சில் அடித்த நாட்களும், சுவரெழுத்து
எழுதிய நாட்களும் ஏராளம்....

வசந்தம் வரும் இனிய இதழ்களை வெளியிட்டவர்....

தொடர் போராட்டங்களால் சிறையைத் தொட்ட அவர்

பாதங்கள் மாணவனாக கல்லூரி வாசலைத் தொடவில்லை....

அதனால் தானோ என்னவோ பகட்டுணர்வோ,

பாசாங்கோ அறியாது அவர் எழுத்து...

போதனையின் சாயலோ, மேட்டுமையின் மேதமையோ

அவர் எழுத்துக்களில் காணக் கிடைக்காது...

எளிமையாய், தெளிவாய் வளமான உண்மையை

இனிதாய் சுருங்கச் சொல்லி நம் இதயத்தைத்

தொடுவதே அவர் எழுத்தின் தனிச்சிறப்பு...

கல்லூரிப் படிப்புடன் தன் வாசிப்பை வதம் செய்பவர்கள்

மத்தியில் வாசிப்பையே வரமாக வரித்துக் கொண்டு

இன்றும் புத்திளம் ஆய்வு மாணவனாகத்

தன் பணியைத் தொடரும் இந்த மார்க்சிய அறிஞரை

செதுக்கிப் பண்படுத்தியது படிப்பும் பட்டறிவுமே...

தொழிலாளர்களின் இன்னுயிர்த் தோழராய்

தொழிற்சங்கத் தலைவராய் உழைத்தவர்

நம் அருமைத் தோழர் ஜவஹர்...

கட்சி ஜவஹரை விடுவித்த போதும்,

தடம் மாறாமல் தொடர்ந்து தன்

ஆசான்களின் வழியில், அமைப்பிற்கு

வெளியிலிருந்தும் அக்கறையுடன் அமைப்பிற்காக

செயல்படும் அவரல்லவா மார்க்சியவாதி...

வாசிப்பையும் எழுத்துப் பணியையுமே

தன் முதன்மைக் கொண்டாட்டங்களாக்கிக் கொண்ட

அவர் நீண்ட நெடியக் கரும்புத் தோட்டங்களாக

விரியும் மார்க்சியத்தைத் தன் எழுதாயுதத்தால்

சிறு சிறு துண்டமாக்கி வாசகர் பருகச் சாராய்த் தருபவர்....

தான் உள்வாங்கிய அமுதத்தை விண்ணமாக்கி

வாசகர் சுவைத்துத் திண்ணக் கொடுப்பவர்...

மார்க்சியக் காட்டின் மலைத் தேனி அவரின்

எழுத்துக்கள் உழைக்கும் வர்க்கத்தின் ராயல் ஜெல்லி...

மார்க்ஸின் புதல்வர்கள் பலருள் எங்களவராகத்

தானும் வளர்ந்து எங்களையும் வளர்த்தெடுக்கும்

தந்தையல்லவா ஜவஹர்....

மார்க்ஸுக்கு பொருளாதாரத்தின் மீது தீராத காதல்...

ஜவஹருக்கோ பொருளாதாரப் பேராசிரியை மீது தீராத காதல்...

இயக்கவியலின் வழியில் பரிபூரணத்தில் நம்பிக்கையற்ற அவர் தான்,

தன் பூரணத்தின் மீது பரிபூரண நம்பிக்கையோடு காதல் கொண்டவர்...

அவரின் தனித்துவமிக்கப் படைப்புகள் ஏராளம்,

அதில் டார்வினையும், பாலுவையும் தவிர

மற்றவை யாவும் உழைப்பாளிகளுக்கே சொந்தம்...

அவர் பெற்றெடுக்காத செல்லக் குட்டிகள் அவருக்கு ஏராளம்...

இவர் ஒருவருக்காகவே 365 1/4 நாட்களையும்

தந்தையர் தினமாகக் கொண்டாடலாம் அன்பர்களே...

இதற்கு மேல் நீட்டி முழக்கினால்

எம் தந்தை சங்கடப்படுவார்...

மார்க்சியவாதியாக என்னைக் கடிந்து கொள்வார்

என்பதால் இன்று இத்துடன் விட்டு வைக்கிறேன்

நாளைக்கு எனக் கொஞ்சம் மீதம் வைக்கிறேன்

அன்பர்களே...

# துயர்தணிப்பா, துயர்திணிப்பா?

**சமந்தா**

கோவிட் இரண்டாம் அலையால் மீண்டும் மக்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. 2021 ஜூலை மாத இறுதிக்குள் 30 கோடி இந்தியர்களுக்குத் தடுப்பூசி செலுத்தி முடிப்போம் என்று பாஜக அரசு 2021 ஜனவரியில் தெரிவித்தது.ஆனால் மே 22ஆம் தேதிவரை 4.1 கோடி இந்தியர்களுக்கு மட்டுமே 2முறை (dose) தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.இந்தியாவில் சராசரியாக ஒரு வாரத்திற்கு 10.8 மில்லியன் நபர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்படுகிறது.இதே வேகத்தில் மருந்து அளிக்கப்படுமானால் 2024 இறுதியில்தான் 75 விழுக்காடு மக்களுக்குத் தடுப்பு மருந்து செலுத்தி முடிக்க முடியும் என்று பிஸினஸ் ஸ்டாண்டர்ட் செய்தித்தாள் குறிப்பிடுகிறது. ஆனால் டிசம்பருக்குள் அனைவருக்கும் கோவிட் தடுப்பூசி அளிக்கப்படும் என்று பிரகாஷ் ஜவடேகர் வாய்ச் சவடால் விடுத்துள்ளார்.கோவிட் தடுப்பு மருந்துகள் கிடைப்பதில் நாடெங்கும் தட்டுப்பாடு காணப்படுகிறது என்ற போதும் பாஜக அரசு பாரத் பயோடெக், சீரம் இன்ஸ்டியூட், ரெட்டிஸ் லேப் ஆகிய மூன்று தனியார் நிறுவனங்களுக்கே மருந்து தயாரிப்பதற்கு அனுமதி அளித்துள்ளது.இந்நிறுவனங்களின் ஆய்வுக் கட்டமைப்புக்கு ஏற்கெனவே பொது நிதி அளிக்கப்பட்ட போதிலும், தடுப்பு மருந்துகளை இலவசமாகப் பெற முடியவில்லை. இந்நிறுவனங்கள் முற்றுரிமையின் மூலம் தங்கள் விருப்பம் போல் தடுப்பு மருந்தின் விலையை ஏற்றிப் பெருலாபம் ஈட்டுவதற்கே மத்திய அரசு துணைபோகிறது.. இந்தியாவிலேயே வைரஸ் தடுப்பு மருந்துகள் தயாரிக்கும் கட்டமைப்புகளுடைய பல பொதுத் துறை அமைப்புகளும் நிறுவனங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் தடுப்பு மருந்துகள் தயாரிக்கும் பாஸ்டர் நிறுவனம் (பொதுத்துறை) ஊட்டியிலும், கிங்க்ஸ் நிறுவனம் சென்னையிலும் உள்ளன. மற்ற நிறுவனங்களையும் தயாரிப்புப் பணியில் ஈடுபடுத்தினால் ஒழிய உரிய நேரத்திற்குள் அனைவருக்கும் தேவையான அளவு மருந்துகளைத் தயாரிக்கவோ, மக்களுக்குச் செலுத்தவோ முடியாது. இந்நிறுவனங்களிலிருந்து பெறும் கோவிட் தடுப்பு மருந்துகளின் உள்நாட்டுவிலையைக் காட்டிலும் ஏற்றுமதி விலை மலிவாக உள்ளது. மத்திய அரசு கோவிட் தடுப்பு மருந்துகளை மாநிலங்களுக்குஇலவசமாகப் பெற்றுத் தரவும் இல்லை, அதற்கான நிதியுதவியும் அளிக்கவில்லை மாறாக அவற்றைத் தனியார் நிறுவனங்களுடன் போட்டி போட விட்டுள்ளது பாஜக அரசு. பைஸர், மாடர்னாநிறுவனங்கள் தடுப்பு மருந்துகளை மத்திய அரசுக்கு மட்டுமே விநியோகிக்க முடியும் என்று கூறியுள்ளன.

ஆனால் பாஜக அரசு மாநிலங்களை அந்த நிறுவனங்களிடம் நேரடியாகவே தடுப்பூசிகளை வாங்கிக் கொள்ளுமாறு பொறுப்பைக் கைகழுவிவிட்டது.

<u>அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகத்தின் நீடித்த வேலைவாய்ப்பு மையத்தின் ஆய்வாளர்கள் வெளியிட்ட உழைக்கும் இந்தியாவின் நிலைஅறிக்கை,2021</u>:

2020இல் கோவிட்டின் முதல் அலையால் இந்தியாவில் 23 கோடி மக்களின் குடும்ப வருவாய் தேசியக் குறைந்தபட்ச தினசரிக் கூலியான ரூ.375க்குக் கீழே சரிந்ததாகவும், தொற்றுநோயால் ஓராண்டில் கிராமப்புறங்களில் வறுமை விகிதம் 15 விழுக்காடும் நகர்ப்புறங்களில் கிட்டத்தட்ட 20 விழுக்காடும் அதிகரித்துள்ளது. பொது முடக்கத்தால் 46 விழுக்காட்டிற்கும் அதிகமான பெண்கள் வேலை இழந்தனர், அவர்கள் மீண்டும் வேலை வாய்ப்புப் பெறவில்லை, அதே நேரத்தில் ஏழு விழுக்காடு ஆண்களும் வேலை இழந்தனர். போக்குவரத்துக் கட்டுப்பாடுகளால் பொருளாதாரச் செயல்பாடு குறைந்து வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து 10 விழுக்காடு பாதிக்கப்படும் போது வருவாயில் 7.5 விழுக்காடு சரிவு ஏற்பட்டுள்ளது. கோவிட்-19இன் பொருளாதாரத் தாக்கத்தால் வருவாய் இழந்த மக்களின் துயர் தணிக்க அரசு ரூ.8 லட்சம் கோடி நிதித் தொகுப்பு வழங்க வேண்டும் என இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

சென்ற வருடம் மார்ச்சில் முதல் கோவிட் அலையின் போது எந்த நிதி உதவியும், துயர்தணிப்புத் திட்டங்களும் இல்லாமல் 4 மணி நேரத்திற்குள் பொது முடக்கத்தைக் கொண்டுவந்து பெருந்தவறு செய்தது நரேந்திர மோடியின் அரசு, இரண்டாம் கோவிட் அலையின் போது மீண்டும் அதே தவறு செய்துள்ளது. இரண்டாம் அலை ஓய்ந்த பின் நிதித் தொகுப்பு அறிவிக்கப்படும் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமுடக்கத்தால் வேலையிழந்து, வாழ்வாதாரம் இழந்து, கடன்பட்டு அல்லலுறுபவர்கள், இரண்டாம் அலையின் போதும், கோவிட் தொற்றுக் காற்றைக் குடித்துப் பிழைத்திருக்கச் சொல்கிறதா பாஜக அரசு? ஹங்கர் வாட்ச் என்ற அமைப்பின் ஆய்வில் விளிம்புநிலை மக்களில் பெருவாரியானோரின்வருவாயும், நுகர்வும் வீழ்ச்சியடைந்துள்ளன. அவர்கள் உட்கொள்ளும் தானியம், பருப்பு, இதர உணவுப் பொருட்களின் அளவும் தரமும் குறைந்துள்ளன. வறுமைநிலைஅதிகரித்துள்ளது.

கோவிட்-19 இரண்டாவது அலையினால் 2021 ஜூன் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி பாதிக்கக் கூடும் என்று அறிவித்த நிதி அமைச்சகம் அதைத் தடுப்பதற்காக ஏன் நிதித் தொகுப்போ திட்டங்களோ அறிவிக்கவில்லை. அவை வெறும் பெயரளவு நடவடிக்கைகளே என்பதாலா?

மேக்-இன்-இந்தியாவின் மூலம் இந்தியாவை உலகின் உற்பத்தி மையமாக மாற்றுவோம் என்று சபதமிட்டார் நரேந்திர மோடி. ஆனால் பாஜக அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்துதான் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறையின் பங்கு மிகவும் குறைந்துள்ளது. பொருளாதாரத் தரவு மற்றும் பகுப்பாய்வு மையம் (CEDA) 2020-21 ஆம் ஆண்டில் உற்பத்தித் துறையின் மூலம் பெற்ற வேலைவாய்ப்புகளின் அளவானது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததில் பாதியாகக் குறைந்துள்ளது என சுட்டிக் காட்டியுள்ளது. 2016-17இல் 51 மில்லியன் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்து வந்த உற்பத்தித் துறையானது 2020-21இல் 27.1 மில்லியன் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு அளிக்கிறது. 2016-17ல் 16.7 விழுக்காடாக இருந்த உற்பத்தித் துறையின் பங்களிப்பு 2020-21இல் 15.5 விழுக்காடாகக் குறைந்துள்ளது. மக்களின் குறைந்து போன வாங்கும் சக்தியை மீட்பதற்கான நிதித் தொகுப்பு அளிப்பதன் மூலமே நாட்டின் உற்பத்தித் துறையை மீட்டெடுத்து சரிசெய்ய முடியும். நகர்ப்புற ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதம் / வருவாய் உதவித் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

சர்வதேச உழைப்பாளர் சம்மேளனம் கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்தியாவில் வேலையின்மையின் அளவு 2020இல் 7.11 விழுக்காடாக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் மே மாதத்தில் வேலையின்மையின் அளவு 14.7 விழுக்காடாக உயர்ந்துள்ளதாகக் குறிப்பிடுகிறது. பெண்கள் மத்தியில் வேலையின்மை விகிதம் மார்ச் மாதத்தில் 12.8 விழுக்காடாக இருந்தது, ஏப்ரல் மாதத்தில் 17 விழுக்காடாக உயர்ந்துள்ளது. மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் வேலையின்மையால் பாதிக்கப்பட்டவர்களில் 83.8 விழுக்காட்டினர் 30 வயதிற்குக் குறைவானவர்களே. ஏப்ரல் மாதத்தில் மட்டும் 96 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர்.

2021 ஏப்ரல் மாதத்தில் 2.6 கோடி குடும்பங்களும், 3.7 கோடி நபர்களும் மகாத்மா காந்தி ஊரக

வேலைவாய்ப்புத் திட்டத்தில் சேர முன்வந்துள்ளனர். சென்ற ஆண்டு ஏப்ரலை விட வேலை தேடிய குடும்பங்களின் எண்ணிக்கை 91 விழுக்காடும், தனி நபர்களின் எண்ணிக்கை 85 விழுக்காடும் அதிகரித்துள்ளன. எனினும் அனைவருக்கும் வேலை கிடைக்கவில்லை. 1.52 கோடி குடும்பங்களுக்கும், 2.07 கோடி நபர்களுக்கும் மட்டுமே வேலை கிடைத்துள்ளது.

2020-21இல் 11.19 கோடி நபர்கள் சராசரியாக 51.51 நாட்கள் இத்திட்டத்தின் கீழ் வேலை பெற்றுள்ளனர். மே 17 வரை, 4.88 கோடி நபர்கள் இந்த திட்டத்தின் கீழ் வேலை கோரியுள்ளனர். இதில் 73 விழுக்காட்டினர் மட்டுமே சேர்ந்துள்ளனர். நூறு நாள் திட்டம் என்பது பெயரில்தான் உள்ளது. பெரும்பாலும் 50 நாட்களுக்கு மட்டும் வேலை தருவதும் , வேலை செய்வோருக்கு உடனடியாக ஊதியம் அளிக்காமல் நிலுவையில் வைப்பதும் இத்திட்டத்தில் வாடிக்கையாகியுள்ளது . மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் தேவையின் அடிப்படையில் வேலைகளை உருவாக்கும் திட்டம், வேலை கோரி வரும் அனைவருக்குமே நூறு நாட்களுக்கு சரியான ஊதியத்துடன் வேலை வழங்க வேண்டியது ஒன்றிய அரசின் பொறுப்பு. 2020-21இல் இத்திட்டத்திற்கு 1.11 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 2021-22 நிதியாண்டில் 73,000 கோடி மட்டுமே அரசு ஒதுக்கியுள்ளது. வேலைவாய்ப்பின்மை பெரிதும் அதிகரித்துள்ள நிலையில், நகர்புறத்திலும் இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படும் போதும் இத்திட்டத்திற்காகக் கூடுதல் நிதி இன்னும் ஒதுக்காமல் இருப்பது பாஜக அரசின் பொறுப்பின்மையையும், அலட்சியத்தையுமே பறைசாற்றுகிறது.

.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூ.15 லட்சம் கோடி மதிப்பிலான சாலைகள் அமைக்க இலக்கு நிர்ணயித்திருப்பதாக மத்திய அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதி ஆண்டில் ஒரு நாளைக்கு 40 கிலோ மீட்டர் வீதம் சாலைக் கட்டுமானப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.இது போன்ற ஒன்றுக்கும் உதவாத சாலைத் திட்டங்களில் மக்களின் வரிப்பணம் விரயம் செய்யப்படுகிறது. இதனால் பொருளாதாரமோ, நாட்டின் உற்பத்தித் திறனோ மக்களின் வாழ்வாதாரமோ மேம்படப் போவதில்லை என்பது கண்கூடு.

பொதுத் துறை நிறுவமனமான பாரத் பெட்ரோலிய சுத்திகரிப்பு நிறுவனத்தைத் தனியார்மயப்படுத்த **முயன்ற** பாஜக அரசு இப்பொழுது அதில் 100 விழுக்காடு நேரடி அந்நிய

முதலீட்டைத் அனுமதிக்க உள்ளது. அதேபோல் அனைத்துப் பொதுத்துறை சுத்திகரிப்பு நிறுவனங்களிலும் 100 விழுக்காடு நேரடி அந்நிய முதலீட்டை அனுமதிக்க உள்ளது.

கடனில் பாதிக்கப்படும் சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு நிதிக்கடன் அளிக்க சென்ற ஆண்டில் 20,000 கோடி திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 38.5 கோடி மட்டுமே கடனாக வழங்கப்பட்டுள்ளது. 332 நிறுவனங்கள் மட்டுமே பயனடைந்துள்ளதாகவும் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார். 2015 முதல் 2020 வரை மூடப்பட்ட சிறுகுறு நடுத்தர நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்து அரசு தரப்பில் எந்தத் தகவலும் இல்லை என்று பொறுப்பற்ற பதிலை அளித்துள்ளார் சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கான அமைச்சர் பிரதாப் சந்திர சாரங்கி.

கரோனா பரவலால் கடுமையாகும் பொருளாதாரச் சூழலில் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்த ரூ.50,000 கோடி கடன்நிதி அளிக்கப்படும் என தலைமைவங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் அறிவித்துள்ளார். தடுப்பூசி தயாரிப்பாளர்கள், மருத்துவ உபகரண விநியோகர்கள், மருத்துவ மனைகள், நோயாளிகள் இதன் மூலம் பயன் பெறலாம் என்று குறிப்பிட்டுள்ளார். சிறு நிதி வங்கிகள் ரூ.500 கோடி வரை சொத்து வைத்துள்ள சிறிய நுண் நிதி நிறுவனங்களுக்கு கடன் கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இது முன்னுரிமைத் துறைக்கான கடனாகக் கொள்ளப்படுவதால் இதற்கான வட்டி வீதம் குறையும். இங்கே கடன் திட்டங்களுக்கு ஒன்றும் குறைவில்லை. ஆனால் பயனாளிகளின் எண்ணிக்கை மட்டும் குறைவாகவே காணப்படுகிறது. இந்தியாவில் வணிக வங்கிக் கடனின் அளவும் ஏப்ரல் மாதத்தில் ரூ .89,087 கோடியாக குறைந்துள்ளது. வங்கிகள் கடன் அளிப்பதைக் காட்டிலும், அதிகஅளவில்அரசு பத்திரங்களில் முதலீடு செய்துள்ளன. தலைமை வங்கியின் தரவுகளின்படி, வங்கிகள் 2020-21ஆம் ஆண்டில் 5.8 லட்சம்கோடி ரூபாய் கடனளித்துள்ளன, அதை விட 1.4 லட்சம் கோடி அதிகமாக 7.2 லட்சம் கோடி அளவிற்கு அரசுப் பத்திரங்களில் முதலீடு செய்துள்ளன.

பொருளாதார மீட்சியை ஆதரிப்பதற்காக செலுத்தப்படும் பணப் புழக்கம் எதிர்பாராத விளைவாக சொத்து விலைகளில் பணவீக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, இதனால் பணப்புழக்க ஆதரவு கட்டற்று காலவரையின்றித் தொடரும் என்று எதிர்பார்க்க முடியாது என்று தலைமை வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.வட்டி வீதம் எந்நேரத்திலும் அதிகரிக்கப்படலாம்

என்பதைத்தான் சுற்றிவளைத்து இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 முதல் 2020ஆம் ஆண்டின் முற்பகுதி வரை வட்டி விகிதங்கள் மற்றும் பங்கு அபாய காப்பீடு (ஈஆர்பி) ஆகியவற்றின் வீழ்ச்சியால் பங்குகளின் விலை அதிகரித்ததாகவும்தலைமை வங்கி தெரிவித்துள்ளது. இவை ஒன்றும் எதிர்பாரா விளைவுகள் அல்ல. பணக் கொள்கையில் தளர்வு ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே உரியவருக்குக் கடன் சென்று விடும் என்பது கோட்பாட்டில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் இதனால் பங்குச் சந்தையும், ஊக முதலீடுகளுமே அதிகரிக்கின்றன என்பது பல்வேறு நாடுகளில் பல்வேறு சமயங்களில் உறுதிபடுத்தப்பட்ட உண்மை. ஆன போதும் இதை எதிர்பாரா விளைவு என்பது நவீன தாராள (neo-liberal) கோட்பாடுகளின் போதாத் தன்மையையே குறிக்கிறது.

கோவிட்-19 தாக்கத்தால் முடுக்கப்பட்ட பொருளாதார மந்தநிலையிலிருந்து மீட்சி ஏற்படுத்த வேண்டும் என அமெரிக்க மத்திய வங்கி வட்டி வீதத்தை சுழிய அளவிற்குக் குறைத்தது. இதனால் வளர்ந்த நாடுகளுக்கும், வளரும் நாடுகளுக்கும் இடையே காணப்படும் வட்டி வேறுபாட்டில் லாபம் பெற வளரும் நாடுகளில் முதலீடு செய்ய படைதிரண்டனர் அந்நிய முதலீட்டாளர்கள். அதனால் தான் இதுவரை இல்லாத அளவு 2020-21ஆம் ஆண்டில் நேரடி அந்நிய முதலீட்டின் அளவு மிகவும் அதிகமான 81.72 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது. 2019-20ஐக் காட்டிலும் நேரடி அந்நிய முத லீடு 10 விழுக்காடு அதிகரித்துள்ளது. 2019-20-ம் ஆண்டில் செய்யப்பட்ட நேரடி அந்நிய பங்கு முதலீடான $ 49.98 பில்லியன் உடன் ஒப்பிடும்போது, 2020-21-ம் நிதியாண்டில் நேரடி அந்நிய பங்கு முதலீடு 19விழுக்காடு அதிகரித்து $ 59.64 பில்லியனாக உயர்ந்துள்ளது.2020-21-ம் நிதியாண்டில் இந்தியாவில் அதிகமாக முதலீடு செய்த நாடுகளில் சிங்கப்பூர் முதலிடத்திலும் (29%), அதற்கடுத்த இடங்களில் அமெரிக்கா (23%) மற்றும் மொரிஷியஸ் (9%) ஆகிய நாடுகளும் உள்ளன.இதை ஒரு பெரும் வெற்றியாகக் கொண்டாட ஒன்றுமே இல்லை. ஏனென்றால் இத்தகைய நேரடி அந்நிய முதலீடுகள் இந்தியாவில் புதிய வேலைவாய்ப்புளை உருவாக்குவதில்லை, மக்களின் வாங்கும் சக்தியையோ, வாழ்க்கைத் தரத்தையோ உயர்த்தப்போவதில்லை, இவை இந்தியாவின் செல்வத்தை அபகரிக்கும் ஊக முதலீடுகள் தான் எனும் போது இதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம் தேவையா? இவை இந்தியாவின் உற்பத்தித்திறனையும், வேலைவாய்ப்பையும் அதிகரிக்கும் விதத்தில் செய்யப்பட்ட நீடித்த ஆக்கபூர்வமான முதலீடுகள் அல்ல. கிடைத்த வரை லாபம் பெற்று எப்பொழுது

வேண்டுமானாலும் ஓடத் தயாராய் இருக்கும். சந்தர்ப்பவாத முதலீடுகள். கோவிட்-19ன் இரண்டாம் அலையால் ஆபத்து நேரிடும் என்று ஏப்ரல் மாதத்தில் மட்டும் இந்திய முதலீட்டுச் சந்தையில் இருந்து 9,435 கோடி அந்நிய முதலீடுகள் வெளியேறின. மே மாதத்தில்1,729.4 கோடி நிகர அந்நிய முதலீடுகள் வெளியேறியுள்ளன. அமெரிக்க மத்திய வங்கி வட்டிவீதத்தை ஏற்றும் போது அந்நிய முதலீடுகளின் தொடர் ஓட்டத்தைக் காணலாம்.

அதிகரித்து வரும் விலைவாசியும், சுகாதாரச் செலவுகளும் மக்களின் நிகர வருவாய் மதிப்பையும், நுகர்வையும் மேலும் வீழ்ச்சியடையச் செய்துள்ளது. இந்தக் கொரோனா காலத்தில் உழைக்கும் மக்களின் வருவாயும் வாங்கும்திறனுமே வீழ்ச்சியடைந்துள்ளன. பெருநிறுவனங்கள் பல உத்திகளின் மூலம் தங்கள் வருவாயை அதிகரித்துள்ளன. 2020-21ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் பெருநிறுவனங்களின் நிகர விற்பனையில் 12.5 விழுக்காடு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 213 பெருநிறுவனங்களின் வருவாய் 9.5 விழுக்காடு உயர்ந்துள்ளதாக நிதி அமைச்சக அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அம்பானி 76.5 பில்லியன் டாலர் நிகர சொத்து மதிப்புடன் ஆசியாவின் முதல் பெரும் பணக்காரராக வளர்ந்துள்ளார். அதானி இப்போது 66.5 பில்லியன் டாலர் நிகர சொத்து மதிப்புடன் ஆசியாவின் இரண்டாவது பெரும் பணக்காரராக உயர்ந்துள்ளார்.

5 கோடிக்கு மேல் லாபம் பெறும் பெருநிறுவனங்கள் தங்கள் லாபத்தில் 2 விழுக்காடு பெருநிறுவனச் சமூகப் பொறுப்பாண்மைக்கான திட்டங்களில் செலவிட வேண்டும். தற்போது பி.எம்.கேர்ஸ் நிதிக்கான பெருநிறுவனங்களின் நன்கொடைகள் அவற்றின் பெருநிறுவன சமூகப் பொறுப்பாண்மைக்கான செலவுகளாகக் கருதப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. பி.எம்.கேர்ஸ் நிதிக்கு யார் நன்கொடை வழங்குகிறார்கள் என்பதை அறிவதில் வெளிப்படைத் தன்மை இல்லாத போது இத்தகைய அறிவிப்பு பெருநிறுவனங்கள் வரி ஏய்ப்புச் செய்வதற்குச் சாதகமாகவே அமையும்.

இந்தியாவில் இல்லங்களின் சேமிப்பு சென்ற ஆண்டு ஏப்ரல்-ஜூனில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28.1 விழுக்காடாக இருந்தது. டிசம்பர் காலாண்டில் 22.1 விழுக்காடாக்க் குறைந்துள்ளது. இல்லங்களின் சேமிப்பு குறைந்து வருவதும் வருவாய் வீழ்ச்சியடைவதும் உள்நாட்டு நுகர்வு மீது தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பொருளாதார வல்லுநர்கள்

எச்சரிக்கின்றனர். மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நுகர்வானது கிட்டதட்ட 60 விழுக்காடு பங்கு வகிக்கிறது.

இந்தியாவில் உழைப்பு நேரத்தை அதிகமாக்கி, உழைப்புச் சுரண்டலை மும்முரமாக்கும் விதமாக தொழிலாளர் சட்டங்களில் திருத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் நீண்ட நேரம் பணி செய்வது உடல் நலத்திற்குக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதில் தெற்காசிய நாடுகள், மேற்கு பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் மக்கள் அதிக பாதிப்பைச் சந்திக்கிறார்கள் என்றும் 194 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில் வாரத்திற்கு 55 மணி நேரங்களுக்கு மேலாகப் பணி புரிபவர்கள் 35% பக்கவாதத்தால் பாதிக்கப்படவும், 17% இதயப் பிரச்சனையால் பாதிக்கப்படவும் வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டில் டாலர் குறியீடு ஜனவரி மாதத்தில் ஒரு முறை, மே மாதத்தில் ஒரு முறை என இரண்டு முறை 90க்கும்கீழே வீழ்ந்துள்ளது. இதனால் டாலரின் ரூபாய் மதிப்பும் மற்ற ஆசிய நாணயங்களின் மதிப்பும் ஏற்றம் பெற்றுள்ளது. உலகளாவிய அந்நியச் செலாவணி இருப்புக்களில் அமெரிக்க டாலரின் பங்கு 25 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 59 விழுக்காடாகக் குறைந்துள்ளது. இதுடாலரின் வீழ்ச்சியையும் பிற நாணயங்களின் எழுச்சியையுமே குறிப்பிடுகிறது.

**<u>பணவீக்கம்:</u>**

மொத்தவிலைப் பணவீக்கம் 8 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 7.39 விழுக்காடாக உயர்ந்துள்ளது, இது பெட்ரோல், டீசல், உலோகங்களின் விலையுயர்வினாலே இந்தளவு அதிகரித்துள்ளது. ஏப்ரலில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறைப் பணவீக்கத்தின் அளவு 4.29 விழுக்காடு அதிகரித்துள்ளது, உணவுப் பொருட்களின் விலைவாசி 2.02 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 14.18 விழுக்காடு குறைந்துள்ளது. பழங்களின் விலைவாசி 9.81 விழுக்காடு உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 7.51 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை 10.55 விழுக்காடு உயர்ந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 25.91 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன், இறைச்சியின் விலைவாசி

16.68 விழுக்காடு உயர்ந்துள்ளது.

மார்ச்சில் தொழில்துறை வளர்ச்சி:

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின்படி மார்ச்சில் மொத்த உற்பத்திக் குறியீடு 22.4 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற வருடம் மார்ச் மாதத்தில் கொரோனா தாக்கத்தை கட்டுப்படுத்த பொதுமுடக்கம் ஏற்படுத்தப்பட்டதால் பொருளாதாரம் கடுமையான சரிவை சந்தித்தது என்பதால்அதனுடன் ஒப்பிடும்போது தற்போது அதிக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது போன்ற தோற்றம் ஏற்பட்டுள்ளதே தவிர இது உண்மையான வளர்ச்சியைக் குறிக்காது என்பதும் குறிப்பிடத்தக்கது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறையில் உற்பத்தி 6.1 விழுக்காடு அதிகரித்துள்ளது. செய்பொருளாக்கத் துறையில் உற்பத்தி 25.8 விழுக்காடு சரிவடைந்துள்ளது. மின்சார உற்பத்தி 22.5 விழுக்காடு அதிகரித்துள்ளது.

பயன்பாட்டு அடிப்படையிலான வகைப்பாட்டில் முதன்மைப் பொருட்களின் உற்பத்தி 7.7 விழுக்காடு அதிகரித்துள்ளது. மூலதனப் பொருட்களின் உற்பத்தி 41.9 விழுக்காடும், உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 27.5 விழுக்காடும் வீழ்ச்சியடைந்துள்ளது. கட்டுமானப் பொருட்களின் உற்பத்தி 31.2 விழுக்காடும், இடைநிலைப் பொருட்களின் உற்பத்தி 21.2 விழுக்காடு அதிகரித்துள்ளது. நீடித்த நுகர்வுப்பொருட்களின் உற்பத்தி 54.9 விழுக்காடு அதிகரித்துள்ளது.

**2020-21** நிதியாண்டின் தேசிய வருவாய் (தற்காலிக மதிப்பீடு):

தேசியப் புள்ளியியல் அலுவலகம் 2020-21 நிதியாண்டின் தேசிய வருவாய் குறித்துத் தற்காலிக மதிப்பீடுகளையும் நான்காம் காலாண்டின் (ஜனவரி-மார்ச்) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளையும் வெளியிட்டுள்ளது.

2020-21ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு ₹135.13 லட்சம் கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2019-20இல் 4.0 விழுக்காடாக அதிகரித்த வளர்ச்சி விகிதம் 2020-21இல் 7.3 விழுக்காடு குறுக்கமடைந்துள்ளது. தனிநபர் வருவாய் 8.2 விழுக்காடு குறுக்கமடைந்துள்ளது.

2020-21 நிதியாண்டின் நான்காம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.6 விழுக்காடு வளர்ச்சியுடன் ₹38.96 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2020-21 நிதியாண்டில் மொத்த மதிப்புக் கூட்டலின் மதிப்பு 6.2 விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளது. விவசாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி 3.6 விழுக்காடு அதிகரித்துள்ளது , உற்பத்தித் துறையின் வளர்ச்சி 7.2 விழுக்காடும், மின்சாரம், நீர்வழங்கல், பிற சேவைகளின் வளர்ச்சியானது 1.9 விழுக்காடும் அதிகரித்துள்ளது. சுரங்கத் தொழில்துறையின் வளர்ச்சி 8.5 விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளது, வர்த்தகம், போக்குவரத்து, ஹோட்டல், தகவல் தொடர்புத் துறைகளின் வளர்ச்சி 18.2 விழுக்காடும், பொது நிர்வாகம், பாதுகாப்புத் துறையின் வளர்ச்சி 4.6 விழுக்காடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

2020-21 நிதியாண்டில் மொத்த மதிப்புக் கூட்டலின் மதிப்பு 3.7 விழுக்காடு அதிகரித்துள்ளது. விவசாயம் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி 3.1 விழுக்காடு அதிகரித்துள்ளது , சுரங்கத் தொழில் 5.7 விழுக்காடு சரிந்துள்ளது. உற்பத்தித் துறையின் வளர்ச்சி 6.9 விழுக்காடும், மின்சாரம், நீர்வழங்கல், பிற சேவைகளின் வளர்ச்சியானது 9.1 விழுக்காடும் அதிகரித்துள்ளது. வர்த்தகம், போக்குவரத்து, ஹோட்டல், தகவல் தொடர்புத் துறைகளி ன்வளர்ச்சி 2.3 விழுக்காடு வீழ்ச்சியடைந்துள்ளது. பொது நிர்வாகம், பாதுகாப்புத் துறையின் வளர்ச்சி 2.3 விழுக்காடு அதிகரித்துள்ளது.

<u>ஏப்ரலில் தொழில்துறை வளர்ச்சி:</u>

இந்தியாவின் தொழில் துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கியத் தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக் குறியீடு ஏப்ரலில் 15.1 விழுக்காடு சரிவு கண்டுள்ளது. சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தின் உற்பத்தி நிலையுடன் ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 46 விழுக்காடு குறைந்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 4.6 விழுக்காடும், பெட்ரோலிய சுத்திகரிப்புப் பொருட்கள்உற்பத்தி 1.1 விழுக்காடும், உரஉற்பத்தி5.3 விழுக்காடும் குறைந்துள்ளன. இயற்கை எரிவாயு உற்பத்தி 12.3 விழுக்காடும், எஃகு உற்பத்தி 20.7 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 15.2 விழுக்காடும், மின்சார உற்பத்தி 3.3 விழுக்காடும் சரிந்துள்ளன.

இந்தியா, இங்கிலாந்துடன் 1.4 பில்லியன் டாலர் வர்த்தக ஒப்பந்தத்தை அறிவித்துள்ளது. இதனால் இங்கிலாந்தில் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும். இங்கிலாந்துப் பொருட்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதனால் எவ்விதத்தில் இந்தியா பயனடையப் போகிறது என்பது குறித்துத் தெளிவான விடை இல்லை.

ஏழை நாடுகளின் பொருளாதாரங்கள் வளராத போது வட்டி விகிதங்கள் அதிகரிக்கும் அபாயத்தை எதிர்கொள்கின்றன, மேலும் கடனை அடைக்க வேண்டிய நிர்ப்பந்தம் (குறிப்பாக டாலரில் மதிப்பிடப்படும் போது) அவற்றின் கழுத்தை நெரிப்பதாகவும்,இது அந்நாடுகளை மட்டுமல்லாது ஒட்டுமொத்த உலகப்பொருளாதாரத்தின் மீட்சியையும் பாதிக்கும் என்றும், சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜீவாக வலை தெரிவித்துள்ளார். ஆனால் ஏழைநாடுகளின் கடனைத் தள்ளுபடி செய்வதற்கான எந்தத் திட்டமும் முன்வைக்கப்படவில்லை. அவற்றின் கடன் சுமையைக் குறைக்க குறைந்தது சிறப்பு வரைவு உரிமைகளையாவது உருவாக்க வேண்டும் என்ற முன்னெடுப்பும் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

2020 ஏப்ரல் மாதத்தில் ஜி-20 நாடுகளின் கடன் சேவை இடைநிறுத்த முயற்சியின் மூலம் 72 நாடுகளின் வெளிநாட்டு அரசு தரப்புக் கடனைத் திருப்பிச் செலுத்துவதைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தற்பொழுது இத்திட்டம் டிசம்பர் 2021 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2020ஆம் ஆண்டில் வளரும் நாடுகள் செலுத்த வேண்டிய கடன்தொகையில் வெறும் 1.66 விழுக்காட்டிற்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும் என்பது யானைப் பசிக்கு சோளப்பொறி போலத்தான்.

வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது வளரும், ஏழை நாடுகளின் பொருளாதாரக் குறுக்கமும், வருவாய் வீழ்ச்சியும் மிகவும் கடுமையாக உள்ளது. வளர்ந்த நாடுகள் தடுப்பு மருந்துகளாலும் தங்களது பொருளாதாரமேலாதிக்கத்தாலும் விரைவாக மீண்டெழுந்து வருகின்றன. வளரும் நாடுகளும், ஏழை நாடுகளும் மேலும் பொருளாதாரப் பின்னடைவை அடைந்துள்ளன. ஏழை நாடுகளுக்குத் தடுப்பு மருந்துகள் கிடைக்கவில்லை, கடன் சுமையால் பொருளாதாரக் குறுக்கமும், வருவாய் வீழ்ச்சியும் மேலும் அதிகரித்துள்ளன. அங்கே வேலையின்மையும்,

பட்டினியும், வறுமையுமே வளர்ந்துள்ளன. முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வுகளையும், இடைவெளிகளையும் கொரோனா தொற்று மேலும் அதிகரித்துள்ளது. முதலாளித்துவக் கொரோனா வளர்ந்த நாடுகளுக்கே சாதகமாகச் செயல்பட்டு, வளரும், ஏழை நாடுகளில் வளர்ச்சியின்மையையும், வறுமையையும் வளர்த்துள்ளது.

உலகளவில் இதுவரை 17 கோடிக்கும் மேலானோர் கோவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 35 லட்சத்துக்கும் மேலானோர் இறந்துள்ளனர். கரோனா தடுப்பு மருந்தைப் பெருவாரியாகக் பெற்றுக் கொண்ட இஸ்ரேல், அமெரிக்கா, பிரிட்டன் ஐரோப்பிய நாடுகளில் இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது. சென்ற ஆண்டு அக்டோபரில் இந்தியாவும், ஆஃப்ரிக்காவும் உலக வர்த்தக மையத்தில் கோவிட் தடுப்பு மருந்துகள் மீதான காப்புரிமையை, காப்புரிமைப் பாதுகாப்பிற்கான ஒப்பந்தத்திலிருந்து தற்காலிகமாக விலக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தன. கோவிட் தடுப்பு மருந்துகளில் பெருமளவு பெற்றுக் கொண்ட வளர்ந்த நாடுகள் இதற்குத் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தன. இப்பொழுது அமெரிக்கா அந்தக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளித்த போதும், பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், சுவிட்சர்லாந்து, ஜப்பான் ஆகிய வளர்ந்த நாடுகள் எதிர்ப்பைக் கைவிடவில்லை. டிசம்பர் மாதத்திற்குள் இறுதி முடிவு எடுக்கப்படும் என நம்பப்படுகிறது. கோவிட்-19க்கு எதிரான உலகப்போரை அவ்வளவு எளிதில் முடிவுக்குக் கொண்டுவர ஆட்சியாளர்களுக்கு மனமில்லை. சந்தர்ப்பவாத மருந்து நிறுவனங்கள் பெருலாபம் பெறுவதற்குகூடுதலாக அவகாசத்தை பெற்றுத் தருகிறார்கள். அதனால்தான் நிறுத்தி நிதானமாகப் பத்து சுற்றுகளுக்கு மேல் பேச்சு வார்த்தையின் மூலம் போக்கு காட்டி வருகிறார்கள். இதன் முடிவு என்ன வென்று டிசம்பரில்தான் தெரிய வரும். கோடிக்கணக்கான மக்கள் இறந்து வரும் போது வெறும் ஒரு மாதக் காப்புரிமை விலக்கு பெற ஒரு வருடமாகப் பேச்சுவார்த்தை செய்யவேண்டுமா. இவ்வளவு நெருக்கடியான இக்கட்டான நிலையிலும் பெருநிறுவனங்களின் லாபத்தைப் பாதுகாப்பதற்கான, செல்வந்தர்கள் பொழுதைப் போக்குவதற்கான அரட்டை அரங்கமாகத்தான் செயல்படுகிறது உலக வர்த்தக மையம். உதவி செய்வது போல் போக்கு காட்டி கழுத்தை அறுக்கும் சர்வதேச அமைப்புகள் துயரம் தெரிவிக்கின்றன. நல்ல வேளை நரேந்திர மோடி அளவிற்கு முதலைக் கண்ணீர் வடிக்கவில்லை.

## உழவர் அரண் அறிக்கை:

# கர்நாடகம் மேக்கேதாட்டு அணை கட்டுவதைத் தடுக்க அவசர நடவடிக்கை தேவை



நீண்ட பல ஆண்டுகளுக்குப் பின் இந்த ஆண்டு மேட்டூர் அணை உரிய நாளில் திறக்கப்பட்டது என்ற நமது மகிழ்ச்சி நிலைக்கவில்லை.

முடியுமானால் தமிழ்நாட்டுக்குக் காவிரியில் சொட்டுநீரும் விடாமலிருப்பதுதான் கர்நாடகத்தின் வஞ்சக எண்ணம். இந்திய ஒன்றிய அரசின் துணையோடு இந்த எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள அதன் அண்மைய முயற்சிதான் காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டுவில் அணைகட்டுவது.

அனைத்திந்தியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வு வழக்குப்பதிவு செய்து மேக்கேதாட்டு அணைகட்டும் முயற்சிக்குத் தடை விதித்ததோடு, அணைகட்டும் முன்னேற்பாடுகள் நடக்கின்றனவா என்பதைக் கண்டறிந்து அறிக்கை அளிக்க ஆய்வுக் குழுவும் அமைத்திருந்தது. இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனத்துறை அனுமதி பெறாமல் அணைகட்டும் முயற்சியில் ஈடுபடலாகாது என்றும் ஆணையிட்டிருந்தது. கர்நாடக அரசும் தமிழ்நாடு அரசும் வருகிற சூலை 7ஆம் நாள் தங்கள் தரப்பை விளக்குவதற்கும் நாள் குறித்திருந்தது.

தென்மண்டல அமர்வின் இந்த ஆணையை எதிர்த்துக் கர்நாடக அரசு அனைத்திந்தியப் பசுமைத் தீர்ப்பாயத்தில் முறையீடு செய்தது. தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு நீதியர் ஏகே கோயல்




தமிழ்நாட்டின் கருத்தைக் கேட்காமலே சென்ற சூன் 18ஆம் நாள் கர்நாடகத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். தென்மண்டல அமர்வின் தடை இதனால் விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டது.

இப்போதும் கர்நாடகம் மேக்கேதாட்டு அணைகட்ட அனுமதி வழங்கப்படவில்லை என்றாலும், கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா உடனே அணைகட்டுவோம் என்று அறிவித்து விட்டார். இன்னும் நடுவணரசின் சுற்றுச்சூழல் வனத்துறை அனுமதி வழங்கவில்லை என்பது பற்றி அவர் கவலைப்படவில்லை. ஒன்றிய அரசு இப்போதும் கர்நாடகத்தின் அடாவடித்தனங்களுக்குத் துணைநிற்கும் என்பது அவர் நம்பிக்கை.

கடந்த கால வரலாற்றிலிருந்து பாடம்பெற்றுத் தமிழக அரசு எச்சரிக்கையுடன் இருந்திருக்க வேண்டும். இப்போதாவது விழித்துக் கொள்ளத் தவறினால் தமிழ்நாட்டின் உயிர்நாடியான காவிரி பறிபோய் விடும் ஆபத்து உள்ளது. ஒரு நொடியும் தாமதியாமல் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என உழவர் அரண் வலியுறுத்துகிறது.

காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டுவில் கர்நாடகம் அணை கட்டும் முயற்சியை முறியடித்துக் காவிரி உரிமையை மீட்கும் போராட்டத்திற்கு அணிதிரளுமாறு தமிழக உழவர்களையும் தமிழ்நாட்டு மக்களையும் அறைகூவி அழைக்கின்றோம்!

**அருண் மாசிலாமணி**

அமைப்பாளர், உழவர் அரண்

நாள்: 21.06.2021

# நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (19):

## ஆசிரியர்: சிரஸ்ரீதாஸ்குப்தா

## தலைப்பு: நேரு தலைமையிலான அரசின் பங்கு



இந்திய தேசிய அரசின் உருவாக்கம் என்பது ஒரு 'நவீன சமுதாயத்தை'க் கட்டியெழுப்புவதற்கான நேருவின் பார்வையை அரசின் தத்துவமாக ஏற்றுக் கொள்வதிலும், அரசு தலைமையிலான முதலாளித்துவத்தை வளர்ப்பதற்கான அதன் 'வளர்ச்சி' நிகழ்நிரலிலும் வேரூன்றியுள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு முதல் இரண்டு பத்தாண்டுகளில் மிக முக்கியமான வளர்ச்சியானது காலனிய காலத்தில் தோன்றிய நிறுவன ஏற்பாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலையீடுகள் மூலம் இந்தியாவில் மூலதனத் திரட்டலின் ஆட்சியை நிறுவுவதாகும். இந்தத் தலையீடும், தலையிடாமையும் தான் 1960களில் தெளிவாகக் காணப்பட்ட, மற்றும் 1965-66 நெருக்கடியில் உச்சக்கட்டத்தை அடைந்த இந்த நிறுவனங்களின் முரண்பாடுகளை வரையறுத்தன.

காங்கிரஸ் தலைமையிலான அரசின் 'நவீனமயமாக்கல்' திட்டத்தில் முதலாளித்துவப் பாதையின்

தனித்தன்மை சுதந்திரத்திற்குப் பிறகு மூன்று முக்கியக் கொள்கை முடிவுகளில் சுருக்கமாகக் கூறப்பட்டது - அவையாவன: 1.தனியார் சொத்தின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான முடிவு, 2. திட்டமிடலின் மூலம் வளர்ச்சிக்கான வளங்களை ஒதுக்குதல், 3. 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் வெளிநாட்டு மூலதனத்திற்கு எதிராகப் பாகுபாடின்மையைக் கொண்டுவருவதற்கு வழிவகுத்த 1949ஆம் ஆண்டு விவாதங்களில் நேரு 'வெளிநாட்டு மூலதன முதலீட்டுக்கு நிலையான களத்திற்கான உத்தரவாதம் அளித்தமை.

இவை இந்தியாவில் காங்கிரஸ் தலைமையால் உறுதிப்படுத்தப்பட்ட முடிவுகள், மேலும் காங்கிரஸ் அமைப்பிலும், மூலதனத்தின் பிற 'சமூக அமைப்புகளிலும்உயர் மட்டங்களில் இருந்த முன்னணி முதலாளிகளால் அங்கீகரிக்கப்பட்டவை. அடிப்படை வளர்ச்சி என்பது சொத்துரிமை, மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான உறவு ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட நிறுவனமயக் கட்டமைப்பில் உள்ளார்ந்ததாகும். சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் மூலதனத் திரட்டலுக்கான ஆட்சியில் சொத்துறவுகளின் நிறுவனமயமாக்கத்தையும் தொழிலாளர் உரிமைகளின் கட்டமைப்பையும் ஆய்வு செய்வோம்.

<u>இந்திய முதலாளித்துவத்தின் வணிகமுதல்வாதஅடிப்படை:</u>

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களுக்கு இடையே, இந்தியாவில் முதல் கட்டப் பொருளாதாரப் பல்வகைப்படுத்தல்நடைபெற்றது. உற்பத்தியில் சாத்தியமான இலாபங்களுக்கான உதாரணம் நிறுவப்பட்டபின், வர்த்தகம், நிதித்துறைகளில்பணம் ஈட்டிய இந்திய முதலாளிகள் தொழில்துறையில் முதலீடு செய்யத் தொடங்கினர். 1914க்கும் 1939க்கும் இடையில், நவீனத் தொழில்களில் இந்திய முதலாளிகளின் பங்கு வேகமாக வளர்ந்தது. துணி, சர்க்கரை,தீப்பெட்டிகள் போன்ற நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியில் இந்தியத் தொழில்துறை தன்னிறைவு அடைந்தது. பருத்தி ஆலைகள், அரிசி மற்றும் எண்ணெய் ஆலைகள் மற்றும் பிற சிறு அலகுகள்முதலாம் உலகப் போருக்கு முன்பே உருவாக்கப்பட்டன.

1939இல், பருத்தி ஆடை உற்பத்தியில் இந்தியா கிட்டத்தட்ட தன்னிறைவு பெற்றது. இரண்டாம் உலகப் போரின் போது இந்தியாஒரு பெரும் ஏற்றுமதியாளராக மாறியது. சர்க்கரைஆலைத்துறை

உள்நாட்டுத் தேவைகளை நிறைவுசெய்யும் அளவுக்கு வளர்ந்திருந்தது. இந்தக் காலகட்டத்தில் எஃகு, சிமெண்ட்ஆலைகள் பெரும் தொழில்களாக உருவெடுத்தன. இருப்பினும், 1939இல் இந்தியா எந்திரங்கள், இயந்திரக் கருவிகள் மற்றும் வேதிப்பொருட்களுக்கு இறக்குமதியைச் சார்ந்திருந்தது.பிர்லா சகோதரர்கள்1941இல் ஆடை இயந்திர நிறுவனத்தைஏற்படுத்தியதை நவீனப் பருத்தி ஆடைகளுக்கான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழில்துறையின் ஆரம்பமாகக்குறிப்பிடமுடியும். மூலதனப் பொருட்களைஉற்பத்திசெய்யும்ஆலைகள் வளர்ச்சியடையவில்லை. ஒட்டுமொத்தத் தொழில்துறையும் ஐரோப்பியத் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களையும் பெரிதும் சார்ந்திருந்தது. வெளிநாட்டு முதலாளிகள் பிரதானத் தொழில்துறைகளில் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தினர், சர்வதேச கார்டெல்கள் இந்தியத் தொழில்துறையின் பெரும்பகுதியை மறைமுகமாக நிர்வாக முகமை அமைப்புகள் மூலம் கட்டுப்படுத்தினர். ஆகவே, சர்வதேச ஏகபோக மூலதனத்தின் மீது வளர்ந்து வரும் இந்திய மூலதனத்தின் தொழில்நுட்பச் சார்பு வடிவத்தில் முதலாளித்துவ உறவுகளின் கட்டமைப்பில் தொழில்நுட்பத்தடைநிறுவப்பட்டது.

அரசு தலைமையிலான முதலாளித்துவபாதையின் மையப் பணிகளில் ஒன்று, பிரதானமாகஇருந்த வணிக மூலதனத்தின் ஒரு பகுதியையாவது தொழில்துறை மூலதனமாய் மாற்றுவதாகஇருந்தது. உண்மையில், இது சுதந்திரத்திற்கு பிந்தைய காலத்தில் முயற்சி செய்யப்பட்ட மிக முக்கியமான மாற்றமாகும். சுதந்திரத்தின்போது இந்திய முதலாளிகளின் இலாபங்களுக்கான வரம்புகள் இலாபத்தின் மீதான அரசின் கட்டுப்பாடுகளால்ஏற்படவில்லை.மாறாக காலனியக் கொள்கைகளால் உருவாக்கப்பட்ட குறைந்த உற்பத்தித் திறனுக்கான தளத்திலிருந்து வந்தன.

வேளாண்மை, மூலதனம், தொழில்நுட்பம் ஆகியவற்றிலான போதாமையால் / தடைகளால் தனியார் துறையின் முன்னெடுப்புகள் வரம்பிடப்பட்டிருந்தன. தேசியத் திட்டமிடல் குழுவின் முதலாளித்துவ உறுப்பினர்களைப் பொறுத்த வரை, பரந்த அளவிலான நிறுவன ஏற்பாடுகள் மூலம் முழு அளவிலான பொருளாதார நடவடிக்கைகளை லாபகரமானதாக்குவதையே தங்களுக்கான வழிமுறையாகக் கண்டனர். ஆசியாவில் 'கம்யூனிசம் வந்துவிடுமோ' என்ற அச்சம்

அதிகமாக இருந்த போது அரசுக்கும் மூலதனத்திற்கும் இடையிலான உறவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. கிட்டத்தட்ட நாற்பது கோடிக்கும் அதிகமான மக்களும், பன்முகத் தன்மையும், மோதலின் வரலாறும் கொண்ட இந்தப் பெரும் நாடு, முன்னோக்கிச் செல்லத ஒரு முதலாளித்துவ ஜனநாயகக் கட்டமைப்பையேதேர்ந்தெடுத்ததுஎன்ற உண்மை ஏற்கெனவே கம்யூனிசப் பாதையைத் தேர்ந்தெடுத்த இருநாடுகளைக் கொண்ட கண்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. எனவே இந்தியப் பரிசோதனை முதலாளித்துவ உலகிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. திட்டமிடலில் சொத்துகளை ஒழிப்பதன் அவசியத்தை முன்வைக்க வேண்டியதில்லை மாறாகத் திட்டமிடலையே மூலதனக் திரட்டலுக்குப் பயன்படுத்தலாம் என்பதை நிரூபிக்கும் முன்மாதிரியாக இந்தியா இருந்தது.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில், கனரகத் தொழிற்சாலை, உள்கட்டமைப்பு போன்ற முக்கியத் துறைகளை வளர்ச்சியடையச் செய்வதற்கான பொறுப்பை இந்தியாவில் உள்ள முதலாளிகள் ஏற்றுக் கொள்ள முன்வரவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது (FICCI, 1956). முதலாளித்துவ வர்க்கம் 'அபாயத்தை எதிர்கொள்ளவும் ஒழுங்குமுறையுடன் செயல்படவும் தயக்கம் காட்டியதால், முதலீடுகளைப் பெருமளவு அதிகரிப்பதற்கு வரம்புகள் விதிக்கப்பட்டன, இல்லையெனில் தென் கொரியாவில் ஏற்பட்டது போல் அரசு வழிகாட்டும் புதிய வணிகமுதல்வாத மாற்றத்திற்கு வழிவகுத்திருக்கக் கூடும். சுதந்திர இந்தியாவில் தேசத்தைக் கட்டமைக்கும் குறிப்பிட்ட பணி, உள்கட்டமைப்பை உருவாக்குதல், பொருளாதாரத்தின் உற்பத்தித் தளத்தை விரிவுபடுத்தி வலுப்படுத்துதல், புதிய நிதி நிறுவனங்களை அமைத்தல், பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றில் அரசே முக்கிய பங்களிப்பு தரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. பெருமூலதனம் சுதந்திர இந்திய அரசால் பெற்ற ஆதாயத்தை, முதன்மை மூலதனத் திரட்டலுக்கான தளமாக அறுவடை செய்வதற்கான அரசியல் நிலையைக் கொண்டிருந்தது. பெரும் முற்றுரிமைக் குழுக்கள் பாதுகாப்புக்கும், அபாயமின்மைக்கும், வளர்ச்சிக்குமான ஒரு வழியாக அரசுத் தலைமையிலான முதலாளித்துவத்தை ஏற்றுக் கொள்ள ஒருமித்த கருத்தை அடைந்தன.

இந்த வளரும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு அரசியல் அதிகாரம் இருந்த போதிலும், இந்த

வளர்ச்சியை ஆதரிக்கும் தனியார் தொழில் முனைவோர் தளமும் அதில் உள்ளவர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாக இருந்ததன. ‘அரசு தலைமையிலான முதலாளித்துவ’ வளர்ச்சியின் பரந்த நோக்கம் என்னவென்றால், சுதந்திர இந்திய அரசைக்கொண்டு முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு உகந்த ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதாகும், அதில் முதலாளித்துவ வர்க்கத்தினரின் மக்கள்தொகை விரிவாக்கத்திற்கு இடமளிக்க வேண்டும். உள்ளூர் ஆதிக்க வர்க்கங்கள் காலனியாதிக்கத்தில் முன்னர் பயன்படுத்தப்பட்ட சாதி, சமூகம், மதம் ஆகியவற்றின் அடிப்படையிலான சமூக உறவுகளை முறியடிக்கத் தயக்கம் காட்டின. வளர்ந்து வரும் இந்திய முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியத்தை அதிகம் நம்பியிருந்தது மட்டுமல்லாமல், நவீனமயமாக்கத்திற்கு வெகுதொலைவிலிருந்த பிற்போக்குச் சித்தாந்தங்களையும் ஆதரித்தது. அவர்கள் சமூக மற்றும் மத விஷயங்களில் மரபுவழியைப் பின்பற்றினர். குடும்ப நிறுவனங்களே வணிக அலகுகளாகச் செயல்பட்டன. சாதி, இன-மொழியியல் பிணைப்புடன் கூடிய கூட்டுக் குடும்ப அமைப்புகள் வணிக அமைப்பாக்கத்திற்கும், விரிவாக்கத்திற்கும் இன்றியமையாதவையாக இருந்தன,

ஒட்டுமொத்தமாக இந்திய முதலாளித்துவ வர்க்கம் காலனியாதிக்கக் காலத்தின் பிற்பகுதியில் ஏகாதிபத்திய ஆதரவாளராகவே இருந்தது, ஆனால் பம்பாய், அகமதாபாத்தின் ஆலை உரிமையாளர்கள் பலரும் காந்தியின் ஆதரவாளர்களாகவும் இருந்தனர். தேசிய விடுதலைப் போராட்டத்தின் வேகம் அதிகரித்தபின், சொத்துகளின் இறையாண்மைக்குக் காங்கிரஸ் தலைமை உறுதியளித்த போது மட்டுமே, ஒரு பழமைவாத சமூகப் பொருளாதார தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசின் தலைமையில் முதலாளித்துவத்தை வளர்ப்பதற்கான ஆதரவாக இந்த அணுகுமுறை மாறியது. பாலின ஒடுக்குமுறை, தீண்டாமைக்கு எதிரான திட்டங்கள் காந்திய நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக இருந்த போதிலும் சாதிக் கட்டமைப்பை, மாற்றியமைப்பதற்கான செயல்பாடுகளில் இந்திய முதலாளித்துவம் ஈடுபடவில்லை என்பதில் சமூகப் பழமைவாதம் பிரதிபலித்தது.

சுதந்திரத்திற்குப் பிறகு ஆதிக்கம் செலுத்திய வர்க்கங்கள் இந்தச் சமூக உறவுகள் எந்த வகையிலும் பாதிக்கப்படுவதை விரும்பவில்லை. ஆகவே, புதுமையும் பழமையும் கலந்த

முரண்பாடான கருத்தியல் பண்புகளுடைய சமூக உறவுகளைக் கொண்டதாக குடிமைச் சமூகம் இருந்தது. அதில் காங்கிரஸ் தலைமையிலான அரசு 'வளர்ச்சியின் இயந்திரங்களை' ஒருங்கமைத்து வழிநடத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தனியார் சொத்துகளின் இறையாண்மையையும், மூலதனத் திரட்டலுக்கான சமூகக் களங்களையும் உறுதி செய்யும் அரசு-சமூக உறவுகளின் பரிணாமக் கட்டமைப்பிற்குள் மட்டுமே மூலதனப் பெருக்கத்தை விரிவாக்கம் செய்ய முடியும். முதல் கேள்வி என்னவென்றால், முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக உறவுகளை பாதுகாத்துக் கொண்டே இந்தியாவில் முதலாளித்துவத்தை விரிவாக்கம் செய்யும். இந்த முரண்பாட்டிற்கு வழிவகுத்த நிறுவன அமைப்பை சுதந்திர இந்திய அரசு எவ்வாறு நிறுவியது?. இரண்டாவதாக, இந்த நிறுவன அமைப்பு காலனியாதிக்க கடந்த காலத்தின் காரணமாக இந்திய முதலாளித்துவம் எதிர்கொண்ட நான்கு தடைகளில் (விவசாயம், மூலதனம், தொழில்நுட்பம், நிதி) ஏதேனும் மாற்றத்தையும் கொண்டு வந்ததா என்பதுதான்.

**விவசாய வர்க்க அடிப்படையில் சாதி, ஆணாதிக்கக் கட்டுப்பாடு:**

இந்திய நிலவுடைமை வகுப்புகள் தேசியவாத இயக்கத்தின் பலவீனமான அங்கமாக இருந்தன. ஆங்கிலேயர்கள் மூன்று வகையான நில வருவாய் முறைகளைக் கொண்டிருந்தனர்: நில உரிமையாளர் அடிப்படையிலான அமைப்புகள் (ஜமீன்தாரி, மால்குசாரி என்றும் அழைக்கப்படுகின்றன), தனி சாகுபடி அடிப்படையிலான அமைப்புகள் (ரயத்வாரி) அல்லது கிராம அடிப்படையிலான அமைப்புகள் (மகல்வாரி).

இந்த அமைப்புகள் முக்கியமாகக் காலனி அரசுக்கு நில வரி செலுத்துவதற்கான பொறுப்பு யார் என்பதையும், நிலத்தில் இயல்பாக 'சொத்துரிமை' வைத்திருப்பவர்கள் யார் என்பதையும் வரையறுக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு வகையான நிலக் குடியேற்றங்களால் வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும், இவ்வமைப்புகள் அதிக வருவாய், நில வருவாய்களுக்கு பதிலாக ஜமீன்தார்கள், ராயத்துகளுக்குச் சொத்துரிமைகளை நிறுவனமயமாக்கின. நிலமுடையோர் நிலத்திற்கான வருவாய் நிலுவைத் தொகையைச் செலுத்தத் தவறினால், அது அரசால் கையகப்படுத்தப்பட்டு அதிக விலை தரும் ஏலதாரருக்கு விற்கப்பட்டது.

நில வருவாயின் சுமையும், பணப் பயிர் உற்பத்தியைத் திணித்த பணக்காரர்கள், பண வணிகர்கள், வர்த்தகர்களின் பிடியும், பண்ணைகள், நிலங்களைச் சொத்துடைமை வகுப்பிற்கு மாற்ற வழிவகுத்தது. அதிக நிலவாடகையால் சிறு, குறு, நிலமற்ற விவசாயிகள் பரவலாக மோசடி செய்யப்பட்டனர். ஆரம்பத்தில் நிலத்தின் மீது தனியுரிமைக் கட்டுப்பாட்டை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட இந்த நிலக் குடியேற்றங்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் பழைய நிலக்கிழாரிய மேலடுக்கை பலவீனப்படுத்தின. வணிகர்கள், பணக்காரர்கள் கிராமப்புற சமுதாயத்தில் ஊடுருவி, வீழ்ச்சியடைந்த நில உரிமையாளர்களுக்கும் வறிய குத்தகைதாரர்களுக்கும் கடன் ஆதாரங்களாக மாறினர். விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் வணிகர்கள் வயல்களிலிருந்து பொருட்களைப் வட்டார சந்தைப்படுத்தும் மையங்களுக்கு மாற்றும் பரிவர்த்தனைகளில் பங்கேற்றனர்.

பிரிட்டிஷ் இந்தியாவில் நிலத்தைச் சரக்காக்குவது ஒரேசீரான பண்பாக எங்கும் காணப்படவில்லை. ஆனால் எல்லா இடங்களிலும் அதிக வாடகை பெறப்பட்டது. எவ்வாறாயினும், முதலாளித்துவச் சமூக உறவுகளுக்கு அவசியமில்லை. விவசாயிகளின் பெரும் பகுதியினர் சாதி, ஆணாதிக்கம் என்ற இரட்டை அமைப்பின் அடிப்படையில் கட்டாய உழைப்பு, அடிமைத்தனம், பரம்பரைத் தொண்டூழியம் ஆகியவற்றால் கட்டுண்ட குத்தகையாளர்களாக, கடன்பட்டவர்களாக இருந்தனர்.

முகாலாய ஆட்சிக் காலத்தில் நிலமற்றிருப்பதே உழைப்பாளர் சந்தை உருவாவதற்கும் அவர்களின் பெருமளவிலான இடப்பெயர்வுக்கும் காரணமாக அமைந்தது.

ஜமீன்தார்கள், பெரும் விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் கூலியாட்களைக் கொண்டு பயிரிட்டனர், அவர்களுக்குக் கூலி பணமாகவும், தானியமாகவும் அளிக்கப்பட்டது. சில பகுதிகளில் அரையடிமைத்தன நிலைமைகள் காணப்பட்டன. காலனியாதிக்க அரசின் நில உரிமைகள், வாடகை முறைகள் பிரித்தானிய இந்தியா முழுவதிலும் பெருமளவில் மறுசீரமைக்கப்பட்டதால் பொருளாதாரம்சாரா அடக்குமுறை, வறுமை, பசி, பஞ்சத்தால் பெருமளவில் வெளியேற்றப்பட்ட மக்களால் உடைமையற்ற வர்க்கத்தின் வளர்ச்சி

தீவிரமடைந்தது.

பதவியிலிருந்து அகற்றப்பட்ட சில இளவரசர்கள், ஜமீன்தார்கள், நிலமிழந்த பெரும் நிலக்கிழார்கள், சாதி மத நிறுவனங்களின் தலைவர்கள், பிரித்தானிய ஆட்சியாளர்களால் கொண்டுவரப்பட்ட காலனிய மாற்றம் தங்கள் ஆட்சி அதிகாரம் தொடர்வதற்கு அச்சுறுத்தலாக இருக்கக் கண்டனர். சிலர் காலனிய ஆட்சியாளர்களுடன் ஒத்துழைத்தாலும், அவர்களில் பலர் வெளிநாட்டினர் ஆட்சியை எதிர்ப்பதில் சமரசமின்றிச் செயல்பட்டனர். இதுவே 1857இல் நடந்த முதல் சுதந்திரப் போருக்கான பின்னணியாக அமைந்தது. பிரித்தானியக் காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தின் இந்த ஆரம்பக் கட்டங்களில் போர்க்குணமிக்க தேசியவாதம் முகலாய சாம்ராஜ்யத்தை மீட்டெடுப்பதன் மூலம் அந்நிய நுகத்தடியிலிருந்து விடுதலை பெற முடியும் என்ற அடிப்படையையும், வர்ணாசிரம, சாதி, ‘இந்து’ மரபையும் கொண்டிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து, குறிப்பாக 1857 எழுச்சியின் அடிபணியலுக்குப் பின்னர் மறுமலர்ச்சி என்பது மட்டும் மெதுவாக வீழ்ந்து வரும் பழைய ஆளும் வர்க்கத்திற்குப் பாதுகாப்பாக இருக்கவில்லை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் அதன் மாறிய வடிவங்களாக வளர்ந்து வந்த முதலாளித்துவ அறிவுஜீவிகள் சாதியையும், ஆணாதிக்கத்தையும் நியாயப்படுத்தினார்.

சாதி, ஆணாதிக்க, நிலக்கிழாரிய அடிமைத்தனம், அடிமைத்தனத்தில் வேறுபட்ட வகைகளைக் கொண்ட விவசாய உறவுகள் மற்றும் காலனிய முதலாளித்துவ உறவுகளின் விசித்திரமான கலவையே வர்க்க உருவாக்கத்தின் அடிப்படையாக அமைந்தது.

1857க்குப் பிறகு, பிரித்தானிய அரசு இளவரசர்கள், ஜமீன்தார்களுடனான தொடர்புகளைப் புதுப்பித்து வலுப்படுத்தும் கொள்கையைப் பின்பற்றியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தேசியவாத அரசியல் எழுச்சியின் போது, காலனியாதிக்கத்துடனான தன் உறவுகளை நிலக்கிழாரியம் புதுப்பித்துக் கொண்டது.

காலனியாதிக்கத்தை எதிர்க்கும் கிளர்ச்சிகள் ஆதிக்க வர்க்கங்களின் பாதுகாப்பிற்காக மட்டும்

செய்யப்படவில்லை. இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராகக் 'கீழ் வகுப்பு' விவசாயிகள் மேற்கொண்ட எழுபத்தேழு கிளர்ச்சிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவை 'சீர்திருத்தம்' மற்றும் 'மறுமலர்ச்சி'க்கான கூறுகளைக் கொண்டிருந்தன, இக்கிளர்ச்சிகள் நில உரிமை, வருவாய் அமைப்புகளையும் கடுமையாக எதிர்த்தன. ஜோதிபா புலே தலைமையிலான சத்யாசோதக் இயக்கம் போன்ற சாதி எதிர்ப்பு இயக்கங்கள் சுயமரியாதை, சமூக நீதிக்கான போராட்டத்துடன் அதிக நிலவாடகை, கந்துவட்டி ஆகியற்றிற்கு எதிரான போராட்டத்தையும் இணைத்தன. கம்யூனிஸ்ட் தலைமையிலான விவசாய இயக்கங்களான தெபாகா, தெலங்கானா எழுச்சிகளும், நிலக்கிழார்கள், குத்தகைப் பண்ணையார்கள் அடக்குமுறைக்கு எதிராகவும், நிலம் மற்றும் பயிர்கள் மீதான சொத்துரிமைக்கு எதிராகவும் போராட்டத்தில் ஈடுபட்டன.

நிலம்சார் சொத்துரிமைகளும், அதன் நடைமுறைகளும் மிகவும் விவாதத்திற்குரிய களமாக இருந்தன. இது தொடர்பாக ஏற்பட்ட பல எழுச்சிகளும், அவற்றின் போர்க்குணமும் தேசியத் திட்டமிடல் குழுவிலும், அரசியலமைப்பு சபையிலும் தனிச் சொத்துரிமைகள் பற்றி விவாதிக்கும் சூழலை உருவாக்கின. 1950 வரை, சுதந்திர இந்திய அரசு, அரசியலமைப்பு ஏற்பாடுகள் குறித்துத் தொடர்ச்சியான முக்கிய முடிவுகளை எடுத்த போது, ஏற்கெனவே இருக்கும் தனிச்சொத்துறவுகளை ஒருபோதும் மீற முடியாத வகையில் சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த மையத்திற்குள்ள அதிகாரத்திற்கு மிகக் குறுகிய வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டன.

ஆகவே, 1948இல் தெலங்கானா விவசாயிகள் எழுச்சி மற்றும் 1946இல் வங்காளத்தில் உள்ள தெபாகா இயக்கம் ஆகியவற்றின் அரசியல் தாக்கம் இருந்தபோதிலும், நிலக்கிழாரின்பயிர் பங்குகள்மீதானஉரிமையைகட்டுப்படுத்தும் பர்காதார் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும், 'ஜமீன்தாரி முறையை ஒழிப்பதை'த் தாண்டி விரிவான நிலச்சீர்திருத்தத்தை ஏற்படுத்தாமல் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. 1947-1956 முதல் பத்தாண்டுகளில், போட்டியிடும் கூறுகளின் நுட்பமான சமூகச் சமநிலையைச் சீர்குலைக்கும் என்று அஞ்சி சமூக உறவுகளில் அரசு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியது.

ஒட்டுமொத்தமாக முதலாளி வர்க்கத்தினர், 1939இல் திரிபுரி காங்கிரசில் அவர்களுக்கு அரசியல் தோல்வி ஏற்பட்ட பின்னரும், காங்கிரசுக்கு எதிர்தரப்பினரில் பெரும்பாலாக உள்ள கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகளால் பழைய சமூக ஒழுங்கு சீர்குலைக்கப்படும் என்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருந்தனர். அப்போதிருந்த பொருளாதாரக் கட்டமைப்புகளே குறிப்பாக விவசாயத்தில். சுதந்திரத்திற்குப் பிறகு கிட்டத்தட்ட முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்தியாவின் விவசாய உற்பத்தி உறவுகளை அடியோடு மாற்றுவதில் புதிய ஆட்சியாளர்களின் விருப்பமின்மை, இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில், போர்க்குணமிக்க விவசாயிகள், இடதுசாரி அரசியல் இயக்கங்களைக் கொண்ட பகுதிகளைத் தவிரப் பிற பகுதிகளில் குத்தகைச் சீர்திருத்தம், நில உச்சவரம்புச் சட்டங்கள் கூட நீர்த்துப் போகச் செய்தது. ஜமீன்தாரி, ஜாகிர்தாரி முறையை ஒழித்ததன் மூலம் அரசிற்கும் விவசாயிகளுக்கும் இடையிலான இடைத்தரகர்களின் குறைந்தபட்ச ஒழிப்பைத் தாண்டி வேறு எதுவுமே செயல்படுத்தப்படவில்லை.

இந்த இரண்டு முறைகளும் ஏற்கனவே வழக்கொழிந்திருந்தன. இந்த ஒழிப்பு முறை கூட ஜமீன்தார்களுக்கு இழப்பீட்டு வடிவங்களுடனும், உடைமையாளர் பயிரிட்ட நிலத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் உரிமையுடனும் வந்தது. இது பலவிதமான வழிமுறைகளால் 'உடைமையாளர் பயிரிட்டது' என்று ஏட்டில் காட்டப்பட்டு பினாமி மூலம் பெரும் நிலவுடைமைகளைத் தக்கவைத்துக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

ஆகவே, சுதந்திரத்திற்குப் பிறகு இடைத்தரகர்களை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச நிலச் சீர்திருத்தங்கள் மிகவும் போதாக்குறையானவை. ஆயினும் கூட, இது ஜமீன்தாரி பகுதிகளில் உள்ள இடைப்பட்ட சாதிக் குத்தகைதாரர்களில் பெரும் பகுதியினரை உடைமையாளர்களாக மாற்றியது. எனவே, ஜமீன்தாரி ஒழிப்பு என்பதும் ஜமீன்தார்களின் பெயரளவிலான வருவாய் சேகரிக்கும் உரிமைகளை அகற்றுவதாகவே இருந்தது. நிலத்தின் மீதான அவர்களின் உண்மையான கட்டுப்பாடு நீண்ட காலத்திற்கு முன்பே மறைந்து விட்டது. எனவே ஜமீன்தாரி முறை ஒழிப்பின் முக்கியத்துவம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மிகக் குறைவானதாகவும், வெறும் அடையாளமாகவுமே இருந்தது.

வேளாண் உறவுகளில் பெருமளவில் தடையற்ற சந்தை, விவசாய உயரடுக்கின் மீது நேரடி

வரிவிதிப்பு இல்லாத கொள்கையுடன் இணைந்து ஒரு நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கியது, அதில் நிலம் ஒரு சரக்காகமாறியது, பயிர்கள் சக்திவாய்ந்த இடைத்தரகர்கள் மூலமாகவும், பணஆற்றல்மிக்கவலுவான உரிமையாளர்கள் வர்க்கத்தின் மூலமாகவும் சந்தைக்கு கொண்டுவரப்பட்டன. இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் பண ஆற்றல் மிக்க உரிமையாளர் வர்க்கம் உருவானது. இந்த வர்க்க இடைநிலை, உயர் சாதிப் பெரும் விவசாயிகள், நிலக்கிழார்களின் ஒருங்கிணைந்த ஆதரவு முதலாளித்துவமல்லாத உபரி அபகரித்தலின் கட்டமைப்புகளிலும், சுதந்திர இந்திய அரசின் மாற்றத்திற்கான கட்டமைப்புகளிலும் வேரூன்றியுள்ளது. விவசாய வர்க்க உறவுகள் சாதி,பாலினத்தில் பொதிந்துள்ளன. ஒரு நபருக்கு நிலம் சொந்தமானதா,அவரால் கட்டுப்படுத்தப்படுகிறதா என்பது அந்த நபரின் சாதிநிலையால் நிர்ணயிக்கப்படுகிறது. சாதியும் வர்க்கமும் இவ்வாறு மிக நெருக்கமாகத் தொடர்புடையவையாக இருந்தன, ஒன்று மற்றொன்றை வலுப்படுத்தியுள்ளது. பயிரிடப்பட்ட நிலத்தின் பத்திரங்கள் மீது பெண்களுக்கு உரிமை இல்லை, எனவே பெண் தொழிலாளர் சக்தியின் பெரும் பகுதி விவசாயத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் விவசாயிகளாக அங்கீகரிக்கப்படவில்லை.

கொள்கை வகுப்பாளர்கள் விவசாய சீர்திருத்தங்கள் மேலும் தேவையில்லை என்று நம்பி தங்களை ஆறுதல்படுத்திக்கொண்டனர். இவ்வாறு விவசாயக் கட்டமைப்பிலும், அரசின் கட்டமைப்புகளிலும் நிலக்கிழார்களின் ஆதிக்கம் உறுதி செய்யப்பட்டது, உபரி அபகரிப்பின் அரைநிலப்பிரபுத்துவக் கட்டமைப்புகளில் அவர்களின் இருப்பு வேரூன்றியுள்ளது. கூட்டாக அவர்கள், விவசாய உறவுகளை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்க்கும் / மீறும் திறன் கொண்ட குறிப்பிடத்தக்க அரசியல் அதிகார மையத்தை உருவாக்கினர். இது இந்தியாவில் மூலதனத் திரட்டலின் ஆட்சியில் முதல் முரண்பாட்டிற்கான அடிப்படையாக அமைந்தது, சொத்துரிமைகளின் நிறுவன ஏற்பாடு இன்றைய காலம் வரை கொள்கை ஆட்சிகளில் விவசாயத் தடைகளை (போதாமை) பெருக்க வழிவகுத்தது. இது நான்கு பரிமாணங்களைக் கொண்டுள்ளது: முதலாவதாக, இது பொருளாதாரத்தில் வேண்டலுக்கான கட்டுப்பாட்டை வரையறுத்து, காலனிய காலத்திலிருந்து பெறப்பட்ட பெரும் தொழிலாளர் இருப்புக்களை நிலைநிறுத்தியது. இரண்டாவதாக, ஒரு விவசாய வேளாண் உபரியின் மூலம் தொழில்துறை வளர்ச்சி ஏற்படுத்துவதை நிராகரித்ததன் மூலம் ஒரு வழக்கமான முதலாளித்துவ மாற்றத்தை அது மறுதலித்தது. மூன்றாவதாக, சொத்துரிமைகளின்

படிநிலைகளின் வரையறையில் சாதி, பாலினம், சொத்துறவுகள் ஆகியவற்றுக்கு இடையேயான வலுவான பிணைப்புகள் தொடர்வதைப் பாதுகாத்தது. நான்காவதாக, பொருளாதாரமல்லா வற்புறுத்தலின் அடிப்படையில் உழைப்புச் சுரண்டல் நிலைத்திருப்பதை இது உறுதி செய்தது.

**மூலதனம், உழைப்பு, அரசு:**

**ஊதியக் குறைப்பை நிறுவனமயமாக்குதல்:**

இந்திய முதலாளித்துவ வர்க்கம் பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்தும் செயல்முறையில் பின்பற்றிய ‘அரசு-தலையீட்டின்’ குறிப்பிட்ட கட்டமைப்பானது முரண்பாடுகள் நிறைந்த ஒன்றாக இருந்தது. இது தாமதமாகத் தொழில்மயப்படுத்தப்பட்ட நாடுகளின் குறிப்பிடத்தக்க பண்பாகும். இதற்குத் திட்டமிடல் செயல்முறையோ, இறக்குமதி பதிலீட்டுத் தொழில்மயமோ காரணமல்ல. மாறாக தொழிலாளர் உடனான மூலதனத்தின் உறவு, முதலாளித்துவத்திற்கு விரோதமான ஒரு கருத்தியல் சூழலில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதுவே முதலாளித்துவ வர்க்கத்துடனான அரசின் உறவை வரையறுத்தது.

உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் லாபத்தை அதிகரிக்கும் கொள்கைகளை வெற்றிகரமாகச் செயல்படுத்த அரசு தவறியதால், உழைப்பு மீதான ஒழுங்குமுறையின் மூலமே லாபத்தை பராமரிப்பது அதிக முக்கியத்துவத்தைப் பெற்றது. எனவே, 'உற்பத்தித் திறன் அதிகரிப்பு' என்பதை விட லாபத்தையே நோக்கமாகக் கொண்ட, திட்டமிடல், இறக்குமதி பதிலீட்டுத் தொழில்மயம் ஆகியவை அரசிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான உறவில் முக்கியமானவை, ஆனால் முதலாளி வர்க்கத்துடனான அமைப்பாக்கப்பட்ட உழைப்பாளர்களின் உறவே அரசு சார்ந்த முதலாளித்துவ வர்க்கத்தின் உறவுக்கு அடிப்படையாக அமைந்தது.

புதுச்செவ்வியல் வாதங்கள் இந்தக் காலகட்டத்தில் அரசு, தொழிலாளர்களுக்கு ஆதரவாய் இருந்ததாகக் குறிப்பிடுகின்றன. வலிமையான இந்தியத் தொழிலாளர் சட்டங்கள் இந்திய மூலதனத்தின் போட்டியிடும் திறனுக்கு ஒரு தடையாக இருப்பதாக வாதிடப்படுகிறது. இது ஒரு நம்பிக்கை அடிப்படையிலான கூற்று என்றும், வரலாற்று ஆய்வு இதற்கு துணை நிற்காது என்றுமே இங்கு நாங்கள் வாதிடுவோம், இங்கு பரிசீலிக்கப்பட்ட காலகட்டத்தில் தொழிற்சங்கங்களின் அமைப்பாக்கப்பட்ட ஆற்றல்தான் அமைப்புசார் துறையில் அடிப்படை

வேலை நிலைமைகள் குறித்து முத்தரப்பிலான தீர்வைப் பெற வேண்டும் என்றும், அதற்கு 'முறையான' வடிவம் கொடுக்க வேண்டும் என்றும் அரசை வற்புறுத்தியது.
இத்தகைய ஏற்பாடு இருந்த போதிலும், இந்தியாவில் தொழிலாளர் சட்டங்கள் பொருந்தக் கூடியதாகக் கருதப்படும் அமைப்புசார் தொழில்துறையில், தொடர்ச்சியான உழைப்பை மலிவாக்கும் செயல்முறையே உபரி உருவாக்கத்திற்கும், இலாபத்தை உருவாக்குவதற்குமான முக்கிய வழியாக இருந்தது. எனவே, தொடர்ந்து உழைப்பை மலிவாக்குவதன் மூலமே இந்தியாவில் முதலாளித்துவம் தொடர்ந்து முன்னேறியுள்ளது. ஒன்றோடொன்று தொடர்புடைய நான்கு வழிமுறைகள் மூலம் உழைப்பு மலிவாக்கப்பட்டது.

வர்க்கம், சாதி, பாலினம், மற்றும் மதம் ஆகியவற்றின் அடிப்படையில் தொழிலாளர் படிநிலை ஏற்படுத்தி, பாகுபடுத்தி, ஊதியக் குறைப்புச் செய்தல்; ஊதியமற்ற உழைப்பின் சுரண்டல் (பெரும்பாலும் பெண்கள், ஆனால் உற்பத்தி மற்றும் மறுவுற்பத்தியில் ஆண்களும் கூட); ஆணாதிக்கம், காலனிய மரபுரிமையாகப் பெற்ற சேமப் பட்டாளம் ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனமயமாக்கப்பட்ட அரை நிலப்பிரபுத்துவ உழைப்புச் சுரண்டலின் நீடிப்பு; வர்க்கம், சாதி மற்றும் ஆணாதிக்கத்திற்கு இடையிலான நிறுவனமயமாக்கப்பட்ட பிணைப்பைச் சார்ந்து இந்தியாவின் முதலாளித்துவ வர்க்கத்தின் வணிகமுதல்வாதத் தன்மை நிலைநிறுத்தப்பட்டது. சாதி மற்றும் சொத்துறவுகளைக் கட்டமைப்பதில் விவசாயத் தடை நிலைநிறுத்தப்பட்டது. மேலும் சாதி மற்றும் ஆணாதிக்கத்தின் கலவையே இந்தியாவில் சாதி இந்து ஆணின் சொத்துரிமைகளுக்குச் சலுகை வழங்குவதில் தனிநபர் வரியையும், பெருநிறுவன ஆளுகைச் சட்டங்களையும் ஒருங்கிணைப்பதை வரையறுக்கிறது.

இந்தியாவில் புதிய தொழிலாளர் வர்க்கம் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வளர்ந்தது. இதுமிகவும் சிறியதே. 1911ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி அமைப்புசார் தொழிலில் பணியாற்றும் மொத்த மக்கள்தொகையின் பங்கு 0.69 விழுக்காடாகும். இருப்பினும், இந்தியாவில் தேயிலைத் தோட்டங்களின் ஒப்பந்தத் தொழிலாளர்களும் சுரங்கங்கள், தொழிற்சாலைகளின் தொழிலாள வர்க்கத்துடன் சேர்ந்து 'நவீன' பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக இருந்தனர். அவர்கள் ஒருங்கிணைந்து, கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் புதிய இந்தியத் தொழிலாள வர்க்கத்தை அமைத்தனர். சிறிய முதலாளித்துவ உறைவிடங்களின்

பெருக்கத்தோடு, தொழில்துறை தொழிலாள வர்க்கமும் எண்ணிக்கையில் வளர்ந்தது, ஆனால் மக்கள்தொகையில் வெறும் 6 விழுக்காட்டினர் மட்டுமே தொழிற்சாலைகளில் பணிபுரிந்தனர், மேலும் அவர்களையே அமைப்புசார் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் என்ற நிலையில் கருத முடியும். இவர்களில் பெரும்பாலானோர் ஆண்களாகவே இருந்தனர். பெரும்பான்மையான ஆண்கள், பெண்களின் வாழ்வாதாரமானது அமைப்புசாராத் துறையைச் சார்ந்தே இருந்தது.

இவ்வாறு, ஒரு பெரிய அமைப்புசாராப் பொருளாதாரம் காலனிய காலத்திலிருந்து இந்தியப் பொருளாதாரத்தை வகைப்படுத்தியது. காலனிய முதலாளி-தொழிலாளர் உறவுகள் ரயில்வே, தொழிற்சாலைகளில், கட்டுமானப் பணிகளில் 'கூலி கும்பல்களை' அடிப்படையாகக் கொண்ட ஒரு கருவியாகவும், தேயிலை, ரப்பர் மற்றும் காபித் தோட்டங்களில் 'தற்காலிக உழைப்பு' ஆகவும் அமைப்புசாரா முறைகளைப் பயன்படுத்தியது. காலனிய ஆட்சியின் கீழ் விவசாய வளர்ச்சியிலான கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்தியதன் விளைவாக இந்தத் தொழிலாள வர்க்கம் தோற்றம் கொண்டது. இந்தத் தொழிலாள வர்க்கம் அதன் இருப்பிடத்தின் அடிப்படையில் நிலக்கிழாரிய நில உறவுகளின் கட்டுண்ட தன்மை, அடிமைத்தனம் மற்றும் முதலாளித்துவ உற்பத்தி வளர்ந்து வரும் இடங்களில் உழைப்பு மதிப்புகளை உருவாக்குபவர்கள் என அதன் இரட்டைப் பண்புகளைத் தக்க வைத்துக் கொண்டது. ஆகவே, இந்தியப் பாட்டாளி வர்க்கத்தில் முறிவுகளையும், பிளவுகளையும் உருவாக்குவதில் சாதியும் ஆணாதிக்கமும் முக்கிய பங்கு வகித்தன.

இருந்த போதும், முதலாம் உலகப் போரின் முடிவில் தொழிலாளர்கள்வர்க்க அடிப்படையில் தொழிற்சங்கமயமாக்கப்பட்டு அரசியல் மற்றும் பொருளாதார கோரிக்கைகளின் மூலம்ஒழுங்கமைந்தஎதிர்ப்பைவெளிப்படுத்தத் தொடங்கினர். 1918 மற்றும் 1920 க்கு இடையில் வங்கம் பரவலான தொழில்துறை வேலைநிறுத்தங்களைக் கண்டது இது கிலாபத் ஒத்துழையாமை இயக்கத்தை ஒழுங்கமைப்பதை மேலும் விரைவுபடுத்தியது. சணல் ஆலைத் தொழிலாளர்களுடனான தொடர்புகளை வளர்ப்பதிலும், அவர்களின் ஆதரவைப் பெறுவதிலும் உள்ள நன்மைகளை அரசியல் கட்சிகள் இப்போது காணத் தொடங்கின.

1930களில், தொழிற்சங்கங்கள் வங்காளம், பம்பாய் மாகாணங்களில் விரைவாக ஒரு அரசியல்

சக்தியாக மாறிக்கொண்டிருந்தன, மேலும் அமைப்புசார் தொழிலாள வர்க்கம் போர்க்குணமிக்க வேலைநிறுத்தங்கள் மூலம் அதன் இருப்பை உணர்த்தியது .அமைப்புசார் துறையில் உள்ள தொழிலாளர்கள் இந்திய அரசியலில் வர்க்க அடிப்படையிலான அமைப்பின் மிகவும் முற்போக்கான குரல்களாக மாறினர். 1951 மற்றும் 1961 க்கு இடையில் தொழிலாளர் கட்டமைப்பில் ஓரளவு மாற்றம் மட்டுமே ஏற்பட்டது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். 1951 ஆம் ஆண்டில், தொழிற்சாலை தொழிலாளர்கள் சுமார் 10 மில்லியனாக இருந்தனர். மொத்த தொழிலாளர்களில் 6 விழுக்காடாகவும், வேளாண் அல்லாத துறையில் 17 விழுக்காடாகவும் இருந்தனர்.

மொத்த உழைப்புச்சக்தியில் தொழிற்சாலை தொழிலாளர்களின் பங்கு 1951 ல் 9.49 விழுக்காடாகவும், 1961 இல் 9.95 விழுக்காடாகவும், 1971 ல் 9.98 விழுக்காடாகவும் இருந்தது. இருப்பினும், தொழிற்சாலை வேலைவாய்ப்பின் கூட்டு ஆண்டு வளர்ச்சி விகிதம் முதல் திட்ட காலத்தில் 1.7 விழுக்காட்டிலிருந்து மூன்றாம் திட்ட காலத்தில் 5.7 சதவீதமாக அதிகரித்தது.1966 மற்றும் 1977 க்கு இடையில் சுரங்கங்கள், தொழிற்சாலைகளில் தனியார் மற்றும் பொதுத்துறையில் மொத்த வேலைவாய்ப்பு சராசரியாக 1.7 விழுக்காடுமட்டுமே அதிகரித்துள்ளது. ஆகவே, அமைப்புசார் துறையில் வாழ்வாதாரங்களிலான அதிகபட்ச வளர்ச்சி முதல் மூன்று திட்டங்களின் காலத்துடன் ஒத்துப்போகிறது. 1968 மற்றும் 1984 வரையிலான காலகட்டம் உழைப்புச் சக்தியில்தேவைக்கேற்பமாற்றத்தக்கதாகஅதிக நெகிழ்வுத்தன்மைஏற்படுத்தப்பட்டது, இது 1990களில் மேலும் அதிகரிக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிறகு, முதலாளி வர்க்கம்,1920 களில் இருந்தே தொழிற்சங்க அமைப்பின் பன்முகத்தன்மையின் மூலம் சட்டபூர்வமான தன்மையையும் அதிகாரத்தையும் வளர்த்த ‘தொழிலாளர் வர்க்கத்தை ஒழுங்குமுறைக்குட்படுத்த’ அரசையே சார்ந்திருந்தது. இது இந்தியாவுக்கு பிரத்யேகமான ஒரு பிரச்சினை அல்ல. சமூக ரீதியாக நியாயமான காரணத்தாலேதொழிலாளர்களின் கூட்டு உரிமைகள்பெறப்பட்டன. சுரங்கங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள மொத்த தொழிலாளர் எண்ணிக்கையில், ஒரு பகுதியே தொழிற்சங்கப்படுத்தப்பட்டது. இந்த காலகட்டத்திற்கான தொழிற்சங்க உறுப்பினர் குறித்த புள்ளிவிவரங்கள் அரிது என்பதால் மதிப்பிடுவது கடினம். தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்யும்

தகவல்களின் அடிப்படையில் சில அலுவல்சார் புள்ளிவிவரங்களைத் தொழிலாளர் அமைச்சகத்தின் பதிவுகள் வழங்குகின்றன. இந்தப் புள்ளிவிவரங்கள் தொழிற்சங்கங்களின் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பிடுகின்றன, ஏனெனில் வருவாய் கணக்கு தாக்கல் செய்யாத தொழிற்சங்கங்கள் இதில் சேர்க்கப்படவில்லை.

இரண்டாவது தேசியத் தொழிலாளர் ஆணைய அறிக்கை (இந்திய அரசு, 2002) மேற்கோள் காட்டிய இந்த தரவுகளின்படி, தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 1951இல் 2002ஆக இருந்தது 1961இல் 6,813ஆக உயர்ந்துள்ளது. உறுப்பினர் எண்ணிக்கை 1.76 மில்லியன் 4.01 மில்லியனிலிருந்து அதிகரித்துள்ளது. தொழிற்சங்க இயக்கத்தின் வலிமை அதன் எண்ணிக்கையில் இல்லை, மாறாக அதன் போர்க்குணத்திலும் அரசியல்மயமாக்கத்திலும் உள்ளது. இந்தியத் தொழிற்சங்க இயக்கம் விடுதலை நோக்கிய முற்போக்கான பங்கைக் கொண்டுள்ளது. பொருளாதாரத்தில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் தொழிற்சங்க இயக்கத்தின் வெளியே இருந்த போதிலும், காங்கிரஸின் சட்டபூர்வமான தன்மைக்காக அதன் தொழிற்சங்க பிரிவைச் சார்ந்திருப்பதும், போட்டி அரசியல் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியும் (குறிப்பாக இடதுசாரிகளுடையவை) அமைப்புசார் தொழிலாளர்களுக்கு ஒரு புதிய முக்கியத்துவத்தை அளித்தது (இந்திய அரசு, 2002).

எனவே, மூலதன-தொழிலாளர் உறவுகளின் களத்தில், முதலாளிகள், தொழிலாளர்களின் அமைப்பாக்கப்பட்ட தளங்கள் அரசின் ஒப்பீட்டு சுயாட்சியில் மாற்றத்தைத் தீர்மானிப்பதில் பங்கு வகித்தன. அக்டோபர் 24, 1953 அன்று, தொழில்துறை தகராறு (திருத்தம்) அவசரசட்டம் பணிநீக்கம் மற்றும் பணிநீக்க இழப்பீடு ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டது. இது ஜவுளி ஆலைகளில் சரக்குகள் குவிந்து வருவதாலும், அதன் விளைவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆலைகள் மூடுவதாக அச்சுறுத்தியதாலும் ஏற்பட்ட நெருக்கடிக்கு பதிலாகஅமைந்தது. இந்த செயல்முறையில் ஏராளமான தொழிலாளர்களை இடைநீக்கம் செய்தல், பணிநீக்கம் செய்தல் ஆகியவை அடங்கும். இந்த சட்டத்ததால் முதலாளிகள் அதிருப்தி அடைந்தனர். அலகுகள் திறந்த நிலையில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு பதில், குவிந்திருக்கும் சரக்குகளில் உள்ள சிக்கலை வேறு வழிகளில் தீர்க்க முடியும் என்று அவர்கள் உணர்ந்தனர்.

தீர்ப்பளிக்கும் செயல்பாட்டில் அரசின் பங்கை அவர்கள் எதிர்த்தனர். அரசு நடுவராகச் செயல்பட வேண்டும் என்ற தொழிற்சங்கக் கோரிக்கைகளுக்கு எதிராக 1954ஆம் ஆண்டில் அகில இந்திய தொழில்துறை முதலாளிகளின் அமைப்பின் (AIOIE) தலைவர் எம்.எல் ஷா, தொழிற்சங்க கோரிக்கைகளுக்கு எதிராக, தொழிலாளர் தகராறுகளை தீர்ப்பதில் அரசு இயந்திரம் சம்பந்தப்பட்ட தீர்ப்பு நடைமுறைகளைக் காட்டிலும் கூட்டு பேரம், பேச்சுவார்த்தை மூலமான நல்லிணக்கச் செயல்முறையே விரும்பத்தக்கது என்று வாதிட்டார். 1956இல், தொழிற்சங்கங்களின் அரசியல் பலத்திலிருந்து தீர்ப்புப் பொறிமுறை ஏதோவொரு வகையில் அரசையும் உள்ளடக்கும் என்பது தெளிவாகியது. எனவே, அகில இந்தியத் தொழிற்சாலை முதலாளிகள் அமைப்பின் (AIOIE) உறுப்பினர்கள் தீர்ப்பாயங்கள் உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தால் அங்கீகரிக்க வேண்டுமேதவிர, அரசாங்கத்தால் அல்ல என்றுகுரல்கொடுத்தனர்(AIOIE, 1956). இந்திய வர்த்தக, தொழில்துறை அவைகளின் கூட்டமைப்பில் மூலதனத்தின் முன்னணி குரலான ஜி. டி. சோமானி, தேவைப்பட்டால் தொழிலாளர் தகராறுகளை கையாள நீதித்துறைக்குள் ஒரு தனி அமைப்பை உருவாக்க வேண்டும் என்று வாதிட்டார்.

தீர்ப்பாயங்கள் மற்றும் தொழிலாளர் நீதிமன்றங்கள் வடிவில் தீர்ப்பளிக்கும் செயல்முறையை நிறுவனமயமாக்கிய பின்னர், முதலாளி வர்க்கம் தீர்ப்பளிக்கும் செயல்முறை குறித்துஎச்சரிக்கையாக இருந்தது. இந்தியமுதலாளிகள், வெளிநாட்டு முதலாளிகளின் கருத்துக்கள் இந்த பிரச்சினையில் ஒன்றிணைந்தன. கூட்டு பேரம் பேசுவதை ஊக்குவிக்க வேண்டும் , தீர்ப்புசெயல்முறையின் பங்கு குறைவாக இருக்க வேண்டும் என்று கருதினர் (FICCI, 1960). தீர்ப்பு முறைகள் மட்டும்ஆபத்தில் இல்லை, ஒரு தொழிலாளி என்பவர்யார், பணியிடம் என்றால் என்ன? என்பதுவிவாதத்தில் முக்கியமானவிசயமாகஇருந்தது. தொழிலாளர் உரிமைகள், தீர்ப்புசெயல்முறை உரிமைகளுக்கான களத்தை வரையறுப்பதில் இந்த இரண்டு கேள்விகளும் முக்கியமானவை. தொழில்துறை தகராறு சட்டம் 1947 ஒரு நபரின் வேலை வகை, முதலாளியின் வளங்கள். அவரது வணிக வருவாய் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் ஒரு நபர் மற்றொருவரால் பணியமர்த்தப்பட்ட அனைத்து வழக்குகளுக்கும் பொருந்தக்கூடியதாகஇருந்தது.

1946க்கும் 1955க்கும் இடையிலான தாராளமயத்தின் காலகட்டத்தில், இந்தியாவில் உள்ள

அனைத்து முதலாளர்-பணியாளர் உறவுகளையும் குறைந்தபட்சம் காகிதத்திலாவது முறைப்படுத்த ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்திய முதலாளிகள் இதை மாற்ற வேண்டும் என்று விரும்பினர், தொழிற்சாலை மிகவும் பிரத்யேகமாக வரையறுக்கப்பட வேண்டும் என்று விரும்பினர். தொழில்துறை உயர்மட்டத்தினரின் அமைப்பாக்கப்பட்ட பிரிவுகளின் அழுத்தம் இருந்த போதிலும், 1953 திருத்தத்தில் தொழிலாளர் பணியிடம் குறித்த வரையறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை (FICCI, 1954). மாறாக, முன்னணித் தொழிற்சங்கங்களின் அழுத்தம் காரணமாக, இந்தச் சட்டம் 'தொழிலாளர்கள்' என்ற வரையறையை விரிவுபடுத்தியது, மாதத்திற்கு ரூ.500 வரை ஈட்டுகிற மேற்பார்வைப் பணியாளர்களும் இதில் சேர்க்கப்பட்டனர். தொழிற்சங்க உரிமைகள், தீர்ப்புச் செயல்முறையின் களத்தைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் பணியிடத்தின் வரையறையை மாற்றுவதில் முதலாளர் வர்க்கம் அதிக அக்கறை செலுத்தியது. தீர்ப்புச் செயல்முறை, தொழிற்சங்க உருவாக்கம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த இந்திய வர்த்தக, தொழில்துறை அவைகளின் கூட்டமைப்பு (FICCI ) ஒரு முழு அளவிலான போரைத் தொடங்கியது.

பல்கலைக்கழகம், மருத்துவமனை, உணவகம், வீடு, கடை, சர்க்கஸ், திரையரங்கம், ஒரு மிருகக்காட்சி சாலை, தொண்டு நிறுவனம் மற்றும் கல்வி நிறுவனம் கூட அதன் எல்லைக்குள் வந்தன. வரையறைக்கு தாராளவாத விளக்கம் வழங்கப்பட்டால், அதில் தேவாலயம், கோயில், மசூதி அல்லது பிற வழிபாட்டுத் தலங்கள், தனியார் குடியிருப்பு வீடு ஆகியவையும் பணியிடம் குறித்த சட்டவரையறையில் அடங்கும் என உணரப்பட்டது. ஆகவே, தொழில்துறை தகராறு சட்டத்தின் ஆரம்ப நெறிகள் வீட்டுப் பணியாளர் உட்பட இந்தியாவில் அனைத்து முதலாளர்-பணியாளர் உறவுகளையும் முறைப்படுத்தியிருக்கும். 1953 வரை, இது உண்மையில் சாத்தியமாக இருந்தது, ஏனெனில் இந்தச் சட்டம் வேலை செய்யும் இடத்தை வரையறுக்கவில்லை. இந்திய வர்த்தக, தொழில் துறை அவைகளின் கூட்டமைப்பில் (FICCI) இணைந்த முதலாளர்கள் (குறிப்பாக நடுத்தர, சிறிய அலகுகள்) நிர்வாகத்திற்கு ஏற்படும் கடுமையான இடர்ப்பாடுகளை சுட்டிக்காட்டினர்.

அமெரிக்கா, கனடா உள்ளிட்ட கிட்டத்தட்ட அனைத்து முன்னேறிய நாடுகளிலும் தொழில்துறைத் தகராறு சட்டம் மேற்பார்வையாளர்களைப் பணியாளர்களாகக் கொள்வதில்லை என்று அவர்கள் வாதிட்டனர். அமெரிக்காவில், 'பணியாளர்' என்ற வரையறையில் மேற்பார்வையாளர்கள்

சேர்க்கப்படவில்லை. கனடாவில், மேற்பார்வை அதிகாரங்களைக் கொண்டவர், பொறுப்புமிக்க பணிகளில் ஈடுபடும் எந்தவொரு நபரையும் இச்சட்டம் விலக்குகிறது (FICCI, 1956). 1956ல் இந்திய வர்த்தக, தொழில்துறை அவைகளின் கூட்டமைப்பு (FICCI) மேற்பார்வையாளர்கள் தொழிலாளர் சங்கத்தில் சேராமல் தாங்களே சொந்தமாகத் தொழிற்சங்கங்களை அமைக்கும் உரிமை பெற வேண்டும் என்று கருதியது. 1956இல், தொழிலாளர்களின் போர்க்குணம் உச்சக்கட்டத்தை எட்டியது, ஜவுளித் துறையில் மட்டுமல்ல, பல தொழில்துறைகளிலும். தொழிற்சங்க இயக்கத்தின் எழுச்சிக்கு முகங்கொடுத்த முதலாளிகள், தொழில்துறைத் தகராறு சட்டம் சர்ச்சைகளுக்கு 'முடிவற்ற வாய்ப்புகளை' வழங்குவதாக உணர்ந்தனர்.

1956இல், தொழிற்சாலை மோதலைத் தீர்ப்பதற்கு ஒரு தொழிலாளர் அல்லது ஒரு முதலாளர் ஒரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்வதற்கான கால வரம்புகளை நிர்ணயிக்கத் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர் (AIOIE, 1956). இருப்பினும், தொழிற்சங்கங்கள் மீண்டும் கால வரம்பு கொண்டுவரப்படுவதை எதிர்த்தன. தொழில்துறைத் தகராறு சட்டத்தின் 1956 இறுதி வடிவம் பணியிடங்களைக் குறுகியதாக வரையறுக்க வேண்டும் என்ற முதலாளர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. எனவே, தீர்ப்புச்செயல்முறையின் எல்லை மட்டுமல்லாது, தொழிற்சங்க உருவாக்கம் உள்ளிட்ட தொழிலாளர்களின் சட்ட உரிமைகளும் தொழிற்சங்கச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'தொழிற்சாலை' பற்றிய முறையான வரையறையால் மட்டுப்படுத்தப்பட்டன. இதுவே இந்தியாவில் அமைப்புசாரா வேலைவாய்ப்புகளுக்கு அடித்தளமிட்டு ஊக்கம் அளித்தது, தொழிலாளர் சட்டங்களின் பொருத்தப்பாட்டைக் குறைத்தது. எவ்வாறாயினும், 1932ஆம் ஆண்டின் தொழிற்சங்கச் சட்டத்துடன் இணைந்து இந்தச் சட்டம், தொழிற்சாலையின் பல்வேறு வகைத் தொழிலாளர்களுக்கும் தீர்ப்புச் செயல்முறையில் பங்கெடுத்துத் தொழிற்சங்கங்களை உருவாக்கவும் வழிவகுத்தது.

1956இல், தொழிற்சாலைத் துறையில் இறுதியான சட்டங்களை அரசு அறிமுகப்படுத்தியதுடன், வேறு எந்த நெறிகளோ, சட்டங்களோ அறிமுகப்படுத்தப்பட மாட்டாது என்று 'தொழில்துறை-வணிகப் பிரதிநிதிகளுக்கு' உறுதியளித்தது. ஆனபோதும், தீர்ப்பளிக்கும் செயல்முறை முதலாளித்துவத்திற்கு ஆதரவாகச் செயல்படவில்லை. ஊதியம், தொழிலாளர்களின்

பாதுகாப்பிற்கான உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கேள்விக்கு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களின் முடிவுகளில் நீதித்துறையின் ஒப்பளவிலான சுயாட்சி பிரதிபலித்தது. தீர்ப்பாயங்கள், உச்ச நீதிமன்றத்தின் முடிவுகள் தொடர்ந்து தொழில்துறையின் மீதான 'சுமையை' அதிகரித்தன. 1952இல் அப்போதைய தொழிலாளர் துறை அமைச்சர் ஸ்ரீ ஜக்ஜீவன் ராம் வருங்கால வைப்பு நிதி அறிமுகப்படுத்தப்பட்ட போது முதலாளர்கள் பணிக்கொடை அளிக்க வேண்டியதில்லை என உத்தரவாதம் அளித்திருந்தார் (FICCI, 1952). ஆனபோதும் 1960இல், நீதித்துறை வருங்கால வைப்புத் திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகளுடன், பணிக்கொடையும் வழங்குமாறு பணித்தது.

தனிநபர் வழக்குகள், இந்திய வர்த்தக, தொழில்துறை அவைகளின் கூட்டமைப்பு (FICCI) மூலமாக முதலாளர்கள், வருங்கால வைப்பு நிதி பணிக்கொடைக்கு மாற்றாகக் கருதப்பட வேண்டும் என்றும் இரு திட்டங்களையும் ஒரேநேரத்தில் செயல்படுத்தக் கூடாது என்றும் வாதிட்டனர். இருப்பினும், தொழிற்சங்க இயக்கத்தின் வலிமையானது அமைப்புசார் தொழிற்சாலைத் துறையில் ஊதியத் தரப்படுத்தல் நோக்கிய நகர்வுகளில் பிரதிபலித்தது. 1960களில், பருத்தி ஜவுளி, சிமெண்ட், சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கான கூலி வாரியங்கள் பொருத்தமான ஊதியக் கட்டமைப்பை ஏற்படுத்த இந்தத் தொழில்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கைகளை வெளியிட்டன. 1954இல் தொழில்துறை முதலாளர்களின் அகில இந்திய அமைப்பின் தலைவரான ஷா தொழிற்சங்கங்களின் பெருக்கம் தொழில்துறை உறவுகளை சீர்செய்வதற்கு மிகப்பெரும் தடையாகும் என வாதிட்டார்:. எந்தவொரு 7 நபர்களும் ஒன்றிணைந்து தங்களை ஒரு தொழிற்சங்கமாகப் பதிவு செய்ய முடியும். எனவே பல அரசியல் கட்சிகள் இருப்பதைப் போல பல தொழிற்சங்கங்கள் உள்ளன. ஒரு தொழிற்சங்கத்துடன் ஒரு சர்ச்சையை முதலாளர் தீர்த்துக் கொண்டவுடன், மற்றொரு தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் புதிய கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள், இந்தக் கோரிக்கைகள் இயல்பாகவே ஏற்கெனவே ஒப்புக்கொண்டதை விடக் கூடுதலானவை (AIOIE, 1954: 7) என்றார். ஆகவே, தொழிற்சங்க உருவாக்கம் தொடர்பான உரிமையை எதிர்ப்பதை நியாயப்படுத்தவதற்கு முன்வைக்கப்பட்ட வாதங்கள் தொழிற்சங்க உரிமையை ஏற்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட வாதங்களைப் போலவே பழமையானவை.

'தொழிற்சங்கப் போட்டி, கல்வியறிவின்மை, அரசியல் செல்வாக்கு ஆகியவற்றால் அதிகரித்துள்ள

தொழிலாளர்களின் ஒழுங்கீனமே தொழில்துறை உறவுகள் மோசமடைவதற்குக் காரணம் என அகில இந்திய முதலாளர் அமைப்பின் பல அறிக்கைகள் குறிப்பிட்டன. காங்கிரஸ் தலைமையிலான தொழிற்சங்கத்தின் (ஐ.என்.டி.யூ.சி) தலைவர் தங்கள் தொழிற்சங்கம் அரசியல் தாக்கங்களிலிருந்து சுதந்திரமாகச் செயல்படும் என இந்திய வர்த்தக, தொழில்துறை அவைகளின் கூட்டமைப்புக்கு (FICCI) உறுதியளித்தார். இத்தகைய வாக்குறுதிகள் இருந்த போதிலும், 1957களில், தொழிற்சங்கங்கள் தாக்குநிலை எடுத்தன. இத்தகைய அரசியல் சூழலில் அரசியல் கட்சிகளையோ, தொழிற்சங்கங்களையோ தடை செய்யுமாறு அழைப்பு விடுக்க முதலாளர்களால் இயலவில்லை.

இடதுசாரிகளின் போர்க்குணமிக்க தொழிற்சங்கங்களைக் கட்டுக்குள் வைக்க, காங்கிரஸ் கட்சியின் தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சியை முதலாளர்கள் நம்பியிருந்தனர் (FICCI, 1960). 1950க்கும் 1963க்கும் இடையில் தொழிற்சாலை வேலைவாய்ப்பு 59.9 விழுக்காடு அதிகரித்தது. மின்சார இயந்திரங்கள், எந்திரங்கள், சாதனங்களின் உற்பத்தித் துறையில் மிகப்பெரும் உயர்வு ஏற்பட்டது. மிகப் பெரிய, பழமையான தொழில்துறையான ஜவுளித் துறையில் வேலைவாய்ப்பு மிகக் குறைந்த வளர்ச்சியைக் காட்டியது. 1956இல் நாட்டின் மொத்தத் தொழிலாளர் எண்ணிக்கை 154 மில்லியன், அதில் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 7 மில்லியனாக இருந்தது. 1957ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் பெரும் வேலைநிறுத்தங்கள் செய்யப்பட்டன. அவற்றின் சுருக்கம் பின்வருமாறு: ஜாம்ஷெட்பூர் (14 நாட்கள், 45,000 டன் எஃகு உற்பத்தி இழப்பு), பிரீமியர் ஆட்டோமொபைல்கள் (110 நாட்கள்), அனைத்து முக்கியத் துறைமுகங்களிலும் கப்பல்துறைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் (16 நாட்கள் - பொருளாதாரத்தை சீர்குலைத்தது, பிரதமரின் தலையீட்டின் பின்னர் நிறுத்தப்பட்டது), கல்கத்தா டிராம்வே (42 நாட்கள்) வேலைநிறுத்தம், கேரளத் தோட்டங்களில் வேலைநிறுத்தங்கள் (பல தொழிற்சங்கங்களின் பங்களிப்புடன்) (FICCI, 1957; AITUC, 1957).

மூன்றாம் திட்ட காலத்தின் கடைசி மூன்று ஆண்டுகளில், தொழில்துறை நிறுவனங்கள் தன்னார்வ அடிப்படையில் நிர்வாக்க் கூட்டுக் குழுக்களை முறையாக அமைப்பதற்கு ஒப்புக் கொண்டன. 'தொழிலாளர்கள் ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வைக்க வேண்டும்' என்ற முதலாளர் வர்க்கத்தின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக அரசு (அந்த ஒரு வர்க்கத்தை

மட்டுமே ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற கருத்தில்!) ‘தொழிலாளரை ஒழுங்குபடுத்தும்’ ஒழுக்க நெறியை உருவாக்கியது.

மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான உறவுகளின் வரலாற்றில் இந்தக் காலகட்டம் ஒரு குறிப்பிடத்தக்க அடையாளமாக இருந்தது, ஏனெனில் தனியார் துறையில் மட்டுமல்ல, அரசுத் துறையிலும் தொழிலாளர் போர்க்குணத்தை அடக்க வேண்டியதன் அவசியத்தை அறிவிப்பதில் முதலாளர் வர்க்கத்துடன் அரசு பக்கபலமாக நின்றது. இந்த நெறிமுறை 1958 ஜூன் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. போபாலில் கனரக மின்னணுப் பொருட்கள் நிறுவனத்தில் நடந்த வேலைநிறுத்தத்தை ‘தேசத்தின் முதுகில் விட்ட குத்து’ என்று நேரு கண்டனம் செய்த போது, அவர் தனியார் துறை முதலாளர்களின் உணர்வையே பிரதிபலித்தார். முதன்முறையாக, அரசும் தனியார் முதலாளித்துவத் துறையும் ‘ஒழுங்குமுறையைப் பராமரிப்பது குறித்து அந்த நெறிமுறையில் பொதிந்துள்ள ஒரு பொதுவான ‘மனநிலையையும், நோக்கத்தையும்’ பகிர்ந்து கொண்டன. இது உழைப்பாளர்களுடன் திறந்த போர் என்பதை முதலாளித்துவ வர்க்கம் அங்கீகரித்தது. முதலாளர்கள், தொழிலாளர் முன்னணியின் தினசரி நடவடிக்கைகள் குறித்து ‘உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டியது அவசியம்’ (FICCI, 1962) எனக் கருதினர். தங்கள் சொந்த அமைப்புகளிலும், சங்கங்களிலும் உறுப்பினர்களை அதிகமாக்குவதன் மூலமும், ‘செயல்பாட்டு ஆதரவை விரிவாக்குவதன் மூலமும்’ தங்களை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் அழைப்பு விடுத்தனர். இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டத்தில், தொழிலாளர் இயக்கத்தின் தாக்கம் மூலதன-தொழிலாளர் உறவுகள் தொடர்பான முத்தரப்புச் செயல்முறைகளின் நடைமுறையில் வெளிப்பட்டது. தொழிலாளர் தொடர்பான 20 சட்டங்கள் இரண்டாவது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.. அவற்றில் தொழில்துறை தகராறுகள் குறித்த மூன்று சட்டங்களும், ஊதியங்கள் குறித்த நான்கு சட்டங்களும், ஊழியர் வருங்கால வைப்பு நிதியம் குறித்த இரண்டு சட்டங்களும் அடங்கும். தொழிலாளர் விருதுகள், மற்றும் நிர்வாக கட்டளைகளின் அழுத்தங்கள், ஒரு நாள் வேலைச் சூழ்நிலைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது.

ஊதியத் தரநிலைப்படுத்தல், சமூக நலன்கள் பெறுவதற்கான தொழிலாளர் கோரிக்கைகளை நிறைவு செய்வதில் முதலாளர்களிடமிருந்து மிகப் பெரிய எதிர்ப்பு வந்தது. அகில இந்தியத்

தொழிற்சாலை முதலாளர்களின் அமைப்பின் தலைவரான சிங்கானியா போன்ற தொழில்துறைச் செய்தித் தொடர்பாளர்கள், 'கடந்த பத்தாண்டு காலத் திட்டத்தில், நாங்கள் சில முன்னேற்றங்களை அடைந்துள்ளோம், ஆனால் மேம்பட்ட தொழில்மயமான நாடுகளில் புரிந்து கொள்ளப்பட்ட, விரிவாக்கப்பட்ட சமூக நன்மைக்கான பெரிய அளவிலான திட்டங்களைத் தொடங்குவது மட்டும் போதாது' என வாதிட்டார் (FICCI, 1962). இரண்டாவது திட்டத்தின் 'உற்பத்தி மிகையூதியம்', குறைந்தபட்ச ஊதியத்திற்கு மாற்றாக இருந்ததென பிர்லா குறிப்பிட்டிருந்தார் (FICCI, 1960). அகில இந்தியத் தொழிற்சாலை முதலாளர் அமைப்பின் தலைவரான ஹூட்சீயிங், 'தொழிலாளி கூலிக்கு தகுதியானவராக இருக்க வேண்டும்' என்று வாதிட்டார். அவர்களின் உயர்நிலைப் பள்ளி படிப்பு முடிந்தவுடன் மாணவர்களுக்கான அடிப்படைத் தொழில்நுட்பப் பயிற்சி வழங்க வேண்டும், உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றார்.

வரலாற்றின் இந்தக் கட்டத்திலிருந்து, கல்விக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையிலான தொடர்பு என்பது ஊதியங்களைத் தரப்படுத்துவதற்கும் முதலாளித்துவத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு சமூக நலன்களை வழங்குவதற்கும் எதிரான வலுவான வாதமாக மாறியது. தொழில்துறை நீதிமன்றங்கள், ஊதிய வாரியங்களால் பரிந்துரைக்கப்பட்ட ஊதிய உயர்வை எதிர்த்துப் போட்டியிட, உற்பத்தித் திறனை அளவிடுவதற்கான கோரிக்கைகள் முதலாளர்களின் அமைப்புகளால் முன்வைக்கப்பட்டன, ஏனெனில் வருவாய்க்கும் வேலை உற்பத்தித் திறனுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பதாக அவர்கள் வாதிட்டனர். ஒரு தேசிய உற்பத்தித் திறன் மையத்தை அமைப்பதற்கான இந்திய அரசின் முன்மொழிவுக்கு ஆதரவளித்தனர், ஆனால் இது தொழிலாளரின் கோரிக்கைகளைப் பிரதிபலிக்காததால் சர்வதேசத் தொழிலாளர் சம்மேளத்தின் தொழிலாளர் தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், ஊதியங்களின் திடீர் அதிகரிப்பு நாட்டின் பொருளாதார நிலைத் தன்மைக்குத் தீங்கு விளைவிக்கும், ஏனெனில் அது உற்பத்திச் செலவுகளை அதிகரித்து அதன் விளைவாகப் பொருட்களில் விலையுயர்வை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இரண்டாம் திட்ட காலத்திலிருந்து, ஊதியங்கள் தொழில்துறைத் தீர்ப்பாயங்களால் தீர்மானிக்கப்பட்டன, அதன் அணுகுமுறை தொழிலாளர் இயக்கத்தின் வளர்ந்து வரும்


வலிமையைப் பிரதிபலித்தது. ஆகையால், 1960இல், தொழில்துறையின் மூத்தவர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களிடம் தற்போதைய சட்டங்கள், ஒழுங்குமுறைகளைத் தங்களுக்குச் சார்பாக மறுஆய்வு செய்வதற்கு அரசியல் ஆற்றலைப் பயன்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தனர் (FICCI, 1960). தொழில்துறை நிறுவனங்கள் லாபத்தின் அடிப்படையில் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் மிகையூதியம் அளிக்கப்படுவதை கவனிப்பதற்கு மிகையூதிய ஆணையம் 1961இல் அமைக்கப்பட்டது. தொழில்துறைகளின் சூழல்களும், நடைமுறைகளும் பல்வேறாக இருக்கும் போது அனைத்துத் தொழில்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரேசீரான சூத்திரத்தை வைத்திருப்பது தவறானது என்று பல்வேறு முதலாளித்துவ அமைப்புகள் வாதிட்டன. ஒருகுறிப்பிட்ட நிறுவனம் அல்லது தொழில்துறையில் உள்ள ஊதியங்கள் நாட்டில் நடைமுறையில் உள்ள தரங்களிலிருந்து பெரிதும் விலகிச் செல்லக் கூடாது என்றும் அவர்கள் உணர்ந்தனர். லூயிஸ் மாதிரியின் அடிப்படையில் தொழில்துறைத் தொழிலாளியின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பண்ணைகள், சமூகத்தின் பிற பிரிவுகளின் தொழிலாளர் சக்தியையும் பொதுக் கொள்கை கருத்தில் கொள்ள வேண்டும் என அவர்கள் வாதிட்டனர் (FICCI, 1961).


ஆணையத்தின் ஒருமித்த பரிந்துரைகள் மட்டுமே செயல்படுத்தப்படும் என்று தொழிலாளர் அமைச்சர் குல்சரிலால் நந்தா உறுதியளித்தார். இவற்றின் நிகர விளைவாக, தொழிலாளர்களை ஒழுங்குபடுத்துவதற்காக மட்டுமல்லாமல், அரசே அமைப்புகளின் உரிமைகளையும், பிரதிநிதித்துவத்தையும், தொழில்மய உறவுகளையும் உருவாக்கும் வகையில் நிறுவனங்களின் வரையறைகளில் ஒரு 'ஜனநாயகக் கட்டமைப்பை' ஏற்படுத்துவதிலும், அரசின் மீதான முதலாளித்துவச் சார்பு வலுப்படுத்தப்பட்டது. இந்தியாவில் மூலதனத்திற்கும் உழைப்புக்கும் இடையிலான போராட்டம் மற்ற நாடுகளில் இருந்ததைவிட மிகவும் வேறுபட்டதாக இல்லை. ஐரோப்பாவில் முதல் முதலாளித்துவ மாற்றத்தில் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்துவது எப்படி நிறுவனக் கட்டமைப்பின் இன்றியமையாப் பகுதியாக இருந்தது என்பதை மூலதனத்தின் முதல் தொகுதியில் மார்க்ஸ் விவரிக்கிறார். உழைப்பாளிகள்மீது அரசு தயவுகாட்டியது, சலுகைகளை வழங்கியது என்ற கட்டுக்கதையை மேலே குறிப்பிட்டுள்ள முக்கியமான உண்மைகள் தகர்த்துள்ளன.

(தொடரும்)

# பெருங்கடல்களும், பருவநிலை மாற்றமும்

சமந்தா




புவி வெப்பமாதலால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தால் உலகெங்கிலும் பருவநிலை மாறுபாடுகளும், பேரிடர்களும் தீவிரமடைந்துள்ளன. வெள்ளம், வறட்சி, புயல், கடுமையான மழைப் பொழிவு, வெப்ப அலை, வறட்சி, காட்டுத்தீ போன்ற பருவநிலை பிரச்சினைகள் அண்மைக் காலத்தில் தீவிரமடைந்துள்ளன. புவியில் வெப்பச் சமநிலை ஏற்படுத்துவதில் காற்றுச் சுழற்சியும், நீர்சுழற்சியும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. புவியின் முக்கால் பகுதி கடல்நீரால் சூழப்பட்டுள்ளது. அந்தக் கடல்நீரில் மூன்றில் ஒரு பங்கை பசுஃபிக் பெருங்கடல் கொண்டிருக்கிறது. பெருங்கடல்களில் ஏற்படும் வெப்பநிலை ஏற்றத்தாழ்வுகள் (வெப்பநிலைச் சராசரியைக் காட்டிலும் அதிகமாகவோ, குறைவாகவோ மாறுபட்டால்) அது உலகளவில் பருவநிலைகளில் பெரும்தாக்கம் ஏற்படுத்துகின்றன.

இயல்பான சூழலில் புவியின் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசும் கிழக்கத்திய வர்த்தகக் காற்று (Easterlies/Trade winds) பசிஃபிக் பெருங்கடலின் கிழக்குப் பகுதியில் காணப்படும் வெப்பமான மேற்பரப்பு நீரை ஆசியாவை நோக்கி மேற்குப் பகுதிக்குக் கொண்டுசெல்கிறது. இதனால் பசிஃபிக் பெருங்கடலின் கிழக்குப் பகுதியில் கடல்மட்டம் குறைந்து மேற்கு பசிஃபிக் பகுதியில் கடல்மட்டம் உயர்ந்து அதிக வெப்பநிலையுடன் காணப்படுகிறது. இதுவே இயல்பாக மேற்கு பசிஃபிக் பகுதிகளான இந்தோனேசியா, ஆஸ்திரேலியா ஆகியவற்றில் நல்ல மழைப் பொழிவை ஏற்படுத்துவதற்கும், கிழக்கு பசிஃபிக் பகுதிகளான சிலி, பெரு போன்ற தென் அமெரிக்கக் கடலோரப் பகுதிகளில் வறண்ட வானிலை காணப்படவும் காரணமாகிறது. கிழக்கு பசிஃபிக்

பகுதியில் கீழிருந்து குளிர்ந்த கடல்நீர் மேலெழுகிறது. கடலின் கீழேயுள்ள நைட்ரேட், பாஸ்பேட் மற்ற முக்கியமான சத்துப் பொருட்கள் மேலே கொண்டுசெல்லப்படுவதால் பாசிகள், மீன்கள் போன்ற கடல் உயிரினங்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களைப் பெற முடிகிறது. இது மீன்வளம் பெருக உதவுகிறது.

ஆனால் சில ஆண்டுகளில் இந்த கிழக்கத்திய வர்த்தகக் காற்று வலுவிழக்கிறது. வர்த்தகக் காற்றின் திசை மாறி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் செல்வதற்கு மாறாக மேற்கிலிருந்து கிழக்கு திசைநோக்கி இடம்பெயருவதால் மேற்கத்திய, கிழக்கத்திய பசிஃபிக் பகுதிகளின் காலநிலை முற்றிலும் மாறுகிறது. இதனால் வெப்பமான பசிஃபிக் பெருங்கடலின் மேற்பரப்பு நீர் மேற்குத் திசையில் அல்லாது கிழக்கு நோக்கிக் கொண்டுசெல்லப்படுகிறது. இதனால் தென்அமெரிக்கக் கடல் பகுதியில் ஏற்படும் குளிர்நீர் மேலெழும்பும் நிகழ்வு தடுக்கப்படுகிறது. பசுஃபிக் பெருங்கடலில் ஏற்படும் இத்தகைய பருவநிலை மாற்றமே எல் நினோ என அழைக்கப்படுகிறது. எல் நினோ இயல்பான காற்றின் போக்கையும் நீர் சுழற்சியையும் தடுக்கிறது .

கிழக்கு பசிஃபிக் பகுதியிலிருந்து வெப்பமான கடல்நீர் மேற்கு நோக்கிச் செல்லும் இடப்பெயர்வுஎல் நினோவால் தடைப்படுகிறது. இயல்பாக நடைபெறும் வெப்பப் பரிமாற்றம் தடுக்கப்படுவதால் கிழக்கு பசிஃபிக் கடல் பகுதியின் வெப்பநிலை அதிகரிக்கிறது. அதாவது பெரு, ஈக்வேடர், சிலி போன்ற தென் அமெரிக்க கடற்கரைப் பகுதிகளின் வெப்பநிலை சராசரியாக இருப்பதைக் காட்டிலும் அதிகரிக்கிறது. இதனால் அங்கே அதிக மழை, புயல், சூறாவளி ஏற்படுகிறது.

மேற்கு பசிஃபிக் கடல்பகுதி வழக்கமாக ஈரப் பதமும் அதிக மழைப் பொழிவும் கொண்டிருக்கும். ஆனால் எல்நினோ தாக்கத்தின் போது தென்கிழக்கு ஆசியா, இந்தியா, தென்ஆப்பிரிக்கா ஆகிய மேற்கு பசிஃபிக் கடற்கரைப் பகுதிகளில் ஈரப் பதமும், மழைப் பொழிவும் குறைவதால் வறட்சி ஏற்படுகிறது. இதைப் போலவே கிழக்கத்திய பசிஃபிக்பகுதியானது வழக்கமாக குறைந்த மழையுடன் வறண்டு குளிராகக் காணப்படும். ஆனால் எல்நினோ தாக்கத்தினால் ஈரப்பதமும், வெப்பமும் மிகுந்த அதிக மழைப்பொழிவுடைய பகுதியாக மாற்றப்படுகிறது.

இவ்வாறு எல் நினோவால் வழக்கத்துக்கு மாறாக கிழக்கு பசிஃபிக் பகுதியில் பெருமழை, வெள்ளத்தையும், மேற்கு பசிஃபிக் பகுதியில் வழக்கத்துக்கு மாறாக வறட்சியையும்

ஏற்படுத்துகிறது.

தென்அமெரிக்கக் கடற்கரையோரப் பகுதிகள் இயல்பாக மீன்பிடித் தொழிலுக்கு ஏதுவான குளிர்ந்த வறண்ட வானிலையைக் கொண்டுள்ளன. அங்கு மீன்வளத்தை நம்பிய பொருளாதாரம் காணப்படுகிறது.எல் நினோவின் போது கீழே உள்ள குளிர்ந்த நீர் மேலெழும்புவது தடுக்கப்படுகிறது. இதனால் ஊட்டப் பொருட்கள் கிடைக்காமலும், வெப்பநிலை அதிகரிப்பினாலும் மீன்கள் பெரும் எண்ணிக்கையில் செத்து மடிகின்றன. மீன்வளம் குறைவதால் மீன்பிடித் தொழிலும் அதை நம்பியுள்ள அப்பகுதி மக்களின் பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது. எல் நினோவால் வறண்ட பகுதிகளான பெரு, சிலி, மெக்ஸிகோவில் பெருமழையும், வெள்ளமும் ஏற்படுகிறது.

அதேசமயத்தில் எல் நினோ ஆண்டுகளில் அதிக மழை பொழியும் பிரேசிலின் அமேசான், அமெரிக்காவின் வடகிழக்கு பகுதிகளில் வறட்சி ஏற்படுகிறது. மத்திய அமெரிக்காவிலும் வெப்பமும் வறட்சியும் ஏற்படுகின்றன.

அதிக மழைப் பொழிவைக் கொண்ட இந்தோனேசியா, ஆஸ்திரேலியா போன்ற பசிபிக்கின் மேற்குப் பகுதியில் எல் நினோவினால் வறட்சி ஏற்படுகிறது.இதனால் இவ்வளமான பகுதிகளின் உணவு உற்பத்தியும், பொருளாதாரமும் பாதிக்கப்படுகிறது. மக்களுக்கு உடல்நிலை பிரச்சினைகளும் ஏற்படுகிறது.

எல் நினோவால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. எல் நினோவால் இந்தியாவில் பெய்யும் பருவ மழையின் அளவு குறைவதற்கான சூழல் உருவாகிறது.

எல் நினோவால் இந்தோனேசியாவில் காட்டுத் தீ பரவியது. பெருவில் மீன்வளம் குறைந்தது, இந்தியாவில் பருவ மழை பாதிக்கப்பட்டது. தென் அமெரிக்காவில் வெள்ளம் ஏற்பட்டு நீரால் பரவக் கூடிய காலரா, போன்ற நோய்களும் கொசுவால் பரவும் நோய்களும் பரவுவதற்குக் காரணமாக இருந்தது. தென்னாப்பிரிக்காவில் பெரும் வறட்சி ஏற்பட்டு மக்கள் இடம்பெயர்வதற்கும் காரணமாக அமைந்தது.

எல் நினோ உருவாகும் போதெல்லாம் ஒரு பகுதியில் கடுமையான மழையும், மற்றொரு பகுதியில் தாங்க முடியாத வறட்சியும் என எதிர்மறையான தட்ப வெப்பத்தைப் பல பகுதிகளில் உருவாக்குகிறது.

எல் நினோ நிகழ்வை முதன்முதலாகக் கண்டறிந்தது பெருநாட்டின் மீனவர்கள். இயல்பாகக் காணப்படுவதை விடக் கடலின் வெப்பம் எல் நினோவின் போது அதிகமாகக் காணப்படுவதை உணார்ந்தார்கள். எல் நினோ பெரு நாட்டு மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டாலும், ஸ்பானியக் குடியேறிகள்தான் இதற்கு எல் நினோ எனப் பெயரிட்டனர். எல் நினோ என்றால் சிறுவன் என்று பொருள். கிறிஸ்துமஸ் வரும் டிசம்பர் மாதத்தில் ஏற்படுவதால் குழந்தை ஏசு என்ற பொருளிலும் அழைக்கப்படுகிறது. வரலாற்றாசிரியர்கள், தொல்பொருள் ஆய்வாளர்கள் பண்டைய அமெரிக்க நாகரிகங்களான மோச்சே, இன்கா ஆகியவற்றின் சீர்குலைவில் எல் நினோவுக்கும் பங்கு உண்டு என்று கருதுகின்றனர். எல் நினோ குறித்த பதிவு செய்யப்பட்ட வரலாறு உண்மையில் 1500களில் தொடங்குகிறது. மழையையும், நீர் சுழற்சியையும் பாதிப்பதால் உணவு உற்பத்தி, பொருளாதாரம், மக்களின் வாழ்க்கைச் சூழல் என அனைத்துமே எல் நினோவால் பாதிக்கப்படுகிறது.

கடல் மேற்பரப்பு வெப்ப நிலையில் ஏற்படும் விலகல்களை அளவிட விஞ்ஞானிகள் பெருங்கடல் நினோ குறியீட்டை (ONI) பயன்படுத்துகின்றனர். கடல் மேற்பரப்பு வெப்பநிலை ஐந்து தொடர்ச்சியான மூன்று மாத பருவங்களுக்கு 0.9 டிகிரி ஃபாரன்ஹீட்டிற்கும மேல் அதிகரிப்பதை எல் நினோ நிகழ்வாகக் குறிக்கின்றனர், கடல் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பு (சுமார் 4-5° ஃபார்ன்ஹீட்டிற்கு அதிகரிக்கும் போது அந்தப் பிராந்தியத்தில் வானிலை, கால நிலைகளில் மிதமான தாக்கம் ஏற்படுத்துகிறது. கடல் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பு 14- 18° ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்கும் போது உலகளாவிய முறையில் காலநிலை மாற்றங்களை ஏற்படுத்துகிறது. பசிபிக் படுகை உலகின் மூன்றில் ஒரு பகுதியாகப் பரந்திருப்பதால், அங்கே காற்றிலும், ஈரப் பதத்திலும் ஏற்படும் மாற்றங்கள் உலகெங்கும் தாக்கம் கொள்கின்றன.

1876-78, 1896-97, 1899-1900 ஆண்டுகளில் பருவ மாற்றங்களால் பெரும் வறட்சிகளும், ஒருசில வெள்ளங்களும் ஏற்பட்டதாக பிரிட்டிஷ் இந்திய அதிகாரிகள் ஆவணப்படுத்தியுள்ளனர். இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகளில் 30 முதல் 60 மில்லியன் மக்கள் இறந்து போயினர்; நூற்றுக்கணக்கான மில்லியன் மக்கள் பட்டினியாலும், சமூக அரசியல் மோதல்களாலும் பாதிக்கப்பட்டனர். ஐரோப்பிய காலனியாதிக்கமும், முதலாளித்துவத்தின் பரவலும் இந்தப் பேரழிவுகளில் முக்கியப் பங்கு வகித்திருந்தாலும், எல் நினோவும், லா நினாவும் உலகளாவிய அளவில் பெரும் வறட்சி, பயிர் சேதங்களையும், மலேரியா நோய் பரவுவதற்கும்

தூண்டுகோலாய் இருந்துள்ளன.

1972-73, 1982-83, 1997-98, 2015-16இல் ஏற்பட்ட எல் நினோ நிகழ்வுகள் கடந்த அரை நூற்றாண்டின் பெரும் வெள்ளம், வறட்சி, காட்டுத் தீ, ஆகிய நிகழ்வுகளைத் தூண்டியுள்ளன. பவளப் பாறைகளை நிறமிழக்கச் செய்துள்ளன. வரலாற்றாசிரியர் மைக் டேவிஸ் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குறைந்தது மூன்று பெரிய பஞ்சங்களுக்கு எல் நினோவுடன் தொடர்புள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். 1957-58இல் உருவான எல் நினோவால், கலிபோர்னியாவின் கெல்ப் காடுகள் கடுமையாக சேதமடைந்தன. 1965-66இல் ஏற்பட்ட எல் நினோ பெருவில் உரத்திற்கான சந்தையை அழித்ததுடன், விலங்குகளின் தீவனமாக (மீன் உணவுக்கு பதிலாக) சோயாபீன்ஸ் பயன்பாட்டையும் தூண்டியது. 1972-73ஆம் ஆண்டில், நங்கூர மீன்கள் அழிவுக்குட்பட்டதால், பல லட்சக்கணக்கான கடல் பறவைகளின் மரணத்திற்கும் வழிவகுத்தது. இதனால் பெருவியப் பொருளாதாரத்திலும், அரசாட்சியிலும் சீர்குலைக்கும் விளைவுகளை ஏற்படுத்தியது.

20ஆம் நூற்றாண்டில் 1982-83, 1997-98 ஆகிய ஆண்டுகளில் மிகத் தீவிரமான எல் நினோ நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன. 2016இல் ஏற்பட்ட எல் நினோவால் 60 பில்லியன் மக்கள் ஆசிய பசிபிக், லத்தீன் அமெரிக்கப் பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு உணவுப் பாதுகாப்பு இல்லாமல் போனது என ஐநா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எல் நினோவுக்கு நேர் எதிரான விளைவுகளை லா நினா என்ற நிகழ்வு ஏற்படுத்துகிறது. சில நேரங்களில் கிழக்கத்திய வர்த்தகக் காற்று வழக்கத்தை விட வலுவாக வீசுகிறது. பெரு, ஈக்குவடோர், சிலி போன்ற கிழக்கு பசிஃபிக் கடற்கரைப் பகுதிகள் இயல்பை விட குளிர்ச்சியாகவும், வறட்சியாகவும் காணப்படுகிறது. மேற்கு பசிஃபிக் பகுதியானது வழக்கத்தை விட அதிக வெப்பத்துடன் காணப்படுகிறது. இதனால் கிழக்கு பசிஃபிக் பகுதியில் வறட்சியையும், மேற்கு பசிஃபிக் பகுதியில் அதிக மழைப் பொழிவையும், வெள்ளத்தையும் ஏற்படுத்துகிறது. ஆஸ்திரேலியாவில் கடும் வெள்ளம், இந்தியாவில் பருவ மழையின் அதிகரிப்பையும் ஏற்படுத்துகிறது. பொதுவாக, எல் நினோ, லா நினா ஆகிய நிகழ்வுகள் 2 - 7 வருடங்களுக்கு ஒரு முறை சீரற்ற இடைவெளியில் நிகழ்கின்றன. லா நினாவை விட எல் நினோவே அடிக்கடி ஏற்படுகிறது.

இயற்கையாக நிகழும் காலநிலை நிகழ்வுகளான எல் நினோ, லா நினாவால் பசிபிக் கடல்

மேற்பரப்பின் இயல்பான வெப்பநிலை அவ்வப்போது பாதிக்கப்படுகிறது. 3 - 7 வருடங்களுக்கு ஒருமுறை நிகழும் இந்தச் சுழற்சியில் வெப்பமான கட்டமாக எல் நினோவும், குளிர்ச்சியான கட்டமாக லா நினாவும் உள்ளன. எல் நினோ, லா நினா ஒவ்வொன்றும் 9 - 12 மாதங்களுக்கு நீடிக்கும், அரிதான சந்தர்ப்பங்களில் பல ஆண்டுகள் நீடிக்கும். புவி வெப்பமாதலால் எல் நினோ நிகழ்வுகளும் அதன் தாக்கமும் அதிகரித்துள்ளன.

"லா நினா பொதுவாக உலகளாவிய வெப்பநிலையில் குளிரூட்டும் விளைவைக் கொண்டிருக்கிறது, ஆனால் இந்தக் குளிரூட்டும் விளைவையும் தாண்டி புவியானது பசுங்குடில் வாயுக்களால் அதிகமாக வெப்பப்படுத்தப்படுகிறது. ஆகையால் லா நினா ஏற்பட்ட 2020 பதிவு செய்யப்பட்ட வெப்பமான ஆண்டுகளில் ஒன்றாக இருந்துள்ளது. இதனால் தற்பொழுது ஏற்படும் லா நினா ஆண்டுகள் கடந்த காலத்தின் வலுவான எல் நினோ ஆண்டுகளை விட வெப்பமாக உள்ளன. லா நினா காலத்தில், மத்திய பசிபிக் பெருங்கடலின் கிழக்குப் புவிமையக் கோட்டுப் பகுதியில் கடலின் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பை விட 3 முதல் 5° C (5.4 முதல் 9° F) வரை குறைவாக இருக்கும்.

லா நினாவில் உள்ள லா என்பது ஸ்பானிய மொழியில் பெண்பாலைக் குறிக்கும் சொல். லா நினா என்றால் சிறுமி என்று பொருள். லா நினாவின் போது ஆஸ்திரேலியா, இந்தோனேசியா பகுதியில் அதிக மழை பெய்கிறது. ஈக்வேடார், பெருஆகியதென்அமெரிக்கக்கடற்கரைப்பகுதிகளில் அதிக வறட்சி ஏற்படுகிறது.

இந்தோ-பசி ஃபிக் பகுதியில் காற்றழுத்தத்தில் ஏற்படும் மாறுபாடுகள் தெற்கத்திய அலைவு எனக் குறிப்பிடப்படுகிறது. வழக்கமாக வெப்பமண்டல தென் கிழக்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் உயர் அழுத்தம் நிலவும் போது வெப்பமண்டலக் கிழக்கு இந்தியப் பெருங்கடல் பகுதி குறைந்த அழுத்தத்துடன் காணப்படும். ஆனால் சில ஆண்டுகளில், இந்த வளிமண்டல அழுத்த நிலைகளில் ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்படுகிறது. கிழக்கு இந்தியப் பெருங்கடலுடன் ஒப்பிடுகையில் கிழக்கு பசிபிக் குறைந்த அழுத்தத்தைக் கொண்டுள்ளது. வளிமண்டல அழுத்தத்தில் ஏற்படும் இத்தகைய மாற்றமே தெற்கத்திய அலைவு என அழைக்கப்படுகிறது.

எல் நினோ, லா நினா, வடக்கத்திய அலைவு ஆகியவற்றை ஒன்றிணைத்து என்சோ (ENSO) என அழைக்கப்படுகிறது. எல் நினோ, லா நினா ஆகியவை என்சோ சுழற்சியின் கடல்சார்ந்த நிகழ்வுகளையும், தெற்கத்திய அலைவு அதன் வளிமண்டல மாற்றத்தையும் குறிப்பிடுகின்றன. பசிஃபிக் பெருங்கடல் பகுதிகளில் பருவநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாக என்சோ உள்ளது.

**இந்தியப் பெருங்கடல் இருமுனைவு:**

இந்தியப் பெருங்கடலில் கிழக்கு மேற்குப் பகுதிகளுக்கிடையே காணப்படும் வெப்பநிலை ஏற்றத்தாழ்வு பருவநிலையில் முக்கியத் தாக்கம் செலுத்துகிறது. இது இந்தியப் பெருங்கடல் இருமுனைவு என்று அழைக்கப்படுகிறது. இது இந்திய நினோ என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியப் பெருங்கடலின் மேற்கில் ஆஃபிரிக்காவும், கிழக்கே இந்தோனேசியா, ஆஸ்திரேலியாவும் உள்ளது.

இந்தியப் பெருங்கடல் இருமுனைவு நேர்நிறை, எதிர்மறை ஆகிய இரு நிலைகளைக் கொண்டுள்ளது. இந்தியப் பெருங்கடலில் மேற்குப்பகுதியில் (ஆப்பிரிக்கப் பகுதியில்) கடல்நீரின் வெப்பம் அதிகமாகவும் கிழக்குப் பகுதியில் (இந்தோனேசியா பகுதியில்) கடல்நீரின் வெப்பம் குறைவாகவும் காணப்படுகிறது. இதனால் இந்தியப் பகுதியிலும், கிழக்கு ஆஃப்ரிக்கப் பகுதியிலும் அதிக மழை வெள்ளம் ஏற்படுவதற்கும், அதே நேரத்தில் இந்தோனேசியா பகுதியில் மழை குறைவதற்கும் காரணமாக உள்ளது. இந்தியப் பெருங்கடல் இருமுனைவு எதிர்மறை நிலையில் இந்தியப் பெருங்கடலின் மேற்குப் பகுதியில் உள்ள கடல் நீரின் வெப்பநிலை குறைவாகவும், இந்தியப் பெருங்கடலின் கிழக்குப் பகுதியில் இந்தோனேசியா, ஆஸ்திரேலியா பகுதியில் கடல் நீரின் வெப்பநிலை அதிகமாகவும் காணப்படுகிறது. இதனால் ஆஃபிரிக்காவில் வறட்சி ஏற்படுவதுடன் இந்தியாவின் இயல்பான பருவமழைப் பொழிவையும் பாதிக்கிறது.

இந்தியப் பருவ மழையில் எல் நினோவின் தாக்கத்தை இந்தியப் பெருங்கடல் இரு முனைவால் அதிகமாக்கவும் முடியும், பலவீனப்படுத்தவும் முடியும். எல் நினோ ஏற்படும் போது, இந்தியப் பெருங்கடல் இருமுனைவு நேர்நிறை நிலையில் இருந்தால், எல் நினோ தாக்கத்தையும் கடந்து இந்தியா நல்ல மழையைப் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, எல் நினோ ஏற்பட்ட1983, 1994 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் இந்தியப் பெருங்கடல் இருமுனைவு

நேர்மறைநிலையில் இருந்ததால் இந்தியாவில் இயல்பான அல்லது அதிக மழைப் பொழிவு ஏற்பட வழிவகுத்தது. இதேபோல், 1992 போன்ற ஆண்டுகளில், இந்தியப் பெருங்கடல் இருமுனைவு எதிர்மறை நிலையும், எல் நினோவும் ஒன்றிணைந்து இந்தியாவில் குறைந்த மழைப்பொழிவை ஏற்படுத்தியது.

2007ஆம் ஆண்டில் இந்தியப் பெருங்கடல் இருமுனைவு நேர்நிறைநிலை, லா நினாவுடன் இணைந்து தோன்றியது மிகவும் அரிதான நிகழ்வு ஆகும், அதற்குமுன் 1967இல் ஒரு முறை மட்டுமே அவ்வாறு நிகழ்ந்துள்ளது. புவிவெப்பமாதலால் இந்தியப் பெருங்கடல் இருமுனைவால் ஏற்படும் தீவிர காலநிலை, வானிலை நிகழ்வுகள் எதிர்காலத்தில் அடிக்கடி ஏற்படும் அபாயம் உள்ளது.

**வட அட்லாண்டிக் அலைவு:**

ஐரோப்பாவின் கிரீன்லாந்து, ஐஸ்லாந்து போன்ற வட அட்லாண்டிக் பகுதிகளில் வளிமண்டல அழுத்தம் குறைவாக உள்ளது அதேநேரத்தில் டென்மார்க் போன்ற தென்பகுதிகளில் இதனுடன் ஒப்பிடும் பொழுது வளி மண்டல அழுத்தம் அதிகமாக உள்ளது. இந்த வளிமண்டல அழுத்த ஏற்றத்தாழ்வுகளில் நேர்நிறை, எதிர்மறை என இரு நிலைகள் காணப்படுகின்றன. இந்த இரண்டு பகுதிகளுக்கிடையிலான வளிமண்டல அழுத்த வேறுபாடு அதிகமாக இருக்கும் நிலை நேர்நிறை என்றும், குறைவாக இருக்கும் நிலை எதிர்மறை என்றும் அழைக்கப்படுகிறது. நேர்நிறையாக இருக்கும் போது வட ஐரோப்பியப் பகுதிகளில் அதிக மழைப்பொழிவும், தென்ஐரோப்பியப்பகுதிகளில்குறைந்தமழைப்பொழிவும்ஏற்படுகிறது. எதிர்மறையாக இருக்கும் போது, தென்ஐரோப்பியப் பகுதிகளில் மழைப் பொழிவு அதிகமாகவும், வடஐரோப்பிய பகுதிகளில் மழைப் பொழிவு குறைவாகவும் உள்ளது. என்சோ, இந்தியப் பெருங்கடல் இரு முனைவு, வட அட்லாண்டிக் அலைவு ஆகிய இந்த மூன்று நிகழ்வுகளும் உலகளவில் மழைப் பொழிவிலும் பருவ நிலையிலும் முக்கியத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

புவிவெப்பமாதலால் பருவநிலை மாற்றங்களும், வெள்ளம், வறட்சி போன்ற பேரிடர்களும் அடிக்கடி ஏற்படுவதற்கான ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் உலகளவில் உணவு உற்பத்தியும், நன்னீர் சுழற்சியும் கடுமையாகப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. புவிவெப்பமாதலைக் கட்டுக்குள் வைப்பதன் மூலமே பேரழிவுகளிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும்.

# அச்சுறுத்தப்படும் புவிக்கோளம்

**சமந்தா**

[மார்க்சியப் பொருளியலாளர் ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் 1999இல் வெளியிட்ட VULNERABLE PLANET நூலின் சாரம்]



இயற்கையைப் புறக்கணிக்கும் விதமான மனிதச் சமூகத்தின் தொடர் செயல்பாடுகள், புவியின் சுற்றுச்சூழலால் தாங்கக்கூடிய எல்லைகளைக் கடந்து விட்டன. இதனால் மனிதர்களின் பிழைத்தலும் பிற உயிரினங்களின் இருத்தலும், அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன. ஆனாலும் புவியின் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முன்னிறுத்தப்படும் பரிந்துரைகளும், சர்வதேச ஒப்பந்தங்களும், அதன் திட்டங்களும் போதுமானவையாக இல்லை. மக்கள்தொகையையும், நுகர்வையும் கட்டுப்படுத்துவதன் மூலமும், சூழலுக்குகந்தவையாக அறியப்படும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் சூழலியல் பிரச்சனைகளுக்கும், உயிர்க்கோளம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியுமா என்றால் இயலாது.

புவியில் நாம் எதிர்கொள்ளும் நெருக்கடி இயற்கையாக ஏற்பட்டது அல்ல, உயிரியல் அடிப்படை கொண்டதுமல்ல, அது வரலாற்று அடிப்படையுடன், சமூக உறவால், தொழில்நுட்பக் கட்டமைப்பால் இந்தச் சமூக அமைப்பில் வேரூன்றியுள்ளது என்பதை அங்கீகரிக்க வேண்டும்.

சுற்றுச்சூழல் நெருக்கடியைத் தீர்ப்பதற்கான பெரும்பாலான திட்டங்களில் புறக்கணிக்கப்படுவதும் (அல்லது குறைத்து மதிப்பிடுவதும்) மிக முக்கியமான சவாலாக இருப்பதும் என்னவென்றால், சுற்றுச்சூழல் சீரழிவை ஏற்படுத்தும் இந்தச் சமூகக் கட்டமைப்பை மாற்ற வேண்டுமே தவிர தொழில்நுட்ப அடிப்படையில் மேற்பூச்சை மாற்றுவதன் மூலமே தீர்வுகளைப் பெற முடியாது என்பதே.

நடைமுறையில் உள்ள சமூக உறவுகள் கேள்விக்குள்ளாக்கப்படும் வரை மறுசுழற்சி செய்தல், சூழலுக்குகந்த பசும்பொருட்களை வாங்குதல், சூழலியல் நெருக்கடிகளுக்கு முக்கியக் காரணிகளாக இருக்கும் அரசியல் அமைப்பின் கொள்கையாளர்கள், நிறுவனங்களிடமே கோரிக்கைகளை முன்வைத்தல் போன்ற தனிநபர் பொறுப்பாண்மை அடிப்படையிலான செயல்பாடுகளே சூழலியல் தீர்வுகளுக்கான வாய்ப்புகளாக நம்முன் எஞ்சியிருக்கும்.

சூழலியல் நெருக்கடி சமூக அடிப்படையிலான வேர்களைக் கொண்டிருப்பதால் இயற்கைக்கும் சமூகத்துக்கும் இடையே ஒரு நீடித்த உறவை உருவாக்கும் விதத்தில் வரலாற்று உறவுகளை உலக அளவில் மாற்றியமைப்பதே தீர்வாக அமையும்.
வரலாற்று அடிப்படையில் பார்க்கும் போது இயற்கைக்கும், மனிதனுக்குமான உறவு எப்பொழுதும் ஒரேமாதிரி இருக்கவில்லை, நிறைய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. சமூகங்கள் இயற்கையுடன் நீண்ட காலமாகப் போரில் ஈடுபட்டுள்ளன என்பதையே வரலாறு நமக்குக் கற்பித்துள்ளது. வேண்டிய அளவு வளங்களைக் கறப்பதற்கான மூலமாகவும், குப்பைகளைக் கொட்டுவதற்கான இடமாகவுமே சுற்றுச்சூழல் கருதப்பட்டுள்ளது.

சில நேரங்களில் இயற்கையின் மீது இத்தகைய ஒருதலைப்பட்சமான சுரண்டல் பிராந்திய அளவில் சுற்றுச்சூழல் பேரழிவுகளுக்கு வழிவகுத்தது, அவை முழு நாகரிகங்களின் வீழ்ச்சிக்கு

வழிவகுத்தன - எடுத்துக்காட்டாக சுமேரிய நாகரிகம். உலகளாவிய சூழலுடன் ஒப்புநோக்கும் போது கடந்த சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை மனித சமூகம் மிகச் சிறிய அளவிலே இருந்தது, அதன் தாக்கங்களும் மிகவும் குறைவாகவே இருந்தன.

1400களின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தொடங்கிய முதலாளித்துவ உலக அமைப்பின் தோற்றத்துடன் இந்த நிலை மாறத் தொடங்கியது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு அட்லாண்டிக் முழுவதும் கொலம்பஸின் பயணம், முதலாளித்துவ உலக அமைப்பின் தோற்றத்தால் ஏற்பட்ட வரலாற்று மாற்றத்தின் தொடக்கத்தையும், அதே நேரத்தில் காலனியாதிக்க நாடுகள், காலனி நாடுகள், வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ச்சி குன்றிய நாடுகள் என்ற வரையறையுடன் கூடிய தேசிய அரசுகளின் உலகப் படிநிலைகளின் உருவாக்கத்தையும் குறிக்கிறது.

உலகளாவிய ஐரோப்பியக் காலனியாதிக்கம் “புதிய உலகம்” எனப்படும் அமெரிக்காவில் தொடங்கி ஆசிய, ஆஃப்பிரிக்கக் கண்டங்களுக்கு விரிவடைந்தது. உலகெங்கும் விலைமதிப்பற்ற உலோகங்களான தங்கம், வெள்ளி, விவசாய விளைபொருட்கள், சர்க்கரை, வாசனைப் பொருட்கள், காபி, தேயிலை போன்ற எண்ணற்ற வளங்களை வரம்பற்ற முறையில் சுரண்டுவதன் மூலம் காலனி நாடுகளில் சூழலியல் மாற்றத்தை ஏற்படுத்தியது. புதிய உலகில் கிடைத்த தங்கம், வெள்ளியே ஐரோப்பாவின் ஆற்றலுக்கு மீறிய வாழ்க்கைத் தரநிலைக்கும், சேமிப்பைக் காட்டிலும் அதிகம் முதலீடு செய்வதற்கும் வழிவகுத்ததாக ஃபிரெஞ்சு வரலாற்றறிஞர் ஃபெர்னாண்ட் பிராடெல் எழுதியுள்ளார்.
பதினாறாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை ஐரோப்பியச் சமூகத்தின் தொழில்வணிகப் புரட்சியின் ஒரு முக்கிய ஆற்றலாகக் காலனியாதிக்கத்தின் தோற்றம் இருந்தது. மக்காச் சோளம், உருளைக் கிழங்கு, பல வகையான பீன்ஸ் போன்ற கூடுதல் உணவு ஆதாரங்கள் -- இவை அனைத்தும் அமெரிக்காவில் தோன்றியவை -- ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு ஐரோப்பிய விவசாயத்திலும் பின்னர் உலகளவிலான விவசாயத்திலும் மாற்றம் ஏற்பட்டது. இவை அனைத்தும் முதலாளித்துவ வளர்ச்சியில் அடுத்த பெருங் கட்டமான தொழிற்புரட்சிக்கு வழிவகுக்க உதவியது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஐரோப்பாவில் நிகழ்ந்த தொழிற்புரட்சியின் மூலம் உற்பத்தியின் அளவும், தீவிரமும் அதிகரிப்பதற்கும் விரைவான வளர்ச்சிக்கும் வழிவகுத்ததுடன்

இன்றைய நவீன உலகத்தின் பிரிவினைகளையும் ஏற்படுத்தியது. பொருளாதாரத்திற்கும் இயற்கைக்கும் இடையேயான பிரிவினையையும், மூலதனத்திற்கும் உழைப்புக்கும் இடையேயான பிரிவினையையும், மைய நாடுகள், விளிம்பு நாடுகள் என்ற பிரிவினையையும் ஏற்படுத்தியது.

இத்தகைய வளர்ச்சி புவிக்கோளத்தின் சுற்றுச்சூழலில் ஏற்படுத்திய தாக்கத்தைக் கடந்த நான்கு நூற்றாண்டுகளின் மக்கள்தொகை, எரிஆற்றல், தொழில்மயமாக்கம், நகரமயமாக்கம் ஆகிய நான்கு முக்கியத் துறைகளை ஆய்வதன் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

**மக்கள்தொகை:**

1492இல் கொலம்பஸின் முதல் பயணத்தின் போது அமெரிக்கா 10 கோடி பூர்வகுடி மக்களின் தாயகமாக இருந்தது- 1500இல் ஐரோப்பாவின் மக்கள்தொகை 70 மில்லியனாக இருந்தது. அதிலிருந்து ஒரு நூற்றாண்டிற்குள் அமெரிக்கப் பூர்வக் குடிகளில் 90 விழுக்காட்டினர் ஐரோப்பியர்களின் ஆக்கிரமிப்புப் போரினாலும், கொள்ளை நோயினாலும் அழிந்து போயினர்.

ஐரோப்பியர்கள் உலகின் பெரும் பகுதியை ஆக்கிரமிப்புச் செய்தது. ஐரோப்பிய இன மக்கள்தொகை கணிசமாக அதிகரிக்க ஏதுவானது. ஐரோப்பாவில் பஞ்சம், தொற்றுநோய்த் தாக்கம் ஆகியவை குறைந்து, ஐரோப்பியர்கள் மேம்பட்ட சுகாதார வசதியையும், உணவையும் பெற முடிந்ததால் அங்கே இறப்பு விகிதம் குறைந்தது.
1650இல் உலக மக்கள்தொகையில் ஐரோப்பிய இனத்தவரின் விகிதம் 18 விழுக்காடாக இருந்தது 1900இல் 30 விழுக்காடாக அதிகரித்தது.

பொதுவாகத் தொழில்மயத்திற்கு முந்தைய விவசாயம்சார்ந்த சமூகங்களில் பிறப்புவீதம், இறப்புவீதம் இரண்டுமே அதிகமாகக் காணப்படுகிறது. தொழில்மயத்தால் பொருளாதார வளர்ச்சியடைந்த சமூகங்களில் பிறப்புவிகிதமும், இறப்புவிகிதமும் குறைகிறது.

ஐரோப்பாவில், பொருளாதார வளர்ச்சி மேம்பட்டு செல்வச்செழிப்பு அதிகரித்த போது பிறப்பு விகிதம் குறைந்தது. தொழில்மயத்திற்கு முந்தைய ஐரோப்பியச் சமூகத்தில் அதிகமாக இருந்த

இறப்பு வீதம், பிறப்பு வீதம் இரண்டுமே படிப்படியாகக் குறைந்து மக்கள்தொகை வளர்ச்சியில் மாற்றம் (demographic transition) ஏற்பட்டு குறைந்த பிறப்புவிகிதத்தையும், குறைந்த இறப்புவிகிதத்தையும் கொண்ட சமூகநிலையை அடைந்தது.

தொழில்மயமாக்கத்தின் தொடக்கத்தில், இந்த மாற்றத்தின் முதல் கட்டமாக, இறப்பு விகிதத்தில் சரிவு ஏற்பட்டது என்ற போதும் பிறப்பு விகிதம் குறையாமல் அதிகமாகவே இருந்ததால் மக்கள்தொகை மிகவும் அதிகரித்தது. இரண்டாம் கட்டத்தில்,பொருளாதார வளர்ச்சி பிறப்பு விகிதத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததால் மக்கள்தொகையின் வளர்ச்சிவிகிதம் குறைந்தது. இவ்வாறு வளர்ந்த நாடுகளின் மக்கள்தொகைப திினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் வேகமாக விரிவடைந்து இருபதாம் நூற்றாண்டில் குறைந்துபோனது. செல்வசெழிப்பால் மக்கள்தொகை வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டது, அதன் மூலம் செல்வசெழிப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டது.

இதற்கு நேர்மாறாக, உலகப் பொருளாதாரத்தில் விளிம்பு நிலையில் உள்ள நாடுகள் (மூன்றாம் உலகநாடுகள்) தொழில்மயத்தின் மூலம் மக்கள்தொகை வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும் விதமாக வளர்ந்த நாடுகள் கடைபிடித்த அதே பாதையைப் பின்பற்ற முடியவில்லை. அதற்குப் பதிலாகக் காலனியாதிக்கமும், அதன் கட்டளைக்குட்பட்டு மேம்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரங்களுடன் போட்டியிட வேண்டிய அவசியமும் அந்நாடுகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் இடையூறாக அமைந்தது. விளிம்பு நாடுகளிலிருந்து மைய நாடுகளுக்குத் தொடர்ந்து பொருளாதார உபரிகள் கடத்தப்படுவதால் வளராமையின் வளர்ச்சியே ஏற்பட்டது. இதன் விளைவாக மைய நாடுகளுக்கும், விளிம்பு நாடுகளுக்கும் இடையிலான தனிநபர் வருமானத்தில் ஒரு பெருத்த இடைவெளி ஏற்பட்டது, இரண்டு நூற்றாண்டுகளுக்குள் இந்த இடைவெளி ஏழு மடங்கு அதிகரித்தது.

இறப்பு வீதத்தின் வீழ்ச்சிக்கும், பிறப்பு வீதத்தின் வீழ்ச்சிக்கும் இடையிலான பின்னடைவு விளிம்புநிலை நாடுகளில் நீட்டிக்கப்பட்டது. விளிம்புநிலை நாடுகள் பொருளாதார வளர்ச்சியுடன் மக்கள்தொகை வளர்ச்சியில் மாற்றம் ஏற்படுத்த இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டதால் அவற்றின் மக்கள்தொகை அதிகரிப்பு சூழலியல் பிரச்சனைகள் அதிகரிப்பதற்குக் காரணமானது.

இதனால் மூன்றாம் உலகநாடுகள் "தொழில்மயத்தின்" குறைந்த இறப்பு விகிதத்திற்கும் "விவசாயமயத்தின்" உயர்ந்த பிறப்பு விகிதத்திற்கும் இடையிலான மக்கள்தொகை வலையில் சிக்கின. அதாவது அந்நாடுகளில் இறப்பு விகிதம் குறைந்த போதும், பிறப்பு விகிதம் குறையாததால் மக்கள்தொகை பெரிதும் அதிகரித்தது. அவற்றின் மக்கள்தொகை வளர்ந்த அதே நேரத்தில், அவற்றின் தனிநபர் வருவாய் விகிதம் தேக்கமடைந்து குறைந்தது. இவை இரண்டும் ஒன்றைஒன்று மேலும் வலுப்படுத்தின.

சூழலியலாளர் பாரி காமனர் கருத்தின்படி, ஒருவகையான "மக்கள்தொகை ஒட்டுண்ணித்தனம்" உருவாகியது, இதில் முதலாளித்துவ மையநாடுகளில் "மக்கள்தொகை மாற்றத்தின் இரண்டாவது, சமநிலைக் கட்டம்" வறிய விளிம்பு நாடுகளில் அதே கட்டத்தைத் தடுப்பதன் மூலமே ஏற்படுத்தப்பட்டது." "காலனியாதிக்கம் உலகின் செல்வம், மக்கள்தொகை இரண்டும் பகிரப்படுவதை நிர்ணயித்தது. புவிமையக் கோட்டிற்கு வடக்கே செல்வத்தையும், அதற்குக் கீழே பெரும்பாலான மக்களையும் குவித்தது" என்றுகாமனர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பாவில் சமூக மாற்றத்தால் / தொழிற்புரட்சியால் வாழ்வாதாரம், வேலை இழந்த மக்கள் புதிய உலகம் என அழைக்கப்படும் பகுதிகளான வட அமெரிக்கா, தென் அமெரிகாவிற்கும், ஆஸ்திரேலியாவிற்கும் இடம் பெயர்ந்தனர். காலனிநாடுகளான இந்தியா, சீனா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் எண்ணற்ற மக்கள் வேலைகளையும், வாழ்வாதாரங்களையும் இழந்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்கள் இடம்பெயர்ந்து செல்வதற்குப் புதிய உலகம் எதுவும் இல்லை. இதுவே மூன்றாம் உலக நாடுகளில் மக்கள்தொகைப் பெருக்கம், மக்கள்தொகை அடர்த்தி வளர்ந்த நாடுகளை விட மிகவும் அதிகரித்ததற்கான முக்கிய வரலாற்றுக் காரணமாக உள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் வேலையின்மையும், சேமப் பட்டாளமும் அதிகரித்ததற்கும், மக்கள்தொகை வளர்ச்சியில் மாற்றம் ஏற்படாமல் தடுக்கப்பட்டதற்கும், பொருளாதார வளர்ச்சி தடுக்கப்பட்டதற்கும் மூலகாரணமாக இந்தக் காலனியாதிக்க அமைப்பே இருந்துள்ளது.

அரசியல் பொருளாதாரத்தில் மக்கள்தொகை, வறுமை, சுற்றுச்சூழல் சீரழிவு ஆகியவற்றுக்கு

இடையிலான உறவுகள் குறித்த விவாதத்தில் இரண்டு நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன, ஒன்று தாமஸ் மால்தூஸூடையது. மற்றொன்று கார்ல் மார்க்ஸுடையது.

மால்துஸ் அதிக மக்கள் தொகை, வறுமை, சுற்றுச்சூழலின் சீரழிவு பற்றிய தனது பகுப்பாய்விற்கு உணவு உற்பத்தி, மனித இனத்தின் கருவுறுதலுக்கான "இயற்கை நெறிகளை" அடிப்படையாகக் கொண்டிருந்தார். கார்ல் மார்க்ஸ் இத்தகைய பிரச்சனைகளுக்கு சமூக அடிப்படையே காரணம் என விளக்கினார். மார்க்ஸ் "ஒவ்வொரு குறிப்பிட்ட வரலாற்று உற்பத்தி முறையும் அதற்கே உரித்தான மக்கள்தொகை நெறிகளைக் கொண்டுள்ளது. அவை அந்தக் குறிப்பிட்ட உற்பத்தி அமைப்புக்கு மட்டுமே வரலாற்று வழியில் செல்லுபடியாகும். இனத்தொகை பற்றிய ஒரு உருவிலிச் சட்டம் தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் மட்டுமே இருக்கும், அதுவும் கூட மனிதனின் வரலாற்றுத் தலையீடு இல்லாத நிலையில் மட்டுமே இருக்கும்" என்று வாதிட்டார். "மக்கள்தொகைப் பெருக்கம் என்பது வரலாற்று ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட உறவு, அது எந்த வகையிலும் வாழ்க்கையின் அவசியத் தேவைகளின் உற்பத்தித் திறனின் முழுமையான வரம்பால் தீர்மானிக்கப்படுவதில்லை, ஆனால் குறிப்பிட்ட உற்பத்தி நிலைமைகளாலும், அதனுடன் மனிதர்களின் இனப்பெருக்க நிலைமைகளின் வரம்புகளாலும் நிர்ணயிக்கப்படுகிறது" என்கிறார் மார்க்ஸ்.

இயந்திரமய முதலாளித்துவத்தின் கீழ் மக்கள்தொகையை நிர்வகிக்கும் மிக முக்கிய நெறியாக, ஒப்பீட்டு மிகை மக்கள்தொகை அல்லது வேலையற்றோரின் சேமப்பட்டாளம் உள்ளது என்று மார்க்ஸ் வாதிட்டார். கூலிகள் (அல்லது வரலாற்று ரீதியாக வரையறுக்கப்பட்ட வாழ்வாதார நிலைகள்) மக்கள்தொகைக்கும், உணவுக்கும் இடையிலான உறவால் தீர்மானிக்கப்படுவதில்லை, மக்கள்தொகைக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையேயான உறவே கூலியைத் தீர்மானிக்கிறது. வேலையற்ற பட்டாளத்தின் இருப்பையே முதலாளித்துவம் உழைப்புச் சக்தியை (ஒரு நபரின் வேலை செய்யும் திறன்) ஒரு சரக்கின் நிலைக்கு தாழ்த்துவதற்கான நெம்புகோலாகப் பயன்படுத்துகிறது. ஆனால் ஒப்பீட்டளவு உபரி மக்கள்தொகையின் இந்த நெறி முதலாளித்துவத்தின் அனைத்து நிலைகளுக்கும் பொருந்தாது: இது இயந்திர உற்பத்திமுறையின் ஆதிக்கத்தில்மட்டுமே நடைமுறையில்உள்ளது.

**<u>ஆற்றல்:</u>**

மனித சமூகம் பல தொழில்நுட்பப் புரட்சிகளைக் கண்டுள்ளது. தொழில்நுட்பப் பயன்பாட்டின் அடிப்படையில் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் வெவ்வேறு காலகட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மனித சமூகத்தில் முதலில் ஆற்றல் பயன்பாட்டிற்கு மரப்பொருட்கள், காற்று, நீர் ஆகியவையே பயன்படுத்தப்பட்டன. இக்காலகட்டம் “சூழல் தொழில்நுட்ப கட்டம்” (ecotechnic phase) எனப்படுகிறது. இதற்கடுத்தபடியாக நிலக்கரியும் இரும்பும் பயன்பாட்டிற்கு வந்தன. இக்காலகட்டம் “பழைய தொழில்நுட்பக் கட்டம்” (paleotechnic phase) எனப்படுகிறது. அதன் பிறகு மின்சாரமும் பெட்ரோலியமும் பயன்பாட்டிற்கு வந்த காலகட்டம் புதிய தொழில்நுட்பக் கட்டம் (neotechnic phase) எனப்படுகிறது. உலகளவில் ஆற்றல் நுகர்விலும் மைய நாடுகளுக்கும் விளிம்பு நாடுகளுக்கும் இடையே பெரும் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது. ஒரு சராசரி அமெரிக்கர் மூன்றாம் உலக நாடுகளில் சராசரியாக ஒரு நபர் பயன்படுத்துவதைப் போல் 40 மடங்கு அதிக ஆற்றலைப் பயன்படுத்துகிறார். வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் ஆஃப்ரிக்காவின் சஹாரா பகுதிகளைப் போல் 80 மடங்கு அதிக ஆற்றல் பயன்படுத்தப்படுகிறது.

எரிசக்திப் பயன்பாட்டிலும், உற்பத்தி அமைப்பிலும் ஏற்பட்ட மாற்றத்தால் தொழில்மயமாக்கம் ஏற்பட்டு, முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்தது. தொழிற்புரட்சியின் ஆரம்பக் கட்டத்தில் (1760-1840) பிரிட்டனில் அதிக எண்ணிக்கையில் பருத்தி ஆலைகள் உருவெடுத்தன. அதன் இரண்டாம் கட்டத்திலும் (1840-1875) நீராவி இயந்திரத்தின் பயன்பாட்டிலும், ரயில்வே துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டது. அடுத்த கட்டத்தில்1800களின் பிற்பகுதியில் ஏற்பட்ட அறிவியல்-தொழில்நுட்ப்ப் புரட்சியால் எஃகு, வேதியியல், மின்சாரத் தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றது. அதைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டில் தானியங்கி எந்திரங்களின் தோற்றத்தாலும், இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் பெட்ரோ வேதிப் பொருட்கள், ஜெட் விமானங்கள், கணினிகளின் தோற்றத்தாலும் வளர்ச்சி பெற்றது. உற்பத்தி அமைப்பில் ஏற்பட்ட இத்தகைய மாற்றங்களால் உற்பத்திப் பொருட்களின் அளவிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது. 1750க்கும் 1980க்கும் இடையிலான காலக்கட்டத்தில் உற்பத்திப் பொருட்களின் அளவு 80 மடங்கிற்கு மேலாக அதிகரித்தது.1970களில் இருந்து, உலகப் பொருளாதார வளர்ச்சியின் அளவு குறைந்த போதும் உற்பத்தியானது தொடர்ந்து பெருக்குவிகிதத்தில் விரிவடைகிறது. உலகத் தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 3.3 விழுக்காடாக இருந்த போது உற்பத்திப் பொருட்களின் அளவு

இரு மடங்காவதற்கு 1970 முதல் 1990 வரை என இரண்டு பத்தாண்டுகள் மட்டுமே ஆயின.

இத்தகைய அதிவேக வளர்ச்சியுடன் மைய நாடுகளுக்கும், விளிம்பு நாடுகளுக்கும் இடையிலான விநியோகத்திலான ஏற்றத்தாழ்வுகளும் அதிகரித்தன.

1750இல், தனிநபர் வருமானம் வளர்ந்த மைய நாடுகளிலும், வளர்ச்சி குறைந்த விளிம்பு நாடுகளிலும் கிட்டத்தட்ட சமமாகவே காணப்பட்டது. வளர்ந்த நாடுகளில் தனிநபர் வருமானம் 180 டாலராகவும், வளர்ச்சி குறைந்த நாடுகளில் 180 முதல் 190 டாலர் வரையிலும் காணப்பட்டது. ஆனால் 1930களில், வளர்ந்த நாடுகளில் தனிநபர் வருவாய்780டாலராக உயர்ந்தது, வளர்ச்சி குன்றிய நாடுகளில் தனிநபர் வருமானம் 190 டாலராக 1750 அளவிலேயே இருந்தது. எனவே, முதலாளித்துவத்தின் முழு வளர்ச்சிக் காலத்திலும், மைய நாடுகளுக்கும் விளிம்பு நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி 1750இல் 1:1 ஆக இருந்தது 1930இல் 4:1 ஆகவும் 1980இல் 7: 1 ஆகவும் வளர்ந்தது. உலக உற்பத்தியில் 75 விழுக்காடு உலக மக்கள்தொகையில் 25 விழுக்காட்டினரால் நுகரப்படுகிறது.

**<u>நகரமயமாக்கம்:</u>**

1800க்கு முன் உலகின் மிகப் பெரும்பாலான பகுதிகள் கிராமப்புறங்களாகத்தான் இருந்துள்ளன, மக்கள்தொகையில் 2.5 விழுக்காட்டிற்கு மேல் யாரும் நகரங்களில் வசிக்கவில்லை. பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 10 விழுக்காட்டிற்கு மேல் நகரமயமான முதல் நாடு நெதர்லாந்து. அடுத்தது பிரிட்டன். 1800இல் லண்டன் ஐரோப்பாவின் மிகப் பெரிய நகரமாக 850,000க்கும் அதிகமான மக்கள்தொகையைக் கொண்டிருந்தது. 1985ல் உலக மக்கள் தொகையில் 43 விழுக்காடு நகரமயமாக்கப்பட்டிருந்த்து.

நகரமயமாக்கம் மூன்று நிலைகளில் உள்ளூர் அளவிலும், பிராந்திய அளவிலும், உலக அளவிலும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. உள்ளூர் அளவில், அதிக செங்கல், கான்கிரீட், கண்ணாடி, உலோகத்தின் பயன்பாட்டினால் நிலங்களின் இட அமைப்பில் மாற்றம் ஏற்படுகிறது. வட்டார அளவில் "நகரவெப்பத் தீவு விளைவு" தூண்டப்படுகிறது. சுற்றியுள்ள கிராமப்புறங்களை விட நகர்ப்புறங்கள் குறைந்தபட்சம் 4° F -ஐ விட அதிக வெப்பநிலையைக்

கொண்டுள்ளது. உலகளவில், நகர்ப்புறங்களால் கந்தக உமிழ்வு, கார்பன்-டை-ஆக்சைடு-உமிழ்வு அதிகரிப்பதால் வளிமண்டல சீர்கேட்டிலும், புவி வெப்பமாதலிலும் பங்கு வகிக்கின்றன.

**சுற்றுச்சூழல் சீரழிவின் காரணிகள்:**

சுற்றுச்சூழலியாளர்கள், சுற்றுச்சூழல் சீரழிவுக்கு மிக முக்கியக் காரணிகளைக் கொண்டு சூழலியல் தாக்கத்தை அளவிடுவதற்கான ஒரு சூத்திரத்தை உருவாக்கியுள்ளனர். இது ‘பேட்’ சூத்திரம் (PAT) என்றும் அழைக்கப்படுகிறது.

I = P X A X T

இதில் I - Impact சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறிக்கும்.

P - Population - மக்கள்தொகை

A - Affluence - செல்வச் செழிப்பிற்கான உற்பத்திப் பொருட்களின் அளவு. இதைத் தனிநபரின் மூலதனப் பங்கு என்று வரையறுக்க முடியும்.

T - Technology - தொழில்நுட்பம் - உற்பத்திச் செயல்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் ஒரு அலகுஆற்றலால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு.

சூத்திரத்தை இன்னும் துல்லியமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

சுற்றுச்சூழல் தாக்கம் = மக்கள்தொகை x (ஒரு நபருக்கான மூலதனப் பங்கு x உற்பத்திப் பொருட்களின் அளவு / மூலதனப் பங்கு) x (ஆற்றல் / உற்பத்திப்பொருட்களின் அளவு x சுற்றுச்சூழல் தாக்கம் / ஆற்றல்)

இந்த மூன்று மாறிகளிலும் மேம்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் நேர்நிறையான சூழலியல் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். பொதுவாக மக்கள்தொகையே சுற்றுச்சூழல் தாக்கத்திற்கான முக்கியக் காரணியாகக் கருதப்படுகிறது. ஆனால் இச்சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற இரண்டு காரணிகளான ‘AT’ ஒன்றுசேர்ந்து சமூகப் பொருளாதார நிலையைக் குறிக்கும் ‘AT’ ஏற்படுத்தும் தாக்கம், மக்கள்தொகையால் ஏற்படும் தாக்கத்தைக் காட்டிலும் அதிகமாகவே இருக்கும்.

ஆனால் இந்தச் சூத்திரம் சுற்றுச்சூழல் தாக்கத்திற்கான உடனடிக் காரணிகளைக் குறிப்பிடுகிறதே ஒழிய, அதற்கு அடிப்படையான மூல காரணியைச் சுட்டிக்காட்டவில்லை. அதை அறிய உலகப் பொருளாதார அமைப்பின் மையத்தில் நடைபெறும் மூலதனத் திரட்டலுக்குத் திரும்புவது அவசியம்.

ஒப்பீட்டு மிகை மக்கள்தொகையின் நெறியை முழுமையான முதலாளித்துவத் திரட்டலின் பொதுநெறியாகக் குறிப்பிட்டார் மார்க்ஸ். ஏனெனில் இது ஒரு துருவத்தில் செல்வத்தையும் மறு துருவத்தில் வறுமையையும் குவிப்பதற்கான "நெம்புகோல்" ஆகும். தொழில்துறைப் புரட்சியால் உருவான புதிய நிலைமைகளின் விளைவாக உழைப்பு மட்டுமல்ல, இயற்கையும் பெருமளவில் மூலதனத்திற்கு அடிமைப்படுத்தப்படுவதாக மார்க்ஸ் குறிப்பிட்டார். நகரம், கிராமம் என்ற பிரிவினையின் மூலமும், கிராமப்புறத்திலும் தொழில்துறை நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமும், முதலாளித்துவம் மனித இருப்புக்கான சுற்றுச்சூழல் அடிப்படையைச் சீர்குலைத்ததாக மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

முதலாளித்துவத்திற்கு முந்தைய காலக்கட்டத்தை இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பொற்காலமாகக் கருத முடியுமா? சுமேரியன், சிந்து சமவெளி, கிரேக்கம், ஃபீனீசியன், ரோமன், மாயன் நாகரிகங்கள் அனைத்தும் சுற்றுச்சூழல் காரணிகளால் வீழ்ச்சியடைந்ததாக வரலாற்று மற்றும் தொல்பொருள் ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. தொழிற்புரட்சிக்கு முன்னர் உலக மக்கள்தொகையில் பெரும்பான்மையாக இருந்த விவசாயிகளின் வாழ்நிலை, அதிக குழந்தை இறப்புவீதம், குறைந்த ஆயுட்காலம், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு, பஞ்சம், தொற்றுநோய்களின் அச்சுறுத்தல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் சுற்றுச்சூழல் அடிப்படையில் முதலாளித்துவத்தை அதற்கு முன்பிருந்த காலத்திலிருந்து வேறுபடுத்துவது சுற்றுச்சூழல் சீரழிவோ அல்லது சுற்றுச்சூழல் நெருக்கடிக்கான அச்சுறுத்தலோ அல்ல - இவை இரண்டும் இதற்கு முன்னர் குறைந்தபட்சம் ஒரு பிராந்திய அளவிலாவது இருந்தன - ஆனால் குறிப்பிட்ட இரு பண்புகள் முதலாளித்துவத்திற்கே பிரத்தியேகமானவை. முதலாவதாக, முதலாளித்துவம் புவியையே கைப்பற்றியதால் அதன் அழிவுகரச் செயல்பாடுகள் பிராந்திய அளவிலிருந்து புவிக்கோள அளவிற்கு விரிவடைந்தன. இரண்டாவதாக, இயற்கையின் மீதான சுரண்டல் மேலும் மேலும் உலகமயமாக்கப்பட்டுள்ளது, ஏனென்றால் இயற்கையின் அனைத்துக் கூறுகளும், மனித சமூக வாழ்நிலை என அனைத்துமே லாபத்திற்கான சுற்றோட்ட எல்லைக்குள் கொண்டுவரப்பட்டன.

பிரான்ஸில் மட்டுமே நாடு முழுவதும் பதினாறு பஞ்சங்கள் ஏற்பட்டன. அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டுப் பதினாறாம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை ஏற்பட்ட வர்த்தகப்

புரட்சியின் போது ஐரோப்பாவை வந்தடைந்த புதிய உலகின் விவசாய விளைபொருட்களே ஐரோப்பாவைப் படிப்படியாகப் பஞ்சத்திலிருந்து விடுவித்தன.

**சுற்றுச்சூழல் ஏகாதிபத்தியம்:**

ஐரோப்பிய தாவரவியல் வெப்பமண்டல விவசாயத்தைச் சுரண்டும் வகையில் கட்டமைக்கப்பட்டது என்பதிலிருந்து விளிம்பு நாடுகளின் சூழலியல் எந்த அளவிற்கு மாற்றப்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம். காலனியாதிக்கத்தின் தொடக்கத்திலிருந்து ஐரோப்பியர்கள் சர்க்கரை, காபி, தேநீர், பின்னர் பருத்தி, ஆஃப்ரிக்காவின் சஹாரா பகுதிகளைக் காட்டிலும் குயினைன், ரப்பர் போன்ற வெப்ப மண்டலப் பொருட்களைப் வாங்குவதிலேயே நாட்டம் கொண்டிருந்தனர். விளிம்பு நாடுகளில் நிலப் பயன்பாடு மாற்றப்பட்டு தற்சார்பு விவசாயம் அழிக்கப்பட்டுப் பெருமளவில் மைய நாடுகளுக்குத் தேவையான பணப் பயிர்களை விவசாயம் செய்யும் முறை ஏற்படுத்தப்பட்டது. விளிம்பு நாடுகளில் சுற்றுச்சூழலை மாற்றும் விதமாக அறிமுகம் செய்யப்பட்ட முதல் பணப்பயிர் கரும்பு ஆகும். கரும்பு விவசாயத்திற்கு அடிமைகளே பயன்படுத்தப்பட்டனர். ஆப்பிரிக்கர்கள் கப்பல்களில் அடைக்கப்பட்டு அட்லாண்டிக் கடலின் வழியாக அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அடிமைகளாக விற்கப்பட்டனர். அதனால் அட்லாண்டிக் கடல் ஆஃபிரிக்காவின் வதை முகாம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஏற்றுமதிக்கான விவசாயத்தில் நிலமும் அடிமையாக்கப்பட்டது. பணப்பயிர் முறைக்காக மரங்கள் பெருமளவில் வெட்டப்பட்டதால் மண்ணரிப்பும், வறட்சியும் ஏற்பட்டன. கரும்பு பிரேசிலின் வடகிழக்குப் பகுதியை அழித்தது, வெப்பமண்டலக் காடுகள் சவானாவாக மாற்றப்பட்டதாக உருகுவேயின் எழுத்தாளர் எட்வர்டோ கலேனோ எழுதியுள்ளார். அவ்வாறே கரீபியப் பகுதி முழுவதும் அழிக்கப்பட்டது. கரும்பு என்ற ஒற்றைப் பயிர் சாகுபாடி பல்லுயிர்களையும் தாவர இனங்களையும் அழிக்கும் பலிபீடமாக்கப்பட்டது. கரும்புச் சாகுபடியால், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், கியூபாவிலும் விவசாயமும், சுற்றுச்சூழலும் சீரழிந்தன. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்த ஹைட்டி ஏகாதிபத்திய ஒடுக்குமுறையால் உணவுக்கு இறக்குமதியைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஏற்றுமதி சார்ந்த விவசாய முறைகளும், ஒற்றைப் பயிர் முறையும் பன்மைத்துவத்தை

அழித்துள்ளன. மனிதர்கள் வரலாற்று ரீதியாக 3,000க்கு மேற்பட்ட தாவர வகைகளை உணவுக்காகப் பயிரிட்டுள்ளனர். ஆனால் மனிதர்களுக்குத் தேவையான ஆற்றல் 85-90 விழுக்காடு இன்று பதினைந்து வகைத் தாவரங்களிலிருந்தே பெறப்படுகிறது. இவற்றில் அரிசி, சோளம், கோதுமை மூன்றிலிருந்து மட்டுமே 66 விழுக்காடு ஆற்றல் பெறப்படுகின்றது என்பதன் மூலம் எந்த அளவுக்குப் பன்மைத்துவத்தை இழந்துள்ளோம் என்பதை அறிய முடியும்.

வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் தொழில்மய உற்பத்தியையும்,விளிம்பு நாடுகளில் ஏற்றுமதிக்கான வேளாண் உற்பத்தியையும், மூலப் பொருட்களைப் பிரித்தெடுக்கும் தொழில்களையும் குறித்த சர்வதேச உழைப்புப் பிரிவினை மூன்றாம் உலக நாடுகளின் சுற்றுச்சூழல் விரைவாகச் சீரழிவதற்கு வழிவகுத்தது. பிரேசில், எகிப்து, காம்பியா, கோல்ட் கோஸ்ட், செனகல் ஆகிய நாடுகளில் ஏற்றுமதி விவசாயத்தால் மண்வளம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது, அப்பகுதிகளில் காணப்பட்ட தற்சார்பு விவசாயம் முற்றிலுமாக அழிக்கப்பட்டதால் பஞ்சம், பட்டினியாலும், ஊட்டச்சத்துக் குறைபாட்டாலும், கடுமையாக பாதிக்கப்பட்டன. ஏற்றுமதி சார்ந்த விவசாயம், மூன்றாம் உலக நாடுகளில் பொருளாதாரத் தற்சார்பையும், சுற்றுச்சூழல் சீரழிவையும் ஏற்படுத்தியது.

உலகளவில் சுற்றுச்சூழல் சீரழிவை ஏற்படுத்தி உயிர்க் கோளத்தையே அச்சுறுத்தியுள்ள முதலாளித்துவத்தைச் சீரமைக்க முடியுமா? சுற்றுச்சூழலியர்களின் கோரிக்கைகளுக்கிணங்கி வளங்குன்றா வளர்ச்சியை ஏற்படுத்தும் விதமாக முதலாளித்துவத்தை மறுசீரமைக்க முடியுமா?. முடியாது என்றால் எப்படித்தான் தீர்வைப் பெற முடியும்? இயற்கையையும், மனித வாழ்நிலைகளையும் மேலும் மேலும் தனியார்மயமாக்குவதன் மூலம் சூழலியல் தீர்வை ஒருபோதும் பெற முடியாது. வருங்கால சந்ததியினரின் மீதும், பல்லுயிர்கள் மீதும் அக்கறையோடு இயற்கை வளங்களையும், உற்பத்தியையும் பொதுமயமாக்கி, ஜனநாயகப்படுத்துவதன் மூலமே சரியான தீர்வைப் பெற முடியும்.

உலக அளவில் உற்பத்தி, விநியோகம், தொழில்நுட்பம், வளர்ச்சி ஆகியவற்றிலுள்ள மூலப் பிரச்சனைகளை முன்னெடுப்பதன் மூலமே புவியின், சுற்றுச்சூழலின் விரைவான அழிவிற்குத் தீர்வு காணும் திறனுள்ள சுற்றுச்சூழல் இயக்கத்தைக் கட்டமைக்க முடியும்.